# TAMIL LITERARY ESSAYS

K. BALASUNDARA MUDALIAR

6529

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

# தமிழ் இலக்கியக் கட்டுரை

THE MADURA TAMIL SANGAM

கு. பாலசுந்தர முதலியார்

# தமிழ் இலக்கியக் கட்டுரை

ஆசிரியர்
கு. பாலசுந்தர முதலியார்

பால ரங்கம்
23, முத்தியால் நாயக்கன் தெரு, புரசை, சென்னை
*1946*

பதிப்புரிமை]

[விலை ரூ. 2

# தந்துரை

தொன்மைச் சிறப்பு வாய்ந்த நந்தமிழ் மொழியில் உள்ள இலக்கிய நூற்கள் எண்ணிறந்தன. அவை யாவும் பாட்டுருவைத் தாங்கி, மதிப்பிடற்கரிய மணிகளைத் தம்மகத்தே கொண்டு விளங்கு கின்றன.

பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே தமிழகத்தில் நூற்கள் பாட்டுருவைத் தாங்கின. பாட்டெனப் படுவதொன்று, உரை நடைக்குப் பிற்பட்ட தென்பது, மொழி ஆராய்ச்சி வல்லுனர் கொண்டதோர் முடிபாகும். இம்முடிபினைக் கொண்டு பண்டைத் தமிழ்ப் பனுவல்களை ஆராய்வுழி, அதற்கோர் ஆதாரத்தைக் காண்டல் அரிதாகின்றது. தொல் காப்பியர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலும் உரை நடை நூலென்ப தொன்று இருந்ததாகத் தோன்றவில்லை. சங்கமரீஇய காலத்திற்குப் பின்னரே, உரை நடை நூற்கள் தோன்றின வென்பது விளங்குகின்றது. அங்ஙனம் தோன்றியவை, தனி நூல் வடிவினைக் கொண்டில. அவை, களவியலுரையும், அடியார்க்கு நல்லார் எழுதிய சிலப்பதிகரா வுரையும், பரிமேலழகர் திருக்குறளுரையும், பாரதம் பாடிய பெருந் தேவனார் செய்யுளிடை யிட்ட உரை நடையும், நச்சினார்க் கினியர் உரைகளும், அவை போன்றன பிறவுமே யாம்.

நூல் வடிவில் தோன்றிய உரை நடைகள், மிக்க சமீப காலத் தில் தோன்றியன வாகும். இக்காலத்தில் உரை நடை நூற்கள் என்று நாம் சுட்டிக் காட்டுவன வெல்லாம், திரு. ஆறுமுக நாவலர் எழுதிய வசனங்களும், தி. செல்வ கேசவராய முதலியார், M.A. அவர்கள் கட்டுரைகளும்; வீ. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், B.A. அவர்கள் உரை நடை நூற்கள் முதலியனவு மாம்.

தமிழில் பரந்துபட்ட செய்யுள் நூற் றொகுதியோடு உரை நடை நூற் றொகுதியை ஒப்பிடு வோமாயின், யானைக்கும் எறும்புக்கு முள்ள தொரு வேறுபாடு விளக்கமுறும்.

அரிய கருத்துக்களைச் செய்யுளில் அமைத்துப் புலமை வாய்ந்தவரே உணர்ந்து இன்புறச் செய்வதைப் பார்க்கிலும், அக்

கருத்துக்களைச் சிறந்த உரை நடையிலிட்டுப் பொதுமக்கள் அனைவரும் அறிந்து, பயனுறச் செய்தல் மாண்புடையதாகும்.

ஆங்கிலத்தில் உரை நடை நூற்கள் எண்ணிறந்தன. அவை நாளுக்கு நாள், பெருகிக் கொண்டே போதல், அம்மொழியின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிவதாகும்.

தமிழ்மொழி இருந்த நிலையிலேயே இருப்பதற்குப் போதிய உரை நடை நூற்கள் இல்லாமையே காரணமாகும். இங்ஙனம், உரை நடைநூற்கள் சுருங்கி யுள்ளமை, தமிழ் மொழிக்கு ஒரு பெருங் குறை யென்று கூறுதல் அமைதலுறும். இக்குறை யுணர்ந்த தற்கால அறிஞர் சிலர், அரிய கட்டுரைகள் பல எழுதித் தமிழன்னைக்கு ஆக்கத்தைத் தேடிவருதல், மனத்திற்குப் பெரு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. இஃதே இந்நாளில் தமிழன்னைக்குத் தமிழர் இறுக்கும் கைம்மாறு.

ஆங்கிலத்திற்குச் சற்றேனும் தாழாத தண்டமிழ் மொழியில் உரை நடைநூற்களைப் பெருக்கவேண்டு மெனும் ஆசை பற்றியே, யான், இச்சிறு நூலை ஆக்கச் சமைந்தேன். இந்நூலின்கண், பிரான்ஸ், இதலி, ஆங்கிலம் முதலிய மேனாட்டறிஞரின் விழுமிய கருத்துக்கள் பலவற்றைத் தமிழுலகத்திற்குப் பெரிதும் பயன் தருமாறு, ஆங்காங்கு அமைத்துத் தமிழர் கருத்துக்களோடு ஒருதலை ஒற்றுமை படுத்தியுள்ளேன்.

இச் சிறுநூலின்கண் அடங்கியுள்ள கட்டுரைகள் அனைத்தையும் கல்விச் சம்பந்தமாகவே அமைத்துள்ளேன். ஆகையால், இந்நூல் கல்லூரி மாணவர், மணவிகளுக்குப் பெரிதும் பயன்படும் என்பது எனது நோக்கம்.

ஆக்கியோன்

# உள்ளுறை


| | | | | |
|---|---|---|---|---|
| நூலாசிரியர் | ... | ... | ... | 1 |
| நூல் நடை | ... | ... | ... | 19 |
| இலக்கியக் கல்வி | ... | ... | ... | 30 |
| சொல்வன்மை | ... | ... | ... | 38 |
| கவியும் கற்பனையும் | ... | ... | ... | 51 |
| கல்விப் பெருக்கம் | ... | ... | ... | 80 |
| கல்வியும் ஒழுக்கமும் | ... | ... | ... | 97 |
| இறை வழிபாடு | ... | ... | ... | 112 |

## நூலாசிரியர்

உலகில் அறியாமை யென்னும் நோயால் விழுங்கப் பட்ட மக்களுக்குச் சிறந்த மருந்தாவது அறிவு நிரம்பிய நூலே யாகும். இந்நோய் மக்களை விட்டு நீங்காத வரை அவர் உலக இயல்பினை உணர்தல் அரிது; உலக இயல்பினை உணராத போது அவர்க்கு உலகில் துன்பமே யன்றி இன்ப மில்லை. இருட்டகம் புக்க ஒருவனே போல், அவர் இடர்ப் பட்டு நிற்பர்.

அறிவு நூல், மக்களுக்கு உலக இயல்பினைச் செவ்விதின் விளக்கி அவர்களை இன்புறச் செய்யும். இதற்கு மாறான தீய நூற்களும் உலகில் உண்டு. அவை, கள்ளுண்டு வெறி கொண்ட குரங் கொன்றைப் பேயும் பிடித் தலைப்பதே போல், அறியாமையால் நலிவுற்ற மக்களைப் பாழ் படுத்தும் என்பது ஒருதலை. இவ் விருவகை நூலாசிரியரின் இயல்பு களை ஈண்டு நாம் ஆராய்தலே நமது கடமை யாகும்.

முதன்மையாக, ஆசிரியர் இருவகைப் படுவர். ஒரு சாரார், தாம் கொண்டுள்ள கருத்துக்களின் பொருட்டு எழுதுபவர்; மற்றொரு சாரார் எழுதுவதின் நிமித்தம் எழுதுபவர். முன்னவர், தம் அனுபவத்தால் பிறந்த கருத்துக்களை மக்களுக்கு அறிவிக்க எண்ணுபவர். பின்னவர், கருத்தொன்று மின்றிக் குறவன் கூடை முடைதல் போல் சொற்களை ஒன்றுபட முடைபவர். இவர் எழுதியவற்றை ஆராயின், அவை, அரை குறையான உண்மைகளைக் கொண்டன வாயும், முரண் படுந் திறத்தனவாயும், படிப்போர் சிந்தை யில் ஐயத்தைப் பெரிதும் விளைப்பனவாயும் அமைந்

இரு வகை ஆசிரியர்

திருத்தலைக் காணலாம். இத்தகைய ஆசிரியரால் எழுதப் பட்ட நூற்கள் தொடக்கத்தினின்று இறுதி வரை, தெளி வற்றிருக்கும் தன்மையவாகும்.

ஒரு நூல் தெளிவற்றிருக்குந் தன்மையைக் கொண்டே, அந் நூலாசிரியர் வட்டினை நிரப்புதற்கே எழுதியவர், என்பதை நாம் எளிதில் அறிதல் கூடும். வட்டினை நிரப்பு தற்கு எழுதுபவர், எங்ஙனம் ஆசிரியராக மதிக்கப்படுவர்? சிற்சில சமயங்களில் சிறந்த ஆசிரியரும் இங்ஙனம் செய்யத் தலைப் படுகின்றனர். அவர் இயல்பினை நாம் அறிந்ததும், அவர் நூல், படித்தற்குரிய தன்றெனச் விலக்குதல் வேண் டும். இல்லையேல் நம்மருங் காலம் வீணே அழிதலுறும்.

ஒரு நாட்டின் இலக்கியம் அழிந்து படுதற்கு அடிப் படையான காரணங்கள், ஆசிரியர், பணத்திற்காக நூல் எழுதச் சமைதலும், நூலின் பதிப்புரிமை யைத் தமக்கெனக் கொள்ளுதலு மாம். இவ் விருவகைப் புல்லிய நோக்கங்கள், ஆசிரியர் இதயத்தை விட்டு அகலாத வரை சிறந்த நூற்கள் உலகில் தோன்றுதல் அரிது. ஆசிரியர், உண்மையில் தாம் கொண்ட கருத்துக்களை வெளியிட வேண்டி எழுத விரும்பு வராயின், அவர் நூல் படித்தற் குரியதாய்ச் சிறந்து விளங்கும். இத்தகைய நூற்கள் உலகில் சிலவே காணக் கிடக்கின்றன.

ஊதியம் கருதா உத்தம ஆசிரியர்

ஒரு நாட்டின் கல்வித் துறை ஒவ் வொன்றிலும் நூற்கள் சிலவே தோன்றினும், அவை மிகச் சிறந்தனவாய் விளங்குமாயின், அந் நாட்டின் மக்கள் அவற்றால் பெரும் பயன் பெறுவர்.

பண்டைக் காலத்தில் புலத் துறை முற்றிய நலத்தகு பெரியார், ஊதியம் ஒன்றையுங் கருதாது எழுதினமையால், அவருடைய நூற்கள், மக்களால் இன்றும் பொன்னே போல் போற்றப்படுகின்றன. அந்நாளில் பணத்தைப் பொருட்படுத்தாத ஆசிரியர் பலராவர்.

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரை அகளங்க சோழ மன்னன், இராமாயணம் பாடும்படிக் கேட்டுக் கொள்ள அதற் கிணங்கிக் கம்பர் இராமாயணம் பாடினார் என்பர் சிலர். இஃதொரு புனைந்துரை யென்று ஆராய்ச்சியாள ரால் வெறுக்கப்படுவதாகும். கம்பர் தமது நூலின் தொடக்கத்தில்,

கம்பர் இராமாயணம் பாடினதற்குக் காரணம்

"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
* பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
† காசில் கொற்றத் திராமன் கதையரோ"

என்று கூறிய கவியால், தாம் இராம சரிதத்தில் வைத்திருந்த பெரிய தோர் ஆசை காரணமாய் இராமாயணம் பாடினதாக அறிவித்திருக்க, அக்கவிஞர், அகளங்க மன்னவன் கேட்கப் பாடினார் என்பார் கூற்று எங்ஙனம் பொருத்த முடையதாகும்?

தமிழ் மறையாகிய திருக்குறளாசிரியர் பணத்தை முன்னிட்டோ, ஒருவர் கேட்க அதற்கிணங்கியோ திருக் குறளை எழுதினார் என்பதை எவரும் சொல்ல நாம் கேட்டிலம். திருவள்ளுவர், உலக இயல்பினைச் செவ்விதின் உணர்ந்தார்; அங்ஙனம் உணர்ந்ததன் பயனாகப் பல உயரிய கருத்துக்கள் அவருள்ளத்தே உதித்தன; அவ்விதம் உதித்த கருத்துக்களை அவர், தமது சிந்தனையால் ஒழுங்கு பெறச் செய்து, நாமெல்லோரும் உவந்திட நமக்கு உதவினார்.

திருக் குறளாசிரியர்

நாம் உதாரணமாக எடுத்துக் கொண்ட இவ்விரு பெரும் புலவரும் பணத்தைக் கருதித் தம் நூலை எழுதினா ரல்லர்; பதிப் புரிமையைத் தமக் கெனக் கொண்டாரலர்.

* பூனை † காசு—குற்றம்

இதனாலன்றோ இவருடைய நூற்கள் அறிஞரால் மீண்டும் மீண்டும் படித்தற் குரியனவாய்ச் சிறந்து விளங்குகின்றன.

இக்கால நிலை, அறிஞர் மிகவும் வருந்துதற் குரிய தாகும். பணம் வேண்டுபவர் எல்லோரும் நூல் எழுதுவ தற்குத் தலைப்படுகின்றனர். அவர் எழுதுகோலைக் கைபில் பிடித்ததும் தமது எண்ணத்தில் ஆசிரியராகிவிடுகின்றனர். 'சட்டியில் இருந்தாலன்றிச் சட்டுவத்தில் வாராது' எனும் பழமொழிக் கிணங்க, அவருக்குக் கருத்துக்கள் ஆற்றொழுக்குப் போல் வருவ தில்லை. அதனால், அவர் மரம் போல் நிலைத்துவிடுகின் றனர். எழுதுகோலும் நின்ற நிலையிலேயே நிலைத்து விடுகின்றது. அவர் என் செய்வார்! பாவம்!

இக்கால ஆசிரியர்

பணத்தை முன்னிட்டு எழுதுவார் கதி யிஃதே. கருத் துக்கள் இல்லாமையால் ஒன்றும் எழுத இயலாமல் திகைக் குமிவர், பணத்தின் மீது வைத்துள்ள பரிவால் மீண்டும் விடாமுயற்சி மேற்கொண்டு ஏதோ சில அரை குறை யான கருத்துக்களைக் கூட்டி ஏட்டினை நிறைத்துவிடு கின்றனர். இவருடைய நூற்கள் மக்களுக்கு எங்ஙனம் பயனைத் தரவல்லன? இந்நாளில் இத்தகைய பயனற்ற நூற்கள் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. இவை, நாளுக்கு நாள் குப்பை குப்பையாய்க் குவிகின்றன. இக்குப்பைகளின் மூலமாய்ப் பூரிய ஆசிரியர் பலர், சாதாரண மக்களை வஞ்சித்து வாழ்கின்றனர். இத்தகைய ஆசிரியரால் ஒரு நாட்டின் மொழி பாழ் படுதல் திண்ணம்.

இன்னும் இவரை யன்றி ஆசிரியர் மூவகையினர் உளர். எழுதுவதன் முன்பு சிந்திக்காதவர் ஒரு வகையினர். இவர் தமது ஞாபகத்தி லிருப்பனவற் றைப் பிறர் நூல் கருத்துக்களோடு கூட்டி எழுதுபவர். இவ்வகுப்பினர் தொகை உலகில் அதிகம். எழுதும் போது சிந்திப்பவர் இரண்டாம் வகுப் பினைச் சார்ந்தவர். இவர் எழுதுவதின் நிமித்தம் சிந்திப்

மூவகை ஆசிரியர்

பவர். இவர் தொகையும் உலகில் அதிகமாகவே காணப் படும். எழுதுவதற்கு முன்பு நன்கு சிந்திப்பவர், மூன்றும் வ்குப்பினைச் சேர்ந்தவர். இவர் தொகை உலகில் மிகக் குறை வாகும்.

முதல் இரு வகுப்பினைச் சார்ந்த ஆசிரியர், குறி யொன்று மில்லாத வேடுவரை யொப்பர். இத்தகைய வேட்டுவர், தமது வேட்டையால் யாதொரு பயனையும் பெறுர். இறுதி யாகச் சொல்லப்பட்ட அவ்வருகிய வகுப்பினரால் எழுதப்பட்ட நூற்களே உலகில் சிறந்த வேட்டைப் பொருள்களாம்.

ஆசிரியரும் வேடரும்

காட்டில், வேடர் விலங்குகளை வேட்டை யாடுவதற்குப் பலவித உபாயங்களை அறிந்திருத்தல் வேண்டும். அவர், அவ்வுபாயங்களைக் கொண்டு வேட்டை யாடினலன்றி, வேட்டையால் பலனைப் பெறுதல் அரிதாகும்.

சிறந்த வேடுவர், முன்னரே கண்ணி வைத்து விலங்கு களை ஓரிடத்துச் சிறைப் படுத்திக்கொண்டு, பின்னர், சிறை யகப்பட்ட விலங்குகளைக் கண்ணியினின்றும் விலக்கி விடுவர். அதன் பிறகு அவர் அவற்றை யெய்தலைத் தவிர்த்து வேறொன்றும் செய்ய வேண்டுவதின்று. இது போன்றே, மூன்றுமவராகச் சொல்லப்பட்ட ஆசிரியரும் தம் கருத்துக் களாகிய விலங்குகளைத் தமது சிந்தனை யென்னும் கண்ணி யால் முன்னர்ப் பிணித்து மனச் சிறைப்படுத்துவர். பின்னர் அக்கருத்துக்களைச் சிறை நீக்கி வேடர், விலங்குகளை அம் பினல் ஒருரேலென எய்தலைப் போல், இவரும் தம் எழுது கோலாகிய கருவியால் விரைவில் வெளிப் படுத்துவர். இஃதே உண்மையில் பயன் கொண்ட வேட்டையாகும்.

எழுதுவதன் முன்பு நன்கு சிந்திக்கும் ஆசிரியர் தொகை மிகக் குறை வென்றேம். எழுதும் நூற்பொருளைப் பற்றிச் சிந்திக்கும் ஆசிரியர் தொகை உலகில் அதனினும் குறை வாகும். இவர்களே மிகச் சிறந்த ஆசிரியர் என அறிஞ

ரால் போற்றப்படுவர். ஏனையோர் பெரும்பாலும் தம் நூற் பொருளைக் கொண்ட பிறர் நூலையே சிந்திப்பவ ராவர். இவர் சிந்திப் பதற்குப் பிறர் நூல் கருத்துக்கள் இவ

பிறர் நூல் வயப் படல்

ரைத் தூண்டுதல் வேண்டும்; தூண்டவே, அக்கருத்துக் கள், இவர் நூற் கருத்துக்க ளாகின்றன. பிறர் நூற் கருத்துக்களின் வயமாகும் இவர், புதிதாக யாதொன்றையும் தம் நூலுள் புகுத்துவா ரல்லர். சிறந்த ஆசிரியரோ, அங்ஙன மின்றித் தம் முள்ளத் துதிக்கும் கருத்துக்களால் தூண்டப்பெற்றவராய், அக்கருத்துக்களையே தாம் எழுது வதன் முன்பு நன்கு சிந்திப்பர். இவரே உலகில் என்றும் அழியாச் சிறந்த நூலினை வழங்குதற் குரியர்.

பணத்தை முன்னிட்டு நூல் எழுதுவோரும், தேச சரித்திரம் எழுதும் சாதாரண எழுத்தாளரும், பல்வகைப் பொருளை அகராதி போலத் திரட்டித் தருபவரும் ஆசிரியராகார். இவர், பிறர் கருத்துக்களையே தம் நூலுள் பெரிதும்

படித்தற் காகா நூற்கள்

பெய்பவராவர். அக்கருத்துக்கள் யாவும், இவர்தம் சிந்தை யில் இருந்த போது செவ்விதின் சிந்திக்கப் பெறுதனவாய், இவர் எழுதும் போது இவருடைய விரல்கள் வழியே மெல்ல இறங்கி விடுகின்றன. இவ்வெழுத்தாளர் தம் நூலுள் கூறப்பட்டவை அனைத்தையும் தாமே அறிந்திருப் பராயின், எத்துணைப் பேரறிவு வாய்ந்தவ ராவர்.

பிறர் கருத்துக்களைப் பெரிதுங் கொண்ட ஒரு நூல், தெளிவினைப் பெறுதல் மிக அரிதாகும். அதனைப் படிப் போர், தம் மூளையை எவ்வளவு முறுக்கினும் நூலின் கருத்துக்களை அறியாதவராவர். இதன் காரணம் ஆசிரியர் நன்கு சிந்தித் தெழுதாமையே யாகும். இஃதன்றியும் இவ் வாசிரியர், பிறர் நூலின் கருத்துக்களை அப்படியே பெயர்த் தெழுதி யிருக்கலாம். தாம் பெயர்த் தெழுதிய அக் கருத்துக்களும் மற்றொரு நூலினின்றும் பெயர்த் தெழுதப்

பட்டனவாக இருக்கலாம். இங்ஙனம் அவை, பல தலை முறைகளாக வடி. கட்டப்பெற்று, இறுதியில் சுவை யற்று நமக்குக் கிடைக்கின்றன. இத்தகைய கருத்துக்களைப் படிப்போர் எளிதின் உணர்ந்து இன்புறுதல் இயலுமோ? இத்தகைய கருத்துக்களைக் கொண்ட நூற்கள், மக்கள் ஓது தற்குரியன வென்று அறிஞரால் கருதப்படுமோ?

பல்வகைப் பொருள்களை அகராதி போல் தெரிவிக்கும் நூற்களும் மக்கள் ஓதுதற்குரியன வாகா. ஆனால் நாம் அவைகளை அறவே விலக்குதலுங் கூடாது. ஏன் எனின், ஒரு சிறிய நூலில் பல நூற்றாண்டுகளின் செய்திகள் யாவும் அமைந் திருக்குமாயின் அது, சில சமயங்களில் மிகவும் முக்கியமாகவும் இருக்க நேரும். ஆனால், இத்தகைய நூற்களை, மக்கள் ஓதுதல் இன்றியமையா திருந்தாலன்றிப் பயிலுதல் கூடாது.

மனிதன், ஆதியில் நாகரிக மற்று இலைகளையும் தோல் களையும் ஆடையாக அணிந்து மரத்திலுங் குகையிலும் வசித்துப் பின்னர், நாளுக்கு நாள், அறிவு முதிரப் பெற்றவனாய், நாகரிகம் இன்ன தெனத் தெரிந்து வாழலானான் எனும் மனித தத்துவக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டு சிலர், பழைய நூற்களைப் புறக் கணித்துப் புதியனவாகத் தோன்றும் நூற்களையே பெரிதும் விரும்பிப் பேணுவர்; மானிட அறிவு நாளுக்கு நாள் வளர்ந்து செல்லும் பெற்றியதென்பது அவர்தம் கொள்கை; அறிவின் வளர்ச்சியால் சமீப காலத்தில் எழுதப்பட்ட நூற்களின் கருத்துக்கள் பண்டைய நூற்களின் கருத்துக் களைக் காட்டிலும் பன் மடங்கு சிறந்தனவென்பது அவர்தம் எண்ணம். இஃதொரு தவறான கொள்கையாகும். எங் ஙனமெனின், மக்கள் நாகரிக மற்று விலங்குகளைப் போல் குகைகளில் வாழ்ந்த நாளில், நூற்கள் உலகில் இருந்திருக்க நியாயமில்லை. அவர்கள் சிறந்த நாகரிக முற்று வாழ்ந்த

மனித அறிவு தேய்கின்றதோ வளர்கின்றதோ!

நாளில்தான் அவை தோன்றின வாதல் கூடும். ஆகையால், பண்டைப் பனுவல்களை எவரே சிறந்த கருத்துக்கள் வாய்ந்தன அல்ல வென்று கூறத் துணிவர்? பழைய நூற்களையும் இக்காலத்து நூற்களையும் கல்வியாளர் சமன் செய்து சீர் தூக்குவரேல், இக்காலத்து நூற்கள் எத்துணைப் பொருள் கனமற்றன வென்பது அறிதல் கூடும். பண்டைக் காலத்து ஆசிரியரின் அறிவு, தற்கால ஆசிரியரின் அறிவைக் காட்டிலும் பன்மடங்கு சிறந்ததென்று கூறல் பொருந்தும். ஆகையால், மனிதன், நாளுக்கு நாள், அறிவு வளர்ச்சி யற்றுத் தேய்ந்து செல்கின்றான் என்று கூறுதற்கும் இடனுண்டு.

ஆங்கில மேனாடு அறிவால் சூல் கொண்டதே போல் தோன்றினும் இன்னும் மற்றொரு *செகப்பிரியரை ஈன்ற பாடில்லை; கலை நலம் வாய்ந்த தென்னிந்திய நாடும், கவிக் கரசாம் பிரிதொரு கம்பனைக் கண்ட பாடில்லை; வட இந்தியாவும் வையகம் உவக்கும் வேறொரு காளிதாசனை வழங்கிய தில்லை. இதனால் நம் முன்னோர், நம்மைக் காட்டிலும் அறிவின் வளப்பம் வாய்ந்தவர் என்பது விளக்கமுறும்.

இதன் துணை கொண்டு சமீப காலத்தில் தோன்றிய ஆசிரியரும் நம்முடைய காலத்து விளங்கும் ஆசிரியரும் அறிவின் வளப்பம் அற்றவர் என நாம் நினைத்து அவருடைய நூற்களைப் புறக்கணித்தல் கூடாது. ஆனால் எழுத்தாளர் அவர் நூற்களையே தாம் எழுதுவதற்குப் பெரிதும் ஆதாரமாகக் கொள்ளுதல் தீதாகும்.

**நவீன நூற்கள்**

இக்காலத்து நூலாசிரியர் சிலர், தாம் எழுதுவதற்குப் பண்டைக் காலத்து நூற்களையே பெரிதும் ஆதாரமாகக் கொளினும், அவற்றைப் பயன் படுத்தும் விதத்தை ஒரு சிறிதும் அறிந்திலர். அவர்கள் முன்னோர் நூலினை நன்கு பயிலாமையால், அந்நூற் கருத்துக்களின் உண்மையை உணராதவ ராகின்றனர். ஆகையால், முன்னோர் கருத்துக்களை அவர் தம் நூலுள்

* Shakespeare

பாழ் படுத்திச் சிதைக்கின்றனர். முன்னோர் நூற்களை அவர் மேலெழுந்த வாரியாகப் பயில்வதால், அந்நூற்களுள் அவர் காண்பன, ஆழமற்ற கருத்துக்களும் திறனற்ற பாகங்களு மேயாகும். அவ்வரிய நூற்களின் விழுமிய பொருள்களும், உள்ளுறை நுட்பங்களும், படிப்போரைப் பரவசப் படுத்தும் நல்லெழில் நயங்களும் அவர்தம் கட்டை மதிக்கு எட்டுவன வல்ல. இத்தகைய நவீன ஆசிரியர், பல நூற்களினின்றும் பல்வகைப் பொருளைத் திரட்டி, அவற்றுடன் தம் ஆசிரியர் பால் கற்றனவற்றையுங் கூட்டிப் புதிதாகத் தம் நூலினை வெளிப்படுத்துவர். இத்தகைய நவீன நூற்கள் இக்காலத் துப் பல வெளி வந்துள்ளன. அவை, மிக்க ஆரவாரத் தன் மையைக் கொண்டனவா யுள்ளன. நூல், நாற்பது தாள்கள் கொண்டதாக இருக்கும். அந் நூலாசிரியர் திறமையை வியந்து, அவர் நண்பர் அந்நூல் தாள்களின் காற்பங் களவு ஒரு நீளமான முகவுரை வரைவர். முகவுரையால் சிறப் பெய்திய அந்நூலாசிரியர், புதிதாக ஒரு நூலைத் தாம் செய்து விட்டதாகத் தம்மைத் தாமே பெரிதும் மதித்துத் தலை தடுமாறுவர். உண்மையில், ஒரு நூல் சிறந்ததாயின் அதற்கு மற்றொருவரின் முகவுரை வேண்டுவ தின்று; அதி லும் நூலின் காற்பங்களவு முகவுரை எதற்கு? அறிஞர் அந்நூலின் முகவுரையைப் படித்து நூலுள் புகுவரேல், அங்கு அவர் புதிதாகக் காண்பது ஒன்றுமிராது. இத் தகைய நவீன நூலின் ஆசிரியர், பிறர் கருத்துக்களைத் தம் நூலுள் பெய்தது முக்காற் பங்கு; பிறர் கருத்துக்களைச் சிதைத்துச் சிதை வுண்ட அவற்றுடன் தம் கருத்துக்களைக் கூட்டி யுரைத்தது அரைக்காற் பங்கு; தாமாகவே உரைத் தது மற்றொரு அரைக்காற் பங்காம். அவ் வரைக்காற் பங் கும், முரண்படுந் தன்மையாகவும், பயில்வோர் சிந்தையில் ஐயத்தைப் பெரிதுங் கிளப்பிவிடுவதாயும் இருக்கக் காண லாம். இக்காலத்து நவீனமாகத் தோன்றும் நூற்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது, இத்தகைய இயல் பினைக் கொண்டனவே யாகும்.

இக்காலத்து மொழிபெயர்ப் பாளருள் பெரும்பான்மை யோர் மேற்கூறிய வகுப்பினரைச் சேர்ந்தவரே யாவர்.

**மொழி பெயர்ப்பாளர்**

அவர் முன்னோர் நூலின் மொழிப் பொருளை நன்கு தேராதவராய், அவற்றைத் திருத்தியும் மாற்றியும் எழுதத் தலைப்படுகின்றனர். அங்ஙனம் செய்பவர், ஆசிரியத் தன்மைக்குச் சிறிதும் அருகராகார். அவர் கூடுமானால், பிறர் மொழி பெயர்ப்பதற்குரிய நூற்களை எழுதுதல் நேர்மையாகும். அதை விடுத்து முன்னோர் மொழிந்தனவற்றைத் தமது விருப்பம் போல் திருத்தியும் மாற்றியும் பாழ் படுத்துவராயின், அவர் உலகில் எங்ஙனம் ஆசிரியப் பதவியை அடைதல் கூடும்? அறிவுடை உலகம், அவரைப் போலி ஆசிரியரென்றே மதிக்கும் என்பதில் ஐயுறவின்று.

நூலெழுதும் ஒருவர் தம் நூலின் பொருளைப் பற்றி நன்கு சிந்தித்தல் வேண்டும்; பின்னர், அதன் சம்பந்தமாகவும் அதற்குப் பெரிதும் ஆதாரமாகவும் உள்ள பண்டைச் சிறந்த நூற்களை நன்கு ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியில் போந்த பொருளை ஒரு முறைப் படுத்திக்கொண்ட பின்னரே எழுதத் தொடங்கல் வேண்டும். இஃதே நூலாசிரியர் முதன்மையாக மேற்கொள்ள வேண்டிய விதியாகும். இதனை மேற்கொள்ளும் எழுத்தாளரே சிறந்த நூற்களை இயற்ற வல்லார்.

நூலாசிரியர் கவனிக்க வேண்டிய மற்றொன்று முண்டு. அது நூலுக்கிடுந் தலைப்பாகும். நூலின் தலைப்பு, ஒரு கடிதத்தின் மேல்விலாசம் போல்வ தாகும்.

**நூலின் தலைப்பு**

நூலின் உட்பொருள் எவர்க்கு உரித்தோ, அவரிடத்து அதனை உய்த்தலே, தலைப்பின் நேரான நோக்கமாகும். தலைப்பு, நூலின் பரந்த பொருளைச் சில சொற்களினால் சுருங்க உணர்த்தல் வேண்டும். நூலின் உட்பொருள் அனைத்தையும் ஒரே பதத்தினால் அறிவிக்கும் தலைப்பினை நூலுக் கிடுதல் இயலு மாயின், அது சாலச்

சிறந்ததாகும். நீளமானதும், கவர்படு பொருளை உணர்த்துவதுமான தலைப்புக்கள் நூலுக்குச் சிறிதும் ஏற்பன வல்ல. இத்தகைய தலைப்புக்கள், படிப்போரைப் பெரிதும் மயக்குவனவாகும். இவை, தவறான மேல்விலாசங் கொண்ட கடிதங்களின் கதியினை, நூல்கள் பெறு மாறு பெரிதும் துணை புரியும்.

பிறர் நூலின் தலைப்புக்களைத் தம் நூலுக்கிடுதல் மிக்க இழிவானதாகும். பிற நூலின் தலைப்பினைப் போல் தம் நூலுக்கு இடுதலும் சிறப்புடைய தாகாது. இவை யாவும் இலக்கியக் களவின் பாற்படும்.

நன்கு சிந்தித்துச் சிறந்த தலைப்பினைப் புதிய முறையில் தம் நூலுக்கு வழங்கிட இயலாத ஆசிரியர், எங்ஙனம் தம் நூலுக்குப் புதியனவும் சிறந்தனவுமான கருத்துக்களைக் கொடுக்க வல்லார்?

ஒரு ஆசிரியரின் அறிவை அளத்தற்கு அவரால் எழுதப்பட்ட நூலே சிறந்த கருவியாகும். அவர் அறிவின் பெருமை, அவர்தம் நூலின் கருத்துக்களின் மூலமாகவும், அக்கருத்துக்களை ஒழுங்குபட வகுத்துக் கூறும் முறையின் மூலமாகவும் அறியப்படும்.

**நூலின் இரகசியம்**

ஒரு பொருள் யாவர்க்கும் தெரிந்ததாகவே யிருப்பினும் அதனையே வல்லான் ஒருவன் தான் கொண்டுள்ள கருத்துக்களைப் பொருத்தி வகுத்துக் கூறும் முறையால், அப்பொருள், படிப்போர்க்குப் புதியதாகவே தோன்றும். இஃதே சிறந்த ஆசிரியரின் இயல்பாகும். இத்தகைய தொழில் வன்மை கொண்ட ஒரு நூல், உலகில் என்றும் அழியாப் பேற்றினைப் பெற்றுவிளங்கும். இத்தகைய நூலாசிரியர் புகழுடம்பு, வெற்றுடம்பு மாய்வது போல் மாயாது நிலை பெற்று விளங்குவதாகும்.

பிறர் கருத்துக்களை ஒருவர் எவ்வளவு குறைவாகத் தம் நூலுள் புகுத்துகின்றனரோ, அவ்வளவு அதிகம் அவர் நூல், படிப்பவரால் விரும்பப்படும். அவர் நூற் பொருள்,

படிப்போர்க்கு எவ்வளவு பழக்க முடையதாக இருக்கின்றதோ, அவ்வளவு அவர் பெருமை உயர்வ தாகும். இஃதே நூலின் இரகசிய மாகும்.

ஒரு நூலின் பெருமையை அறிதற்கு மேற் கூறியவை மிக்க துணை புரிவன வாம். அந்நூலைப் பயில்பவர், 'அது பொருளால் சிறந்துள்ளதா, அன்றி ஆசிரியர் அப்பொருளைக் கூறும் முறையால் சிறந்துள்ளதா' என மிக நுணுகி ஆராய்தல் வேண்டும்.

நூற்பொருள்

சாதாரண அறிவுடையோரும் சிறந்த நூலினை வெளிப்படுத்தல் கூடும். இதன் காரணம் அவர்தம் நூற்பொருள் அவர்க்கு மிக்க பழக்க முடையதாக இருத்தலே யாகும்.

அயல் நாட்டின் சம்பந்தமான விவரங்களை அறிவிக்கும் நூற்களும், தேச சரித்திரங்களைக் கூறும் நூற்களும், ஆசிரியரின் மிகுதியான உழைப்பையும் நீண்ட காலத்தையுங் கொண்டனவாகும். இத்தகைய நூற்களின் ஆசிரியர், தாம் அறிந்தவற்றை அறிந்த வண்ணம் அறிவிப்பவராவர். இவர், சொந்தமாகவும் புதிதாகவும் யாதொன்றையும் தம் நூலுள் புகுத்துவாரல்லர்.

சிறந்த ஆசிரியர் இயல்பென நாம் ஈண்டுக் குறிப்பதெல்லாம், நூற்பொருளை உணர்த்தும் முறையினையும், அப்பொருளைப் பற்றி அவர் கொள்ளும் கருத்துக்களைத் தமது நூலுள் அமைத்தலையுமே யாகும். இவைகளே நூலுக்குச் சிறந்ததொரு மதிப்பினைத் தரவல்லன. இவற்றை வாய்க்கப் பெறாத நூல், பொருளால் எத்துணைச் சிறந்த தாயினும், அஃது அறிஞரால் மிகச் சாதாரண மானதாகவே கருதப்படும்.

வால்மீகியின் காவியப் பொருளையே கம்பர், தமது காவியப் பொருளாகக் கொண்டனர். இவ்விரு பெரும் புலவருள் கம்பரே ஆசிரியத் தன்மையில் விஞ்சி நின்றனர். இவ் வுண்மையை இவ்விரு பெருங் காவியங்களை ஒப்பிட்டு ஓது

வால்மீகியும் கம்பரும்

வோர் எளிதில் உணரலாகும். கம்பர், வால்மீகியைக் காட்டிலும் சிறந்து விளங்குதற்குக் காரணம், அவர் தமது நூற்பொருளை வகுத்துக் கூறும் முறையும் அந்நூற்பொருளைப் பற்றித் தாம் கொள்ளும் கருத்துக்களை அமைக்கும் அமைப்புமே யாகும். இஃது அறிஞர் எவரும் மறுக்க இயலாததாகும். இதனை வலியுறுத்த இன்னும் சில நூற்களை உதகரிக்கலாம். விரிவஞ்சி விடுக்கின்றேம்.

இனி, எழுது கோலைக் கையில் பிடித்தற் குரியவர் யாவர் என்பதைப் பற்றிச் சிறிது இயம்புவாம்.

எழுதுகோலும் ஊன்றுகோலும்

கருத்துக்கள், உண்மையில் வார்த்தைகளின் எல்லையை அடைகின்ற வரை உயிர் உள்ளன வாகும்; அவ் வெல்லையை அடைந்த வுடன், உயிரில்லனவாம். உயிரற்றன வாயினும், அவை, திராவகத்தில் பெய்து வைக்கப் பெற்ற உயிர் நீங்கிய பறவை, விலங்கு முதலியன போல், என்றும் அழியாமல் நிலைத்துவிடுகின்றன. ஆசிரியர் கருத்துக்களுக்கு வார்த்தைகளைக் கொடுத்தவுடன் அவை, அவர் உள்ளத்தை விட்டு நீங்குவன வாகும். அவர் உள்ளத்தினின்று உதிக்கும் அவை, தாயின் கருவினின்று வெளிப் போதரும் குழவி போல், பிறர் நிமித்தம் இவ்வுலகிடை வாழ்வன வாகும்.

கருத்துக்களை வெளிப் படுத்தற் குரிய சொற்களை ஏட்டிலமைப்பதற்குத் துணைக் கருவியாம் எழுது கோல், ஒருவர்க்கு நடத்தலின் நிமித்தம் உதவும் ஊன்று கோல் போலக் கருத்துக்களுக்குத் துணை புரியும். ஆனல், கையில் கோலின்றி நடப்பவரே, நடத்தற்றொழிலை எளிதின் முடித்தல் கூடும். அது போல, எழுத்தாளரும், எழுது கோல் கையில் இல்லாத போது கருத்துக்களை நன்கு சிந்தித்தற் குரியர். மனிதன் இயல்பாக முதுமையின் தொடக்கத்தில் தான் ஊன்று கோலின் உதவியையும் எழுது கோலின் துணையையும் பெரிதும் நாடுவன். ஆகையால், அறிவும் அநுபவமும் முதிரப் பெற்றவரே நூல் எழுதுவதற்கு உரியவரா

வர். அவரே உலகுவக்கும் சிறந்த நூலினை இயற்ற வல்லார்.

நூற்கள், உயர்வு தாழ்வினை எய்துவது அவற்றில் அமைந்துள்ள இயல்புகளை ஒட்டியுள்ளது. இவ் வியல்பு களே, ஆசிரியரை உயர்த்துவதற்கும் தாழ்த்துவதற்கும் காரணமாகும். ஆசிரியர், உலகில் பொன்றாப் புகழுடம் பெய்துவது அவர் நூலின் சிறந்த பல இயல்புகளினாலன்றிப் பிறிதொன்றினாலன்று.

நல்லாசிரியர்

நல்லாசிரியர், தமது நூலின்கண் சிறந்த பல இயல்பு களை அமைத்தலின் நோக்கம், மக்கள் அவற்றினை யுணர்ந்து இன்புற வேண்டுமென்பதே யன்றி வேறன்று. ஆனால், இவ்வியல்புகள் அனைத்தையும் ஒருங்கே யுணர்ந்து இன் புறும் ஒருவரை நாம் காண்டலரிது. ஒரு காலத்தில் அந் நூலின் சில இயல்புகளே மக்களால் உணரப்படும். மற்று மொரு காலத்தில் வேறு சில இயல்புகளே அறியப்படும். ஆகையால், அவ்விழுமிய நூலின் அருங் கருத்துக்கள் யாவற்றையும் மக்கள் அறிந் தின்புறுதற்குப் பல நூற் றாண்டுகள் வேண்டுவன வாகும். சிறந்த நூற்கள் உலகில் அழியாப் பேற்றினைப் பெறுதற்கு இஃதே காரணமாகும்.

ஒருவர், ஒரு நூலைப் படிப்பதற்கு முன்னே அந் நூலாசிரியர் இத்தன்மையர் என அறிந்துகொள்ள விரும் புதல் இயற்கை யாகும்; நூலாசிரியர் ஆடவரா, பெண்டிரா, எக்கொள்கை யினர், எவ்வறிவினர் எனும் வினாக்கள் அவருள்ளத்து உதிப்பனவாகும்; ஆசிரியரைப் பற்றிய இத்தகைய செய்திகளை அவர், அறிந்தாலன்றி நூலுட் புகுதற்கு விரும்புவா ரல்லர். ஆகையால், நல்லாசிரியர், தமது நூலினைப் பயில்பவரின் நிமித்தம் தம் ஊரையும் பேரையும் வெளிப்படுத்துவர்.

மறைந்து நிற்கும் ஆசிரியர்

மறைந்து நின்று தம் நூலினை வெளிப்படுத்தும் ஆசிரி யரும் உலகில் உண்டு. அவர் ஏதோ ஒரு கொள்கையை

முன்னிட்டுப் படிப்போர்க்குத் தம்மை அறிமுகப் படுத்தாது, அவர்களை நேராகத் தம் நூலுட் புகுத்துவர். அதனால், அவர் படிப்போர்க்கு நன்மையைச் செய்பவராகார். ஆசிரியர் பேரையும் ஊரையும் அறிவிக்காப் பண்டைத் தமிழ் நூற்கள் சில இன்றும் நம்மிடை உலவி வருகின்றன.

நூலின் ஆசிரியர் ஒருவரிருப்ப, மற்றொருவரின் பெயரைத் தாங்கி வெளி வரும் நூற்களும் உண்டு. அல்லி அரசி மாலை, பவழக்கொடி, இரத்தினச் சுருக்கம் முதலிய நூற்கள் புகழேந்திப் புலவரால் இயற்றப் பட்டனவாக வெளிப் போந்துள்ளன. புகழேந்திப் புலவரே இந்நூற்களை இயற்றினவர் என்பதை வலியுறுத்த அப்புலவர் பெருமான், சிறைப் பட்ட காலத்து இவைகளைப் பாடியதாக ஒரு கதையும் புனையப் பட்டு வழங்கி வருகின்றது. அறிஞர் நளவெண்பாவினைச் சுவைத்து மேற்கூறிய நூற்களைப் படிப்பரேல், காவியப் பண்பும், ஓவியப் பண்பும் ஒரு சிறிதும் அமையப் பெருதனவாய இந்நூற்களை இயற்றியவர் புகழேந்திப் புலவர் என எண்ணவுந் துணியார்.

அகத்தியர் பெயரைத் தாங்கி வெளி வந்துள்ள நூற்கள் பல ; மந்திர நூல்கள், தந்திர நூல்கள், வைத்திய நூல்கள் ஆகியவற்றுட் பல அவர் பெயரால் வழங்கிவருகின்றன. அகத்தியர், முனிவராகையால் மந்திர தந்திரங்களில் வல்லுனராய் இருந்தமைக்கு இடனுண்டென்றும், அவர், பொதிய மலையில் உறைந்தாராகையால், வைத்திய மூலிகைகளை நன்கு தேர்ந் திருத்தல் கூடுமென்றும் மக்கள் மயங்குகின்றனர். இலக்கணத்தை வகைப்படுத்தி யருளிய பேரகத்தியச் சூத்திரங்களின் அழகினை யுணர்ந்து இன்புறும் அறிஞர், இலக்கண அமைதியே ஒரு சிறிதும் வாய்க்கா இந் நூற்களின் ஆசிரியர், அம்முனி புங்கவர் என்று எண்ணவுந்துணிவரோ ? இத்தகைய நூற்கள் அப்பெரியார் பெயர் கொண்டு வழங்குவதற்கு அவ்வறிஞர் பெரிதும் இரங்காதொழியார்.

ஒருவர் ஒரு நூலை எழுதி அதனை ஏனோ மற்றொருவர் பெயரால் வெளிப்படுத்தல் வேண்டும்? இங்ஙனம் செய்தல் உலகை வஞ்சிப்பதல்லவா? சிறந்த ஆசிரியர் உலகை வஞ்சிக்கவும் ஒருப்படுவரோ?

ஆசிரிய இலக்கணம் அமையப் பெறாதவரே, தாம் இயற்றிய நூலைப் பிறர் பெயராலும், பேர் ஊர் இன்றியும் வெளிப் படுத்தித் தாம் கரந்து உறைவர். அவர் அங்ஙனம் மறைந் திருத்தல், பிறர், தம் நூலில் குறை காண்பரேல் தப்பிச் செல்லுதலைக் குறித்தோ, புகழை விரும்பாப் பெருந் தன்மையை முன்னிட்டோ, யாதோ அறிந்திலம். அவர் கருத்து எதுவாயினும் ஆகுக. மறைந்து நின்று தமது நூலை வெளிப் படுத்தும் ஆசிரியர் அறிஞரால் விரும்பப்பட மாட்டார்.

இதுவரை ஆசிரியர் இயல்புகளை ஒருவாறு ஆராய்ந் தோம். இனி, ஆசிரியர், தமது நூல் சிறந்திடுதற்கு மேற் கொள்ள வேண்டிய விதிகளைப் பற்றிச் சிறிது இயம்புவாம்.

ஒரு நூலின்கண் உள்ள குற்றத்தையும் குணத்தையும் நன்கு அறியக் கூடியவர், அந்நூலின் ஆசிரியரே யாவர்.

**நூலைச் செப்பனிடல்**

ஆகையால், சிறந்த ஆசிரியர், நூலினை எழுதி முடித்த பின்னர், அதனைப் பன் முறைப் படித்து, எவ்வெவ் விடங்களில் எழுத்துப் பிழை, சொற் பிழை, சந்திப் பிழை, வாக்கியப் பிழை முதலியன நேர்ந்துள்ளன எனத் துருவிப் பார்ப்பர். இங்ஙனம் ஆராய்ந்து பிழைகளைத் தாமே திருத்திக் கொள்வர். பின்னர் வாக்கியங்களைச் செப்பனிடுவர்.

நூல், எத்துணைத் திருந்தப் பெற்றுச் செப்பனிடப் படுகின்றதோ, அத்துணை அழகினைப் பெற்று விளங்குவ தாகும். கிரே எனும் ஓர் ஆங்கிலக் கவிஞர், தாம் இயற் றிய கையறு நிலை (Gray's Elegy) எனும் ஒரு சிறிய நூலைத் திருத்திச் செப்பனிட்டு வெளிப் படுத்துவதற்குக் காலம் ஏழு ஆண்டுகளுக்கு மேற் கொண்டதாக அவர்தம்

சரித்திரம் கூறுகின்றது. அங்ஙனம் பன் முறை அவ் வாசிரியரால் திருத்தப்பெற்றுச் செப்பனிடப் பட்ட அந் நூல், பல அழகுகளைக் கொண்டு பயில்பவரைப் பரவசப் படுத்துகின்றது.

நூலாசிரியர், விரைவாகப் பத்திரிகை ஆசிரியரைப் போன்று நூலை இயற்றி வெளிப்படுத்த முயலுதல் கூடாது. விரைவில் வெளியாகும் நூற்கள் பல் வகையின வாய குற்றங்களுக்கு இடனுதல் ஒருதலை,

இக்காலத்துச் சிலர் வாரத்திற்கு ஒரு நூலாகத் தம் வாழ் நாளில் கணக்கற்ற நூற்களை வெளிப்படுத்துகின்ற னர். இவர் தம் நூற்கள் ஒன்றேனும் உலகில் என்றும் பொன்றுப் பேற்றினைப் பெறுதல் அரிதாகும். இதன் காரணம், இவர் நூல், பத்திரிகையைப் போன்று சொற்ப நேர அளவே மக்களுக்கு இன்பத்தைப் பயப்பதாகும். பத்திரிகையை ஒரு முறைப் படித்த பின்னர், எவரும் மறு முறைப் படிக்க விரும்பார். அது போலவே, விரைவில் எழுதப்பட்ட நூற்களும், ஒரு முறைப் படித்த பின்னர், படிப்போர்க்குச் சுவையற் றிருத்தலால், உலகில் அழியாப் பேற்றினைப் பெறுவன வல்ல.

சிறந்த ஆசிரியர், கால நீட்டிப்பை ஒரு சிறிதும் பொருட் படுத்தாமல் தமது நூலைப் பன் முறைப் படித்துத் திருத்திச் செப்பனிட்ட பின்னரே, அச்சு வாகன மேற்ற முந்துவர். இங்ஙனம் வெளியாகும் நூற்களே குற்றங்கள் தீர்ந்து, உலகம் போற்றும் திறமுடன் விளங்கி நிற்கும்.

**நூலின் வெளித் தோற்றம்**

நூலின் அழகான வெளித் தோற்றம், எவரையும் தன் பால் ஈர்க்கும் இயல்பின தாகும். காண்போர் கண்களைக் கவரும் வண்ணம் உயர்ந்த காகிதத்தில் நூலினை அச்சிட்டு அதன் வெளித் தோற் றமும் அழகுறச் செய்தல் நூலாசிரியர் கடமைகளில் ஒன்ருகும். இக்காலத்துத் தோன்றும் நூற் கள் பொருளமைதி அறவே நீங்கப்பெற்றிருப்பினும் வெளித்

தோற்றத்தில் சிறிதளவும் குறைந்தன வல்ல; அவை அறிவும் ஒழுக்கமும் அறவே நீங்கி, ஆடை அணிகலனால் தம்மை அலங்கரித் துலவும் அற்பரைப் போன்றன வாகும். இத்தகைய நூற்களை அறிஞர் எடுத்துப் படித்ததும் 'அகத்தின் அழகு முகத்தில் பொலியும்' எனும் பழமொழி, பொய்த்த இடம் இஃதே என்று மிக்க வெறுப் புற்று அதனை வீசி யெறிவர். இஃதே அந்நூலின் கதியாகும். நூலின் வெளித் தோற்றம் எத்துணை வெறுக்கத் தக்க தாயி னும் அதன் உள்ளீடு சிறந்திடுமாயின் அறிஞர் அதனைப் பொன்னே போல் போற்றுவர். ஒரு நூல் உள்ளீட்டாலும் வெளித் தோற்றத்தாலும், சிறந்து விளங்குமாயின், அது மக்களால் எத்துணைப் போற்றிப் புகழப்படும்! ஆகையால், நூலின் அகமும் புறமும் அழகுறச் செய்தலே சிறந்த ஆசிரியரின் செய் தொழிலாகும்.

## நூல் நடை

கடவுள் உலகில் கரந்து உறைவது போல் நடையும் நூலுள் மறைந்து நிற்பதாகும். அதன் இலக்கணம் இத்தன்மைத் தென எடுத்து விளக்குதல் அரிய தொன்றும். இறைவன் இயல்பினை விளக்குதல் எளிய தன்று. அவன் இயல்பினை விளக்குதல் எத்துணைக் கடினமோ அத்துணைக் கடினமாகும் நடையின் பண்பினை விளக்கிக் காட்டுதல். இவ்விரு பண்புகளும், மக்கள் தாமே யுணர்ந்து இன்புறற் குரியன.

நடை, கருத்துக்களின் உடை என்ப. ஆடையைக் கொண்டே அதனை அணிந்துள்ளார் குணத்தினை நாம் அறிதல் கூடும். அது போலக் கருத்துக்களின் தன்மையை அறிதற்குக் கருவியாய் நிற்பது அக் கருத்துக்களின் உடையாகிய நடையே யாகும்.

மக்கள், உடையினைத் தேர்வது போல ஆசிரியரும் நடையினைத் தேர்பவராவர்.

ஒருவர், பிறர் நடையைப் பார்த்து அதனை ஒப்ப எழுதுதல்,*பொய்ம் முகம் தரித்து உலவுதலை யொக்கும். பொய்ம் முகம் எத்துணைச் சிறந்த தாயினும் அஃது உயிரற்ற தாகையால், விரைவில் தனது சிறப்பற்றுத் தாங்க முடியாத தாகும். அழகற்ற இயற்கை முகமும் இதனை நோக்க அழகுற்றதாகும்.

பிறர் நடை தழுவல்

பெருமித நடையினைப் பாவனைச் செய்தல் †முகச் சேட்டை செய்தலை யொக்கும். இத்தகைய நடை அறிஞரால் விரும்பப்படுவ தன்று.

---

* Mask— (போலி முகம்)  † Grimace

நூல் நடையில் நேரும் மேற் குறித்த குறைகளை நூலாசிரியர் விலக்க விரும்புவராயின், அவர், பிறர் நடையின் பிழைகளைக் காணும் திறம் பெறல் வேண்டும். அவர் அதனைப் பெறுவராயின், தமது நடையில் நிகழும் குற்றங்களை எளிதின் போக்குதல் கூடும்.

நூலின் இயல்பினைப் படிப்போர்க்குச் செவ்விதின் விளக்க வல்லது நூல் நடையே யாகும். ஒருவர், ஒரு நூலின் பண்பினை யுணர்ந்திடுதற்கு நூல் முழுவதையும் படிக்க வேண்டும் என்பதில்லை. அவர், அந்நூலின் ஒரு பாகத்தில் அமைந்துள்ள நடையின் போக்கினைச் செவ்விதின் அறிந்து தெளிவராயின், அதன் பெருமை சிறுமைகளை அறியும் பெற்றியைப் பெறுவர்.

ஆசிரியரை அளத்தல்

நூலாசிரியரின் பண்பினை விளக்கிக் காட்டுவதும் நூல் நடையே யாகும். எத்தகைய ஆசிரியரையும் நாம் அவருடைய நூல் நடையைக் கொண்டு அளந்து கூறிவிடலாம்.

ஆசிரியத் தன்மையில் நடுத்தரமானவர், தமது இயல்பான நடையை மறைப்பதற்கு முயலுவர். அதனால், பேரறிவாளர்க்கே உரிய எளிய நடையினை இவர் பெறாது ஒழிகின்றனர். இவர்க்கு எளிய நடையில் தம் கருத்துக்களை அமைப்பது மிகக் கடினமான காரியமாகும். இவர் எளிய நடையினை முயன்று பெறவும் முனையார்; இவர் கொண்டுள்ள கருத்துக்கள் சொற்பமாயினும் அவற்றை எளிய நடையில் அமைப்பராயின் அவை, படிப்போர்க்குப் பெரிதும் பயனுறுத்துவ தாகும். இத்தகைய ஆசிரியர், தாம் மிக ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டவராகப் பாவித்து மித மிஞ்சிய கடினமான சொற்களை ஒன்றன் பின் ஒன்றாய் அடுக்கி விடுவர்; வாக்கியங்களையும் ஒன்றரை முழ நீளம் நீட்டுவர்; அதனால், அவர் கருத்துக்கள், படிப்போர்க்குத் தெற்றெனப் புலப்படா. இவ்வாசிரியர், கருத்துக்களை

நடையின் எளிமை

அறிவிக்க முயலும் எண்ணத்திற்கும் அதனை மறைக்க முயலும் நினைப்பிற்கும் இடை நின்று ஊசலாடுவர். இவர் விரும்புவதெல்லாம், தாம் எழுதியவை, அலங்காரம் அதிகம் வாய்ந்தனவாகவும், தம்முடைய கல்வித் திறம் பொருந்திய தாகவும், பிறரால் கருதப்பட வேண்டு மென்பதே யன்றிப் படிப்போர்க்குத் தெள்ளிதின் விளங்க வேண்டு மென்பதன்று. இவர் சிற்சில சமயங்களில் தம் கருத்துக்களைத் துண்டு துண்டான சிறிய வாக்கியங்களிலும் அமைப்பர். அங்ஙனம், அவர் அமைப்பவை கவர்படு பொருளைப் பயப்பன வாகவும்,அரை குறையாகப் பொருளை அறிவிப்பன வாகவும் அமையக் காணலாம். இவர்தம் நீண்ட வாக்கியங்கள் படிப்போரை உறங்கிடச் செய்யும் பான்மைய வாகும். இத்தகைய வாக்கியங்கள், நூற் பொருளைச் செவ்விதின் உணர்தற்குத் துணை புரிவன வாகா.

படிப்போர்க்குப் பொருள் புலப்படா வண்ணம் எழுதுதலைப் போன்ற எளிய செயல் ஒன்றில்லை. சீரிய கருத்துக்களை எவரும் எளிதில் உணர்ந்து இன்புறுமாறு எழுதுதலைப் போன்ற கடினமான தொன்று உண்டென்று காட்டுதலும் அரிதேயாம்.

சிறந்த ஆசிரியர், தம்மருங் கருத்துக்களை எளிய நடையிலேயே அமைக்க முயலுவர். இதனாலன்றோ உண்மையின் அறிகுறி எளிமை யெனக் கருதப்படுகின்றது.

எளிய நடையின் ஆற்றலை அறிதற்கு முன்னர், நடைக்கும் கருத்திற்கும் உள்ள தொடர்பினை அறிதல் முக்கியமாகும்.

நடை, கருத்துக்களால் அழகினை எய்தும். சிலர், கருத்துக்கள், நடையால் அழகினைப் பெறும் என்பர். அதன் உண்மை, பேச்சளவே யன்றி வேறன்று.

**நடையும் கருத்தும்**

நடை, கருத்துக்களின் உடை யென்றும் வெளித் தோற்ற மென்றும் மேலே நிறுவினோ மாகையால், அழகற்ற கருத்துக்களுக்குப்

புறத் தோற்றமாகிய நடை, அழகினைப் பயத்தல் முரயை யாகும்.

பழுதுற்ற நடை, ஆசிரியரின் தெளிவற்ற அறிவினைப் பகர்வதாகும். அழகுற்ற நடை, ஆசிரியரின் தெள்ளிய மதியினை அறிவிப்பதாகும்.

தெளிந்த கருத்துக்களை யுடையவர்க்கே யன்றிப் பிறர்க்கு எளிய நடை அமைவதின்று. கருத்தொன்று மில்லாதவர்க்கு நடையே யில்லை. ஆசிரிய வகுப்பினைச் சேர்ந்த பெரும்பான்மையோரின் நடை சிறந்திடாமைக்குக் காரணம் அவர் கருத்தொன்று மில்லாமல் எழுதப் புகுதலே யாகும். இத்தகைய ஆசிரியரால் எழுதப்பட்ட நூற்கள் சொற்பகட்டு மிகக் கொண்டனவாயும் எளிமை, தெளிவு என்பனவற்றை அறவே துறந்தனவாயும் இருக்கக் காணலாம். இத்தகைய நூற்களை ஒருவர் எவ்வளவு ஊன்றிப் படித்தாலும் நூற்பொருளைச் செவ்விதின் உணர்தல் அருமையாகும். இதன் காரணம், ஆசிரியர்தம் கருத்துக்களின் வறுமையே யொழிய வேறன்று. கருத்துக்களால் நல்குரவெய்திய ஆசிரியர், எங்ஙனம் சிறந்த நூற்களை இயற்றுதல் கூடும்.

கருத்துக்களால் வளப்பம் வாய்ந்த நல்லாசிரியர், சில்வகை யெழுத்தில் பல்வகைப் பொருளைச் சிறிய தோராடி, பெரிய யாக்கை முதலியவற்றை விளக்குவதே போல், சுருங்கக் கூறி விளங்க வைப்பர். இவரே, படிப்பவரின் மதிப்பினைப் பெரிதும் பெறுபவராவர்.

நூல் பயில்வோர்க்குப் *புறம் அகம் எனும் இருவகைச் சலிப்பு நேர்தல் உண்டு. முன்னையது நூலாசிரியர், தெளி

* புறம் அகம் எனும் இருவகைச் சலிப்புக்களும் (objective and subjective tediousness) ஒருவர்க்கு நூல் பயில் காலே நேர்வதாகும். புறச்சலிப்புப் பயில்பவர்க்குப் புறம்பாய நூலாசிரியர் காரணமாக உண்டாவது; அகச் சலிப்புப் பயில்பவர் காரணமாக உதிப்பது.

வற்ற கருத்துக்களை வழங்குவதால் நிகழ்வது; பின்னையது நூற் பொருளில், பயில்வோர்க்கு விருப்பும் ஊக்கமும் இல்லாமையால் நேர்வதாகும்; நூலாசிரியர் தெளிவற்ற கருத்துக்களை வழங்குவதால் நூல் நடை பாழாகிப் பயில்வோர்க்குப் பொருள் புலப்படா தொழியும்; ஒழியவே, பயில்வோர், நூலின்கண் சலிப்புற்று நூலைப் புறக்கணிப்பர். ஆகையால், புறச் சலிப்பு நிகழ்வதற்கு ஆசிரியரே காரணமாவர்.

தெளிந்த கருத்துக்களைக் கொண்ட சிறந்த ஆசிரியர், தம் கருத்துக்களைப் பயில்பவர் எளிதின் உணர்ந்து கொள்ள வேண்டி எளிய நடையில் பொருள் விளக்கமுற அமைப்பர். இங்ஙனம் அமைக்கப்பட்ட நூலின் கண்ணும் சிலர்க்குச் சலிப்பு உண்டாவதுண்டு. அஃது ஆசிரியர் குற்றமன்று; பயில்வோர் குற்றமேயாகும். நூலின்கண் ஊக்கமும் விருப்பமும் இல்லாதவர், ஏதோவொரு காரணம் பற்றி நூலினைப் படிக்கச் சமைவரேல், அவர் மனம், நூற் பொருளில் ஒன்றுவது அரிதாய் முடியும். நூற் பொருளின்கண், மனம் ஒன்ருமையால் அவர், நூலுள் அகச் சலிப்புற்று அதனை விட்டகல்வர். ஆகையால், அகச் சலிப்பு நேர்வதற்குக் காரணம், பயில்பவரே யன்றி ஆசிரியர் அல்லர் என்பது நாம் அறிதல் வேண்டும்.

இதுவரை நடைக்கும் கருத்திற்கும் உள்ள தொடர்பினை ஒருவாறு உணர்ந்தோம். இனி, எளிய நடையின் இயல்பினை அறிவது நமது கடமையாகும்.

ஆசிரியர், ஒரு பொருளைப் பற்றிச் சிந்திக்கும் போது மிக வுயர்ந்த வகையில் சிந்தித்தல் வேண்டும். ஆனல், அவர் பேசும் போது சாதாரண மக்களைப் போலவே பேசுதல் வேண்டும். அவர், தம்மருங் கருத்துக்களை எட்டிலிட விரும்புவராயினும் எளிய நடையினையே மேற்கொள்ள முயலுதல் வேண்டும். எளிய நடையே நூலுக்கு எழிலினைத் தருவதாகும்.

ஆசிரியர், தம் கருத்துக்களை மக்கள் எளிதில் உணர்ந்து இன்புற விரும்புவராயின், கடினமான சொற்களையும் சொற்றொடர்களையும் அறவே நீக்கியும், படித்தற்கே இடர்ப்படும் சந்திகளை முற்றிலும் ஒழித்தும், எளிய சொற்களினால் பொருள் நேராகப் பயக்குமாறுஞ் செய்வர். எத்தகைய சீரிய பொருளையும் அவர், தமது தெளிந்த நடையின் வாயிலாக எளிதின் உணர்த்துவர்.

தெளிவற்ற நடை, ஒரு நூலின் தீய அறிகுறியாகும். அஃது ஆசிரியரின் தெளிவற்ற கருத்துக்களைத் தெரிவிப்பதாகும். ஆசிரியர் சிந்தையில் தெள்ளிய கருத்துக்கள் உதிக்குமாயின், தெளிந்த நடையினை அவர் அக்கருத்துக்களுக்கு எளிதின் வழங்கல் கூடும். இஃதே ஆசிரிய தத்துவமாகும். அவர் எதனையும் செவ்விதின் சிந்திக்குந் திறம் பெறப் பழகுவரேல், தெளிவான நடை அவர்க்கு அரிய தொன்றன்றாம்.

பொருள் நேராகப் புலப்படா வண்ணம் வாக்கியங்களை முறுக்கியும் வளைத்தும் எழுதுபவர், தம் கருத்துக்களின் உண்மை உருவத்தைச் செவ்விதின் உணர்ந்தவரல்லர். மேக மண்டலத்தில் தோன்றும் உருவங்களென உதிக்கின்ற கருத்துக்களைக் கொண்டு அவர் எழுதப் புகுவதால், அவர்தம் நூல் நடை, தெளிவினைப் பெறுதற்கின்றிப் பாழாகிப் பயில்வோர்க்குப் பயன்படா தொழிகின்றது.

சிறந்த கருத்துக்களைக் கொண்ட ஆசிரியர், அக் கருத்துக்களைத் தெள்ளிய நடையில் அமைப்பரா, தெளிவும், விளக்கமும் வாய்க்காத நடையில் பொருத்திப் படிப்போரை மயக்குவரா? சிறந்த ஆசிரியர், மக்கள் மயங்குதற்கேதுவாய நடையினைத் தமக்கெனத் தேரார் என்பது ஒருதலையாம்.

சிறந்த ஆசிரியரும் ஒரோ இடங்களில் மயங்குதற்கேதுவான வகையில் எழுதுதலும் உண்டு. அது, நாவினால்

உரைத்தற்குத் தகாதனவற்றை இடக்கரடக்கல் மங்கலம் முதலியவற்றால் அமைத்தலாகும். ஆசிரியத் துறையில் மாட்சிமைப் பட்டோர், இங்ஙனம் அமைத்தல், இன்றி யமையா திருந்தாலல்லாமல் அதற்குத் தம் நூலுள் இடந் தரார்.

படிப்போரின் செவிக்கும் சிந்தைக்கும் இன்பத்தைப் பயக்க விரும்புவோர், தம் கருத்துக்களை, மயங்குதற் கேதுவாகாத, தெளிவும் எளிமையும் வாய்ந்த செவ்விய நடையில் அமைக்க முயல்வர்; அரிய கருத்துக்களை எளிய சொற்களால் அறிவிப்பர்; பதங்களை அளவுக்கு மிஞ்சி அடுக்கிடார்.

**நடையின் இரகசியம்**

சொற்கள், கருத்துக்களை நன்கு விளக்கு மோர் எல்லையை அடையும் வரை, அக்கருத்துக்கள், சொற் களால் பயனைப் பெறுவன வாகும். இவ் வெல்லையை ஆசிரியர் தமக்கு இலக்காகக் கொள்ளுதலே நூல் நடையின் இரகசிய மாகும். இதனை அறியாதார் அளவற்ற சொற்களைப் பெய்து நடையினைப் பாழ் படுத்துவர்.

**வள்ளுவரின் பேராசிரியப் பண்பு**

ஒருவர் எழுதியவற்றிலிருந்து நாம் சில சொற்களை எடுத்துவிடின் உரைக்கப்படும் பொருள் சிதைவுரு தாயின், அவர் அளவுக்கு மிஞ்சிய சொற்களைப் பெய்துள்ளார் என்பது அறியப்படும். மற்றொருவர் எழுதிய வற்றினின்றும் அங்ஙனமே நாம் ஒரு சொல்லைப் பெயர்க்கப் பொருள் குலைந்துவிடு மாயின், அவர், சொற்களை நிறைவி லிட்டுப் பெய்துள்ளாரென நாம் உணர்ந்துகொள்ளலாம். இதற்குதாரணமாகத் திருக் குறளில் ஒரு வெண்பாவினின்றும் ஒரு சொல்லையோ ஓரெழுத்தையோ அசைக்க முயல்வோமாயின், அவ் வெண்பாவின் பொருள் அடியோடு சிதைந்து பாழாகும்.

இத்தன்மை யொன்றே வள்ளுவரின் பேராசிரியப் பண்பினைப் பெரிதும் விளக்குவதாகும்.

ஆசிரியர், பயில்பவரின் அருமையான காலமும் பொறுமையும் வறிதே அழியாத வண்ணம் உரைக்கப் படுபவற்றைச் சுருங்கக் கூறி, விளங்க வைப்பரேல், பயில் பவர், ஊக்கமும் பொறுமையும் உடையவராகி, எவ் வகைச் சலிப்புமின்றி நூலினைப் படித் துப் பயனுறுவர். அதனால், ஆசிரியர் மேற்கொண்ட உழைப்பு உண்மையில் பயன் கொண்டதாகும்.

சுருங்கக் கூறி விளங்க வைத்தல்

மக்கட்கு நன்மை பயப்பனவற்றை ஒருவர் ஒழுங்கற்ற நடையில் எழுதுவதைக் காட்டிலும் எழுதாமையே சாலச் சிறந்ததாகும். சிறிய ஒரு கருத்தினைப் பல கடினமான சொற்களால் அறிவித்தல் ஆசிரியரின் அறிவு முதிரா்த் தன்மையை அறிவிப்ப தாகும். எத்துணைச் சிறந்த பொருளையும் எளிய சொற்களால் தெளிவுற வமைத்தலைக் கொண்டு, ஆசிரியரின் அறிவு முதிர்ச்சியை நாம் நன்கு அளத்தல் கூடும்.

அரும் பெரும் பொருள்களைச் சில சொற்களால் படிப் போர்க்கு விளக்கமுற அமைக்கும் பெற்றி, திருக்குற ளாசிரிய ரிடத்துச் சிறந்திடக் காணலாகும். திருக்குறள் பொருளால் எத்துணைச் சீரியதென்பது ஈண்டு நாம் ஆராய வேண்டுவதன்று. அவ் வரிய நூலின் நடையின் திறமே நாம் இங்கு ஆய்தற் குரியதாகும். நடையும் பொருளும், மணியும் ஒளியும் போல் பிரித்திடற் கரிதாம் பண்பின வாகலான், ஒன்றினை ஒழித்து மற்றொன்றினைக் காண்ட லியலாது. ஆகையால், இவ்விரண்டும் பொலிந்து விளங்கும் திருக்குறளின்கண் நடையின் பெற்றியை நாம் நன்கு காணலாகும். இந்நூல் களிற்றியானையின் நடையினைக் கொண்டு திகழ்வதாகும். நவில்தொறும் நயமே பயக்கும் இந்நூல் நடை, தெளிவும் எளிமையும் ஒருங்கே வாய்ந்து,

தெள்ளிய ஆற்று நீர், ஆழ்ந்து கிடக்கும் மணியையும் முத்தையும் தெற்றெனக் கட்புலப் படுத்துவதே போல், நூற் பொருளை இனிதின் விளக்கும் இயல்பிற்றாகும். திருக்குறளை ஓதாதவரில்லை; பண்டிதரே யன்றிப் பாமரரும் பெரிதும் விரும்பிப் போற்றுகின்றனர். அங்ஙனம், அவர் போற்றுதற்குக் காரணம், இந்நூல் நடையின் எளிமையே யன்றிப் பிறிதொன்றில்லை. இந்நடையின் மாண்பினை விரிக்கின் நூல் பெருகும் என்பது மிகையாகாது. இத னுண்மையைக் கற்போர், தாமே உணர்ந்து இன்புற வேண்டிச் சில குறட் பாக்களைக் கீழே குறிக்கின்றாம்.

"இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை"

"கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்"

"ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

"எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு"

"நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

"எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து"

இக்குறட் பாக்கள் ஒவ்வொன்றும், எவ்வளவு எளிமையும் தெளிவும் வாய்ந்து அரிய பொருள்களை இனிதின்

அறையும் பெற்றியன வாக அமைந்துள்ளன! இவற்றில் ஒரு சொல்லேயேனும் ஒருவர் கடினமான தென்று காட்டுதல் அரிது. எளிய நடையும், விழுமிய கருத்தும் எழிலுறப் பொலிதற்கு, இவை சிறந்த எடுத்துக் காட்டன்றோ? இக்குறட் பாக்களின் கருத்துக்கள் சாதாரண மக்களுக்கும் செவ்விதின் புலப்படும்படி அமைந் துள்ள பண்பே, வள்ளுவரின் ஆசிரிய மாண்பினை அறிவிப்பதாகும்.

அரிய உண்மைகள் எளிய நடையினில் அமைக்கப்படு மாயின், அவை, அழகுற்றுப் பொலிந்து விளங்குவனவாகும். நடை எத்துணை எளிமையாக அமைகின்றதோ அத்துணை ஆழமாகப் பொருள், படிப்போர் அகத்தில் பதிவதாகும்.

எளிய நடையில் சுருங்கச் சொல்வதே சிறந்த ஆசிரியர் பண்பென்று மேல் குறித்தமையால் பொருள் விளக்கமுறு வண்ணம் சொற்களைக் குறைத்துவிடல் கூடாது. அங்ஙனம் செய்பவர் பொருள் நிண்ணயம் செய்யும் ஆற்ற லற்றவ ராவர். இத்தகைய ஆசிரியர், பொருளைச் செவ்விதின் விளக்குதற் குரிய சொற்களையும் இலக்கண அமைதியையும் அறவே கைவிடுவ ராகையால், இவர் எழுதியவை, படிப் போர்க்குச் சிறிதும் பயன்படா தொழிகின்றன. இதன் அடிப்படையான காரணம், ஆசிரியர், தாம் எழுதியவை தமக்கு விளங்கிவிட்டால் போதும் என்று எண்ணிக் கொள்வதே யாகும். தாம் எழுதியவை தமக்கு விளங்கு வது போல் பிறர்க்கும் விளங்க வேண்டு மென எண்ணுவ ராயின், அவர் மேற்குறித்த குற்றத்தின் வயப்படார் என்பது திண்ணம்.

சொற்களைக் குறைத்தல்

மூளையினின்றும் பொருள் ஏட்டில் இறங்குதல் மிகவும் எளிமையாகும். ஆனல், அப்பொருள் ஏட்டினின்றும் மூளைக்கு ஏறுதல் அத்துணை எளியதன்று. பொருளின் குருத்துவ இலக்கணம் அறிந்தோர், இதனுண்மையை

மறுக்கார். ஆகையால், ஏட்டினின்றும் மூளைக்குச் செல் லும் பயணத்திற்கு உதவி புரிதல் ஆசிரியர் கடனாகும்.

ஆசிரியர் அரிய கருத்துக்களை அழகிய நடையில் அமைப்பது, சிறந்த பொருளுக்குப் பொற் கவச மிடுதலை யொக்கும்; பொற் கவசங் கொண்ட பொருள்கள், விரைவில் அழிதலுறாமல் விளங்குவன வாகும். அழகிய நடையில் அமைக்கப்பெற்ற அருங் கருத்துக்களும் மக்களால் போற்றப்பட்டு, அழியாப் பெருமையைப் பெறுவன வாகும்.

நடையைக் கம்பர் போற்றும் பான்மை

ஆசிரியர்க்குப் பெரும் பேருண்டாவதற்கு அடிப் படையான காரணம், அவர் நூலின் தெளிவாய நடையே யாகும். ஆசிரியர், கருத்துக்களால் எத்துணை நிரம்பப் பெற்றவராயினும், தெளிந்த நடையினைக் கைவிடுவரேல், அவர் ஆசிரியத் தன்மையில் மிகக் குறைந்தவரே யாவர்.

நல்லாசிரியர்தம் கவி நடையின் தெளிவையும் தண்ணிய தன்மையையும் நோக்கிக் கல்வியிற் பெரிய கம்பரும், "—சவி யுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவி—" என்றும், ஆசிரியத் தன்மை நிறை வுறாதவர் கவியின் பொருள் மயக்கம் கருதி, "புன் கவியெனத் தெளிவின்றி" என்றும் தமது இராமாயணத்துள் நடையின் தெளிவினைப் பன்முறை வற்புறுத்தினர். இதனால், ஆசிரியர், நடையினை நன்கு போற்றுதல் வேண்டும் என்பது பெறப்படும்.

நூலின் நடையினைப் பொருட்படுத்தாத ஆசிரியர், ஆடையைப் புறக்கணிக்கும் மக்களை யொப்பர். திருந்திய உடையினை உடுக்காதவர், உலகின் மதிப்பினைப் பெறுதல் அரிதாவதே போல், செவ்விய நடையினைப் பெறாத நூற்கள், அறிஞரின் மதிப்பினைப் பெறாதனவாய்க் கால நதியால் விழுங்கப்படும். நடையினைப் பொருட் படுத்தாத ஆசிரியர்க்கு இஃதே உலகிடும் சிறந்த தொரு தண்டனை யாகும்.

# இலக்கியக் கல்வி

மக்கள் ஓதுதற்கென எழுந்த நூற்கள் உலகில் எண்ணிறந்தன. அவை, கல்விநூல், கலைநூல், தத்துவ நூல் என முப்பகுதி கொண்டன. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நூற்கள், மனிதன், தனது ஆயுள் வரை ஓதியுணர்ந் திடற் கரிதாம் வகையில் பரந்து கிடக்கின்றன. அவை, மனிதனுக்கு வாழ்க்கையில் ஒவ்வொரு வகையில் பய னுறுத்துவன வாகும். ஆகவே, மனிதன், இந்நூற்கள் யாவும் பயனுடையன வெனக் கருதி இவற்றை யெல்லாம் பயிலப்புகுவனேல், அவன்றன் வாழ் நாள் வீழ் நாளாய்க் கழியும் என்பது ஒருதலை. அவன் கருத்தும் முற்றுப் பெறு தொழியும். இதனாலன்றோ திருக்குற ளாசிரியர்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபி
> னிற்க வதற்குத் தக"

எனுங் குறளில் 'கற்பவை' என்ற சொல்லால், மனிதன் கற்றற் குரிய நூற்களை என்று பொருள் படும்படிக் குறித்துச் செல்கின்றார். இதனால், மனிதன், உலகில் உள்ள நூற்கள் யாவற்றையும் கற்க இயலாது ஆகையால், அவன், கற்றற்குரிய நூற்களையே கற்க வேண்டும் என்பது பெறப் படுகின்றது. இக்குறட் பாவிற்கு உரை கண்ட பரிமேலழகி யார், 'கற்பவை யென்றதனான், அறம் பொரு ளின்பம் வீடென்னு முறுதிப் பொரு ளுணர்த்துவன வன்றிப் பிற பொரு ளுணர்த்துவன, சின்னாட் பல் பிணிச் சிற்றறிவி னர்க்கு ஆகா வென்பது பெற்றாம்' என்று கூறி யிருத்தல், மனிதன் உறுதிப் பொருளை உணர்த்த வல்ல நூற்களையே ஓதுதற் குரியவன் என்பதைச் செவ்விதின் வலியுறுத்துவ தாகும். இதனையே,

" அலகுநூல் கற்பி னறிவுநூல் கல்லா
* துலகநூ லோதுவ தெல்லாங் † கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில் "

என்றார் பிறரும்.

மேல் குறித்த முப்பகுதியுள் முதற் பகுதியாகிய கல்வி நூல், இலக்கியம், இலக்கணம் என இரு பெரும் பிரிவு கொண்டது.

இலக்கணமும் அதனை ஓதும் வகையும்

" எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின்றும் இலக்கணம் எடுபடும் "

எனும் பேரகத்தியச் சூத்திரத்தால், இலக்கியம் தோற்றத்தால் முதன்மை பெறுவது நிறுவப்படும். இலக்கணம் பின்னரே தோன்றிய தொன்றும்.

'இலக்கியமும் இலக்கணமும் மக்களுக்கு இரு கண்ணெனத் தகும். மனித யாக்கைக்கு எல்லா வுறுப்புக்களும் சிறந்தனவே யாயினும், கண்கள், ஏனைய வுறுப்புக்களைக் காட்டிலும் மிகச் சிறந்து பேரெழில் செய்வன வாகும். அவை போல், மக்கள் பயில்வதற்குரிய கலைகள் பல வுளவேனும், இலக்கணம் இலக்கியமாகிய இவ்விரண்டும் ஏனைய கலைகளைக் காட்டிலும் மிகச் சிறந்து, அறம், பொருள், இன்பம், வீடெனும் நான்கையும் திறம் படப் பயக்கும் பான்மைய வாகும். ஆகவே, இவ்விரண்டும் இம்மைக்கும் மறுமைக்கும் பெருந் துணையாம் என்பது இழுக்காகாது.

இலக்கியத்தினின்றும் எடுபட்ட இலக்கணம், இலக்கியத்திற்குச் சிறந்த தொரு வழி காட்டி யாகும். இதன் உயர்வும் பயனும் அளவிடற் கரிதாம். இதன் துணையின்றேல், மக்கள் இலக்கிய மாபெருங் காட்டில் இடருற்று

* உலகநூல்—தருக்கம், வியாகரணம் முதலியன.

† இரட்டைக் கிளவி; பொருளின்மையைக் குறித்து நின்றது.

நிற்பர். இலக்கியத்தில் பொருந்தி யுள்ள விழுமிய பொருள்களையும் சீரிய வுண்மைகளையும் அவர்கள் உள்ள வாறுணர்ந்து இன்புறச் செய்வது இலக்கணமே யாகும். இதன் மாண்பினை,

"*எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப் பானாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

எனவரும் இச் செய்யுள் செவ்விதின் விளக்குவதாகும்.

இலக்கணம் எத்துணைச் சிறந்த தாயினும், இலக்கியத் திற்குக் கருவி நூலாகையால், அறிவுடை மகன், அதனை இலக்கியத்திற்குப் பயன்படு மோர் அளவில் பயில்பவ னவான். அங்ஙனம் பயின்ற அவன், அவ் விலக்கணக் கல்வியின் துணையான் இலக்கியத்துள் சென்று விபரீத ஐயங்களை நீக்கி உறுதிப் பொருளின் உண்மைகளைச் செவ்விதின் உணர்ந்து இன்புறற் குரியன்.

சீரிய வுண்மைகளையும், ஒழுக்கங்களையும் கொண்டு அறிஞரால் பெரிதும் பாராட்டப் படுவதாய்த் தொன்மைச் சிறப்பு வாய்ந்த அரிய நூற்களே இலக்கிய நூற்கள் எனப்படும். நம் முன்னோரின் பழக்க வழக்கங்களையும், அவர்தம் நாகரிக ஒழுக்கங்களையும், அன்னோர் இவ்வுலகிடை தமது வாழ்க்கையைச் செலுத்திய திறனையும் நாமறிந்து இன்புறச் செய்வன, இலக்கிய நூற்களே யாகும். அவை மக்களுக்கு வாழ்க்கையில் உற்ற துணையாய் அமைந்து பெரும் பயன் அளிப்பன வாகும். அழியும் மாலைத்தாகிய இவ்வுலக இயல்பினை மனிதனுக்கு உள்ளங்கை நெல்லிக் கனி போல விளக்கி, அவன் நித்தியப் பொருளில் தன் புத்தியைச் செலுத்திப் பழகுவதற்குப் பெரிதும் பயன்பட்டு நிற்பது இலக்கியமே யாகும்.

**இலக்கிய ஆற்றல்**

* இலக்கணம்

மனிதன், இவ்வுலகிடை பெரியதோர் இடும்பையுற்ற போழ்து, அதனை எதிர்த்து நிற்கும் ஆற்றலின்றிக் குடர் குழம்பி, மனம் வெதும்பி நிற்கும் இயல்பினை மாற்றி, 'பரிதி மண்டிலம் தன்னொளி வழங்காது மறுக்கினும் மறுக்க; முந்நீர்ப் பௌவம் ஒரு நொடிப் போதில் இவ் வையகத்தைத் தன் திரைக் கரங்களால் வாரி வயிற்றிடைப் படுக்கினும் படுக்க; எனது நிலை இஃதே' என்று தனது ஆண்மை சிறிதேனும் வடுப்படா வண்ணங் கூறுதற் கமைந்ததொரு மனத் திட்பத்தை அவனுக்கு அளிக்க வல்லது இலக்கியமே யன்றிப் பிறிதொன் றில்லை.

இலக்கியப் பயிற்சி

இலக்கிய நூற்களை நாம் பயிலுதல் புலத் துறை முற்றிய நம் முன்னோருடன் மன மொன்றி யளவளாவுதலாம். அங்ஙனம் அளவளாவுதலால் அப்பெரியாரின் நேரிய கொள்கைகளையும், சீரிய அறிவினையும் நாம் எளிதின் எய்துதல் கூடும். நமக்கு ஒரு வகையிலும் தீங்கூக்க இயலாத நிலையிலுள்ள அவர், எச்சமயத்திலும் நம்முடன் உரையாடச் சித்தமா யிருப்பர். நமது அறியாமையை அவரறிந்து எங்ஙனெப்பரோ வென்று நாம் அஞ்சுறல் வேண்டுவ தின்று. நாம் அவருடன் அளவளாவிய காலமெல்லாம் விழ் நாள் படாமை நன்குற்றிய தாகும். மனிதனுடைய கருத்துக்களும், செயல்களும் என்றும் அழியாது நிலைத்து விளங்கு மொரு சக்தியை, அவர் முந்நிலையில், நாம் உற்றறியும் உணர்ச்சி பெறுவோம்.

இலக்கிய நூற்களில் பழகாதவர் உலகின் அரிய வுண்மைகளை அறிந்து இன்புறுதல் அருமையே யாகும். இத்தகைய மாந்தர், தம்மைச் சூழ்ந்துள்ள பொருள்களின் உண்மைகளை உணர்ந்து கொள்ளுதற்கு இன்றி யமையாத நுட்ப அறிவினைப் பெற விழைவதும் இல்லை. தம்மைச் சுற்றிலும் உள்ள அப்பொருள்களைப் பற்றிச் சொந்தமாக அவரொன்றுங் கருதுவது மில்லை. அதனால், அவர்கள்

பொருள்களை உள்ளூற நோக்கிடும் சக்தியற்றவ ராகின் றனர். இத்தகைய மக்கள், நம் பழைய இலக்கியப் பனுவல்களைப் பயில்வராயின், அவர்க்குப் புதிய தோர் ஒளி பிறக்கும். அந்நூற்களில் அவர் காணும் உண்மைகள், அவர்தம் கருத்துக்களை அடியோடு மாற்றிவிடும். அவர், புதிய உண்மைகளை அறியுந் தொறும் அவர்தம் பழய கருத் துக்கள், ஒருங்கே மாய்தலுறும்.

**இலக்கியமும் இயற்கையும்**

வாழ்க்கையின் உண்மையை, நாம் நன்கு உணர வேண்டுமாயின், இறைவன் படைப்பில் அமைந்த இயற்கைப் பொருள்களின் இயல்பினை நன்கு அறிதல் வேண்டும். இயற்கையோடு வாழ்ந்து, இயற்கை யழகில் தோய்ந்து, அதன் உண்மையை நன்குணர்ந்த நம் முன்னோர், நாமெல் லோரும் அதில் ஈடுபட்டு இன்புற வேண்டி அதனை இலக்கிய வடிவில் வழங்கி யுள்ளார்.

சங்க காலத்து இலக்கியங்கள் இயற்கையின் மாண்பினை எழிலுறப் புகட்டுவன வாகும். சங்க காலத் திற்குப் பின்னர்த் தோன்றிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலிய இலக்கிய நூற் களும் இயற்கையை ஆங்காங்குப் படிப்போர் பரவச முறப் பாட்டோவிய மாகப் பயந்துள்ளன. இந்நூற்கள், இயற் கையின் தத்துவத்தைக் கற்போர் மனத்தில் இன்பந் ததும்ப இயம்புவன வாகும். இவை, மக்களைச் செம்மை நெறி செலுத்தும் பெற்றியன வாகும். ஆகையால், மக்கள், இவ்வரிய நூற்களையும் இவை போன்ற பிறவற்றையும் உயிரினும் போற்றி, விழுப் பயன் அடைதற் குரியவராவர்.

**வயிறு வளர்க்கும் கலைகள்**

மக்கள் பயில்வதற் குரிய கலைகள் பல. அவை யாவும் சிறந்தனவே யாகும். வானநூல், நிலநூல், விவ சாயநூல் முதலியவை மனிதனுக்கு மிக்க பயனுடையனவே. வயிற்றுப் பிழைப்பிற்கென வமைந்த தொழில்

முறைகளுக்கு இவையும். இவை போன்ற பிறவும் பெரிதும் வேண்டற் பாலனவே யாகும். இக்கலைகளை மனிதன் தேர்தல், வயிற்றுக்குச் சோறிடும் பயனைக் கருதியே யாம்.

கப்பல் தலைவன் ஒருவன், 'இத்துணைத் தூரத்தில் கப்பலுக்கு நேர் வடக்கிலோ, நேர் தெற்கிலோ, இத்தகைய பாறை யொன்றுளது, அதினின்றும் தப்பிச் செல்வதற்கு இந்நெறி யூடு கப்பலை உய்த்திடலே நேர்மைத் தாகும்' என்றுணர்தல் மிக்க முக்கியமாகும். ஆனல், அத்தகைய உணர்ச்சி, நம் போலியர்க்குச் சிறிதேனும் பயன் படுவ தாகாது. அதனைப் பெருமையால் நாம் அவ்வன் பாறையால் தாக்குண்டு அழிதலு மில்லை. இது போன்ற கலைகள் அவ்வத் தொழில் முறையில் வயிறு வளர்க்கும் பயனை வழங்குவ தாகும்.

இலக்கியக் கல்வி, ஏனைய கலைகளைப்போன் றல்லாமல் மக்கட் பிறவி வாய்ந்த அனைவர்க்கும் மிக்க பயனுடைய தாகும். இது வயிற்றுப் பிழைப்பிற் கெனத் தேருங் கலை யன்று. எத்துறை யமர்ந்தோரும் இத்துறையில் இறங்கல் கூடும். எக்கலை பயில்வோரும் இதில் தலைப்படற் குரியவ ராவர்.

நாட்டின் பெருமையை இலக்கியம் காட்டும்

ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தையும், அவர்தம் பெருமையையும் அளந்திடற்குப் பெரிதும் துணை புரிவன, அந்நாட்டில் தோன்றிய அரிய இலக்கிய நூற்களே யாகும். அந்நாட்டு இலக்கிய நூற்களைக் கொண்டே, அங்குள்ள மக்களின் நாகரிக வாழ்க்கை, அறிவின் ஆற்றல், வீரத்தின் விழுப்பம், ஒழுக்கத்தின் ஒட்பம் முதலியவை நன்கு அறியப்படும்.

தமிழர், சிறந்த நாகரிகமும், பரந்த அறிவும் வாய்ந்தவ ரென்று மேனாட் டறிஞர் பலர், போற்றிப் பாராட்டிய தற்குக் காரணம், நம் தமிழ் நாடு அளப்பரும் பெருமை

வாய்ந்த விழுப் பெரும் இலக்கிய நூற்களைக் கொண்டு விளங்கியதே யாகும். அவ்வறிஞர், நம் முன்னோரின் பெருமையை, நம் பண்டைய இலக்கியப் பனுவல்களைக் கொண்டல்லாமல் வேறெவற்றால் அளந்து கூறினர் ?

நம் தமிழகம் ஓவியக் கலையில் தலை சிறந்து விளங்கிய செய்திக்குச் சிறந்த தொரு சான்று பகர்வன, மணிமேகலை முதலிய சீரிய காவியங்க ளன்றோ ? இசை, கூத்து முதலிய கலைகளில் தமிழர் இணை யற்ற அறிவு வாய்ந்தவர் என்பதை இயம்புவன சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற சிறந்த காவியங்க ளன்றோ ?

கலைகள் அறுபத்தி ஞன்கென்பது பல நூற்கள் மூலமாக அறியப்படும்.

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—"

"எண்ணெண் கலையாள்—"

என வருமிவை, அதன் உண்மையை உணர்த்துவன வாகும். ஆகவே, இவ்வறுபத்து நான்கு கலைகளையும் மக்கள் பயில்வதற்கமைந்த பள்ளியாய் நந்தமிழகம் விளங்கின பான்மையை நாமறிவது இலக்கிய வாயிலாக வன்றோ ?

மனிதனுடைய புன்மையை வேர றக் களைந்து, அவனைச் சிறந்த நாகரிகம் வாய்ந்தவனாக்கி இவ்வுலகிடை உயர்ந்த நோக்குடன் விளங்கிடச் செய்வது இலக்கியமே யாகும். அவன் ஈண்டுப் பொய்த் துயிர் வாழாது,

**இலக்கியத்தின் நோக்கம்**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற அப்பொய்யில் புலவன் பொருளுறை தேர்ந்து வாழ, வழி காட்டுவது இலக்கியமே யாகும். இத்தகைய விழுப்பம் வாய்ந்த இலக்கியத்தின் முடிவான நோக்கம், வாழ்க்கையில் மனிதனுக்கு உறுதி பயக்கும் உண்மைகளைச் செவ்விதின்

விளக்கிக் காட்டுதலே யாகும். இலக்கிய நூற்களின் சுவை காணும் அறிஞர், அவை, இந்நோக்கத்தையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டுள்ளதை எளிதின் உணர்தல் கூடும்.

தமிழன்னைக்குச் சிறந்த நூபுரமா யமைந்த சிலப்பதிகாரமாம் சீரிய காவியத்தை, நாமெல்லோரும் பயின்று இன்புற வழங்கிய சேர முனி புங்கவராகிய இளங்கோவடிகள்,

" அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுறுத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரா
னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் "

என்றுறுதி பூண்டு அந்நூலினைத் தொடங்கிய செய்தி, அந்நூற் பதிகத்தால் அறியக் கிடக்கின்றது. இத்தகைய அரிய வுண்மைகளை மக்கள் அறிந்து பெரும்பே றடையச் செய்தலே, இலக்கியத்தின் சிறப்பியல் பாகும்.

# சொல்வன்மை

மனிதன் உலகில் பல்வகை வெற்றிகளைப் பெறுகின்றான். அவை யாவும் அவனுக்கு மிக்கதோர் இன்பத்தைப் பயப்பனவே யாகும். அவனடையும் அவ்வெற்றிகளுள் சொல்வன்மையின் வெற்றியே அவனுக்குத் தலையாய இன்பத்தைத் தரவல்லதாகும். இவ்வின்பத்திற்கு உவமை வேறின்று. இஃதொரு தனிப்பட்ட இன்பமாகும். ஏனைய வெற்றிகள், புகழை வீரனுக்குப் புறத்தே நிகழச் செய்யும். சொல்வன்மையால் எய்தும் வெற்றியோ, அங்ஙன மின்றிப் புகழினைச் சொல்லாளி முன்பே தோற்றுவிக்கும். அவன், தனது வெற்றியை அவையிலுள்ள அறிஞரின் ஒவ்வொரு முகத்திலும் காண்பன்; அவர்தம் களி யாரவாரத்தைக் கண்டு கழிமகிழ் வெய்துவன். ஒரே காலத்தில் அவையிலுள்ளார் அனைவரையும் களிக்கச் செய்து அதனால் தாமுங் களிக்கின்ற இந்நிகழ்ச்சியைக் கற்றோர் பிறிதொன்றால் பெறுதல் அரிதாகும்.

இத்தகைய இன்பத்தைப் பெறுதற்கியலாதார் கல்வி, எனைத் துணையதேனும் எழிலற்றதாகும். பல நூற்களை அவர் கற்றறிந்தும் அந்நூற் பொருளினைப் பிறர்க்கு எடுத்துரைக்க இயலாத தன்மையால் அவர் கல்வி, மண மற்ற மலரினை யொக்கும். மணமில்லாத மலர், மக்களால் போற்றப்படாதது போல், அவர்தம் கல்வியும் மதிக்கப்பட மாட்டாது. கற்றோர்க்கு இவ்வன்மை பொருந்துமாயின் அவர் கல்வி, பேரழகு வாய்ந்து பொலிவினைப் பெறும். கற்றோர்க்கு இஃதொரு சீரிய செல்வ மென்னலாம்.

கல்விக் கழகு சொல்வன்மை

"மாணவை மண்ணுறுத்தும் செல்வமும் உண்டு சிலர்க்கு" என்றார் பிறரும். 'செல்வமும்' என்னும் அப்

பதத்திலுள்ள உயர்வு சிறப்பும்மை அச் செல்வத்தின் மாண்பையும் ‘சிலர்க்கு’ என்னும் சொல், கற்றோர் பலர் அதனைப் பெருமையையும், மிக்க சுருக்கமாகவும் விளக்கமாகவும் உணர்த்துதல் நாம் ஈண்டு நோக்கி இன்புறற்பாலதாம்.

வாக்குண்டாம்

கல்வி கற்போர், விநாயகப் பெருமானைத் தொழுதலால் அடையும் நன்மைகளை முறைப்படுத்திக் கூறிய ஔவையார், ‘வாக்குண்டாம்’ என்று தமது நூலின் கடவுள் வாழ்த்தைத் தொடங்கிக் கற்போர் கல்வியால் எய்தும் நலன்கள் பலவற்றுள்ளும் வாக்கு வன்மையே மிகச் சிறந்ததொரு நலன் என்பதை மாணவர் உய்த்துணர வைத்தனர்; இன்னும், அவ்வாக்கு வன்மையின் மாண்பினை மாணவர்க்குத் தெற்றெனப் புலப்படுத்த வேண்டி அந்நூலுக்கு ‘வாக்குண்டாம்’ என்ற பெயரையே வழங்கினர். இதனால், அறிவும் அநுபவமும் ஒருங்கே முதிர்ந்த அவ்வம்மையார், வாக்கு வன்மையை எத்துணை உயர்வாக மதித்தனர் என்பது நன்கு விளக்கமுறும்.

இயற்கைக் கொடை

சொல்வன்மையை, கற்றோர் ஒவ்வொருவரிடத்தும் நாம் காண்டலரிது. இஃது ஒரு சிலரிடத்து மட்டும் சிறந்து பொலியக் காண்கின்றோம். மனிதன், பல கலைகளை முயற்சியால் கற்றல் கூடும். ஆனால், சொல்வன்மையை அங்ஙனம் எண்ணிக் கற்றல் இயலாததாகும். இதனை இயற்கையாக வாய்க்கப் பெறாதவர், பல்காலும் வருந்திப் பயின்றாலும் பெறுதல் அருமையாகும். பலர், இதனை வருந்திப் பயின்றும் பெறுதற்கின்மையே, இஃதோர் இயற்கைக் கொடையென்பதை நன்கு வலியுறுத்துவதாகும்.

திருவள்ளுவர் சொல்வன்மையைத் தமது நூலின்கண் அங்கவியலுள், அமைச்சு என்னும் அதிகாரத்திற்கு அடுத்து அமைத்துள்ளார். இவ்வமைப்பிற்குப் பரிமேலழகியார், “அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றால்

அமைச்சியல் நடத்தற் கேதுவாய சொற்களைச் சொல்ல வல்லனாதல். மேல், 'ஒருதலையாச் சொல்லலும் வல்லது' என்றதனையே சிறப்புப் பற்றி விரித் துரைக்கின்றமை யின், இஃது அமைச்சின் பின் வைக்கப்பட்டது'' என்று காரணங் காட்டுவர். இதனால், சொல்வன்மை, அமைச் சர்க்குப் பெரிதும் வேண்டற்பால தென்பது போதரும்.

**வள்ளுவரும் சொல்வன்மையும்**

அற நிலை வழுவாது அரசியல் நடாத்தும் அரசனைச் சூழ்ந்து ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும் நம் தமிழ் நாட்டில் விளங்கின செய்தியைச் சிலப்பதிகாரம் முதலிய நூற்கள் கூறுகின்றன. நாட்டின் நலத்தைப் பெருக்கு தற்கும், தீமைகள் நாட்டின்கண் புகாத வண்ணம் ஓம்பு தற்கு முரிய முறைகளைப் பற்றி ஆராயும் மன்றங்கள் பல அக்காலத்தில் இருந்தன வென்பதும், அம் மன்றத்தாருக்கு அரசாங்க முறைகளை எடுத்துக் கூறி அவர்தம் ஆதரவு பெற்றிட அமைச்சர், பேசுந் திறமை வாய்ந்தவராக விளங் கினர் என்பதும், நம் பண்டைய நூற்களால் அறியப்படும்.

இக்காலத்திலும் சட்ட சபைகளிலும் மற்றைய சபை களிலும் அரசாங்க முறைகளைத் தெளிவாகவும் உறுதி யாகவும் எடுத்துப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்களையே அமைச்சர்களாகத் தேர்தலை நாம் காண்கின்றோம். இது போலவே அக்காலத்திலும் அருஞ் சபைகள் பல இருந் தமையால்தான் சொல்வன்மை, அமைச்சர்க்குரிய ஆற்றல் கள் பலவற்றுள்ளும் தலையாய் விளங்கும் தகுதி பெற்றது போலும்.

திருவள்ளுவர், அமைச்சனது இயல்பினை விளக்கு மிடந்தொறும் சொல்வன்மையை அவற்கு இன்றியமையாத ஆற்றலாகக் குறித்துச் சென்றனர். உலகம் புரந்திடும் உத்தம அரசர்க்குத் துணையாய் அமையும் அமைச்சர், அவை யஞ்சாதிருக்க வேண்டு மென்றும், அவையின் குறிப் பறிந்து பேசுதல் வேண்டு மென்றும், சொல்வன்மை யுடைய

ராதல் வேண்டு மென்றும் அவர் பலவிதமாக வகுத்துக் கூறினர்.

கற்பவை கசடறக் கற்றறிந்து அதன் வழி நிற்கும் பெரியாரே, பிறர்க்கு உறுதிப் பொருளை உரைத்தற் குரிய ராகையால், சொல்வன்மை அமைச்சர்க்கே யன்றி இவர்க் கும் ஒருதலையாக வேண்டப்படுவது கருதி, நாயனர், கல்வி யென்னும் அதிகாரத்தில் புலவர் தொழிலை,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்"

என்று வரை யறுக்கும் குறட்பா, நாம் ஈண்டு ஆராய்தற் குரிய தொன்றும்.

புலவர், யாவரும் விரும்பும்படி உரையாடி நீங்குழி, அவர் மொழி கேட்டு இன்புற்ற அனைவரும், இத்தகைய பெரியாரை இனி எக்காலத்துக் காண்போம் என்று பெரிதும் இரங்குவர்; பல நாட்கள் சென்ற பின்னரும் அப் புலவரையே நீடு நினைந்து அவர்தம் கூட்டத்திற்கு மிகவும் உருகி நிற்பர். இங்ஙனம், கேட்போரைப் பிணிக்கும் ஆற்ற லமைந்த புலவரையே மேற்குறித்த குறட்பாவால் தெய்வப் புலவர், குறிக்கின்றுராகையால், கல்வியாளர்க்குச் சொல் வன்மை எத்துணை வேண்டற் பால தென்பது சொல்லாதே பெறப்படும்.

ஒருவர், பல நூற்களையுஞ் செவ்விதின் பயின்ற பான் மையால் நிறைந்த கல்வியும், பரந்த அறிவும் படைத்தவரே யாயினும், சொல்வன்மை யொன்றினை வாய்க்கப் பெறுரா யின், அவர் கல்வி, சிறப்பற்ற தென்பதைக் குறளாசிரியர்,

"*இணருழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்"

என்று இயம்புகின்றுர். இக்கருத்தினைத் தழுவியே போலும், 'பொன் மலர் நாற்ற முடைத்து' என்றுர் பிறரும்.

* கொத்தின் கண்ணே மலர்ந்திருந்தும்

திருக்குறளின்கண், கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, அவை யறிதல், அவை யஞ்சாமை என்னும் அதிகாரங்கள் தோறும் சொல்வன்மையை வெகு அழகாகக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும், நாயனார் உணர்த்திச் செல்லுதல் பயில்வோர்க்குப் பெரிதும் இன்பம் பயப்ப தாகும். இங்ஙனம், பொதுமறை ஆசிரியர் பல இடங்களில் அவ்வன்மையை வற்புறுத்திப் பேசுதலால், அஃது எத் துறையிலுள்ள அறிஞர்க்கும் இன்றி யமையாத தென்பது விளக்க முறும்.

திருவள்ளுவர், சொல்வன்மைக்குச் சிறந்த தோர் எடுத்துக்காட்டாய் விளங்குபவர் என்பதற்குத் திருக் குறளே சான்று பகரும். சொல்வன்மையின் எல்லை கண்ட அப்பெரியார்க்கு உலகம், இஃதறிந்தே செந்நாப்போதார் என்னு மொரு காரணப் பெயரை வழங்கியது போலும்.

சொல்வன்மை சிறக்கப் பெறுதற்கு விதிகள் பல வுள. அவ்விதிகளுள் தலையாயவை, ஒருவர், சொற் பொழிவிற் கென எடுத்துக் கொண்ட பொருளைச் செவ்விதின் உணர்தலும், அங்ஙனம் உணர்ந்த பொருளை அவைக்குச் சிறி தேனும் அஞ்சாது தெளிவுறக் கூறுதலுமே யாம். உரை யாளன், தன்னால் உரைக்கப்படும் பொருளை நன்கு உணர்ந் திருந்தாலன்றி, அதனைக் கொள்வோர் கொள்ளும் வகை வழங்க லரிது. ஒருவர், பொருள் உணர்ச்சி நன்கு பெற்ற வரே யாயினும், அறிஞர் நிறைந்த அவையைக் கண்டு தடு மாறுளத்தராய் மெய் விதிர்த்து நிற்பரேல், அவ்வுணர்ச்சி யால் யாதொரு பயனையும் பெறுபவராகார். அவை யஞ்சுவார் கல்வி, பகை யகத்துப் பேடி கைக் கொண்ட வாள் போல் பயனற்றுக் கழியும் என்பது ஒருதலை. இது நோக்கியே வள்ளுவர் அவை யஞ்சாமைக்குத் தனித்த தோர் அதிகாரத்தை வகுத்தனர் போலும். கற்றறிந்தும் அவை

அவை யஞ்சாமை

யஞ்சுவாரை,

> "கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
> நல்லா ரவையஞ்சு வார்"

என்று நாயனார் மிகத் தாழ்த்திக் கூறுதல், ஈண்டு நாம் உணர்தற் பாலதாகும்.

**கேட்போரைப் பிணித்தல்**

பொருளினை நன்கு உணர்தலும், அவை யஞ்சாமையு மாகிய இவ்விரண்டையும் ஒருவர் பெற்ற துணையான் சொல்வன்மையை எய்திவிடுவ ரென்று எண்ணுதல் கூடாது. ஆனால் இவ்விரண்டும் சொல்வன்மைக்குப் பெரிதும் துணை புரிவனவாகும். இவ்விரு துணையைப் பெற்றவர், தம்முடைய கருத்துக்களை நேரிய வார்த்தைகளாம் வண்ணத்தால் தீட்டிக் கேட்போர் மனத்தில் மெல்லப் புகட்டுதலே சொல்வன்மை யெனப்படும். இஃதே கேட்போரைப் பிணித்தலாகும். கேட்போர் உள்ளத்தைப் பிணிக்க விரும்புவோர் மனம், எடுத்துக் கொண்ட பொருளில் நன்கு ஒன்றுதல் வேண்டும். அங்ஙனம் அவர் மனம் அப்பொருளில் ஒன்றினாலன்றி, அவர், கேட்போர் மனத்தைத் தாம் கூறும் பொருளில் பொருந்தச் செய்தல் இயலாததாகும்.

**பேச்சும் ஒழுக்கமும்**

ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுபவர், தாம் ஒழுக்கத்தில் மனம் ஒன்றப் பெருதவராயின், சொல்வன்மையை எய்துதல் அரிது. ஆனால், சொல்வன்மை கொண்ட பலர், ஒழுக்கமற்றவராயிருப்பினும், கேட்போரைத் தாம் கூறும் ஒழுக்க இயல்பில் அவர்தம் மனம் ஒன்றச் செய்தலைக் காண்கின்றோம். இவர்தம் சொல்வன்மையின் காரணம், ஒழுக்கமாகிய அப்பொருளில் இவர் மனம் ஒன்றி யிருத்தலே யாமாயின், இவர் ஒழுக்கமற்று நடத்தற்குக் காரணம் யாதென்று வினவலாம். ஒழுக்க நெறியைப் பற்றிக் கேட்போரைப் பிணிக்கும் வகையில் பேசுமிவர், தாம் பேசும் அவ்வமயத்து உண்மையில், ஒழுக்கத்தில் வயப்பட்டே

விடுகின்றனர். ஆகவே ஒழுக்க உணர்ச்சியால் இவர், திடமாக ஆவேசங் கொண்டு கட்டுரைச் சுவை படச் சொற் பொழி வாற்றுவர். சொற்பொழிவு முடிந்ததும், அந்தோ! ஒழுக்க உணர்ச்சி இவர்தம் உள்ளத்தை விட்டு அறவே நீங்குவதாகும். இவர், பேசிய வண்ணம் ஒழுகாமைக்குக் காரணம், இஃதே யாகும்.

மக்களின் மனத்தை விழுப்ப முறச் செய்யாத சொற் பொழிவு யாவும், சொல்வன்மை கொண்டன வாகா. உருக்க மான சொற்பொழிவு, உண்மையில் கேட்போர் மனத்தைத் தாக்கி அதனை மாண் புறச் செய்யும். இத்தகைய ஒழுக்க இயல்பு சொல்வன்மையின் ஓர் உறுப்பாகும்.

**சொல்வன்மையின் பண்பு**

சொல்வன்மையை நாம், ஒருவர் பேசும் சொற்களில் காண்டல் தவறும். அது சொலப்படும் பொருளில் கிடப்ப தொன்றுகும். அரிய கருத்துக்களைப் பெரிய நடையில் அமைத்தலும் சொல்வன்மை யாகாது. அவ்வரிய கருத் துக்களே, எளிய நடையில் அமைக்கப்படுமாயின் அஃதுண் மையில் சொல்வன்மையைக் கொண்டதாகும்:

சொல்வன்மையைப் பெற முயல்வோர் முதன்மை யாகப் போதிய அளவில் கல்வியில் தலைப்படல் வேண்டும். சொல்வன்மைக்குக் கல்வியே முதற் காரணமாகும். கல்வி நல மில்லாதார் அவ்வன்மையை ஒரு நாளும் எய்தார் என்பது ஒருதலை. சிலர் கல்வியில் சிறிது தலைப்பட்டதும் தம்மைத் தாமே அதிகமாக மதித்துக் கற்ருேர் நிரம்பிய அவையின்கண் உரை யாடப் பெரிதும் விரும்புவர். இவர் செயலை விலக்குவான் வேண்டித் திருவள்ளுவர்,

**கல்வியும் சொல் வன்மையும்**

"அரங்கின்றி * வாட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் † கோட்டி கொளல்"

* வட்டாடல் - உண்டை யுருட்டல்

† கோட்டி கொளல்-அவையின்கண் ஒன்றினைச் சொல்லுதல்

"கல்லா தவரு நனிநல்லார் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்"

"கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்"

என்று மும்முறை வற்புறுத்திக் கூறி யுள்ளது, ஈண்டு நாம் ஒப்பு நோக்கற் பாலதாம்.

சொல்வன்மைக்கு அடிப்படை, கல்வியே என்பதை நீதிநெறிவிளக்க ஆசிரியர்,

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே ஈர்ங்கவியாச்—சொல்வளம்
* மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு"

என்ற வெண்பாவால் குறிப்பாக உணர்த்திச் சென்றார்.

நிரம்பிய கல்வியே, ஒருவர்க்குத் தெளிந்த அறிவினைப் பயப்பதாகும். தெளிந்த அறிவினைப் படைத்தவரே, தாம் உணர்ந்தவற்றைப் பிறர்க்குத் தெள்ளிதின் உரைக்க வல்லார். அவரே, தமது சொற்பொழிவால் கேட்போர் மனத்தைத் தாம் கூறும் பொருளில் ஒன்றச் செய்து அவரைத் தம் வயப்படுத்தற் குரியர்.

உண்மை அரசியல்

மக்கள் மனத்தை ஆளும் அரசியல் செய்கையே, சொல் வன்மையாம் என்று சொல்வன்மைக்கு இலக்கணம் கண்டனன், ப்ளேடோ (Plato) என்னும் ஒரு மேனாட்டுப் பேரறிவாளி. சொல்வன்மை பெற்ற ஒருவன், உண்மையில் அரச நிலை வகிப்பவனாவான்.

அவையிலுள்ளார் உவக்கு மாறு ஒருவர், செவ்விதின் ஒரு கதையைச் சொல்லும் திறமை, சொல்வன்மை யாகாது. அவையின்கண் காரண காரியங்களை முறைப் படக் காட்டித் தர்க்க வாயிலாகப் பொருள் நிண்ணயம் செய்தலும் சொல்வன்மை யாகாது. அறிஞர் குழுமிய அவையின்கண்

* மல்லல் வெறுக்கை - மிகுதியான செல்வம்

அரச நிலையை வகித்தலே உண்மையில் சொல்வன்மை யெனப்படும். அவ்வன்மையின் ஆற்றல், இசைக் கருவி யொன்றில் கைபோய ஒருவர் செயல் போன்றதாகும். அரச நிலை வகிப்பவர், கேட்போர் எத்துணைச் சினமுற்றிருந்த போதிலும் அவரைத் தமது சொல்லாற்றலால் அமைதி பெறச் செய்வர்; திடீரென அவரை நகும்படிச் செய்வர்; உடனே அதனை மாற்றிக் கண்ணீர் வடிக்கவும் செய்வர்; தமது விருப்பம் போல் அவரை இயக்குவர். பல ஆண்டுகளாக அவர் திடமாக நம்பி யிருந்த கொள்கைகளைச் சொற்ப நாழிகையில் அடியோடு மாற்றுவர்; அவை யகத்தாரைத் தம் வய மாக்கித் தாம் ஏவினவற்றை அவர்கள் புரிந்திடச் செய்யும் வல்லமை வாய்ந்தவராவார். இஃதே அவர் பெறும் அரசியல் வல்லமை யாகும். இதனையே அறிஞர், உண்மை அரசியல் என்ப. இவ் வல்லமையைப் பெறுதலே, சொல்வன்மையின் முடிவான நோக்கமாகும்.

சொற்பொழிவாளன், சிறிதள வேனும் கவித்துவம் வாய்க்கப் பெற்றவனுதல் வேண்டும். மக்களின் மனம் இயல்பாகவே அலங்காரத்தில் ஈடு படுவதாகும். மிக்க சாதாரணமான கருத்தும், உவமை முதலிய அணிகளால் அலங்கரிக்கப்படுமாயின், அவர் மனம் அக்கருத்தில் பெரிதும் ஒன்றுவதாகும். அங்ஙனம் ஒன்றிய மனம், புதிய தோர் உணர்ச்சி பெற்று இன்புறும் பெற்றியதாகும்.

**சொல்வன்மையும் அணியும்**

அணியால் அலங்கரிக்கப்பட்ட கருத்துக்கள், மக்களின் மனத்தை விட்டு எளிதின் அகல்வ தன்று. இதனுலன்றே அணி யிலக்கணம் கவிக்குப் பெரிதும் வேண்டற்பாலதாயிற்று. பணியால் அலங்கரித்துக்கொள்ளாத ஒரு பெண் பிறரைப் பெரிதும் தன் வயப்படுத்த இயலாத வாறு போல், அணி யிலக்கணத்தால் சிறக்கப் பெறுத கவியும் படிப்போரைத் தன் வயப்படுத்தப் பெரும்பான்மையும் இயலாத

தாகும். ஆகையால் கவி, அணியின் துணையான் மக்களின் உள்ளத்தை ஈர்த்திடும் பண்பினதாகும். கேட்போரைத் தம் வயப்படுத்த விரும்பும் சொற்பொழிவாளர், கல்வி யோடு கவித்துவமும் பெறுவரேல், அவர்தம் சொற் பொழிவு சிறந்திடும் என்பது சொல்லவும் வேண்டுமோ?

உரையாளர்தம் திறவுகோல்கள்

சொற்பொழிவாளர்க்குத் திறவு கோல்களாய் அமை வன, ஞாபக வன்மை, பொருளைக் கூறும் முறை, அலங் காரம், கேட்போர் அறிவை விளக்கும் திறன், பொதுப்படப் பேசுந் தன்மை, நகை, விகடம், சோகம் முதலியனவாம். இவற்றின் துணை கொண்டு உரையாளர், கேட்போர் உள்ளத்துச் செல்லுதல் இயலும். சொல்வன்மைக்கு இவை பெரிதும் துணை புரிவன வாகும். ஆகையால், உரை யாளர், இவற்றை நன்கு போற்றிடல் வேண்டும்.

சொற்பொழிவாளரின் ஒழுக்கம்

சொற்பொழிவாளர் கைக்கொள்ள வேண்டிய விதிகள் பலவற்றுள்ளும், முதலாவதாகக் கருதப்படுவது, குறித்த காலத்தில் அவையைச் சார்ந்திடலே யாம். தமது வருகையைக் கேட்போர் எதிர்ப் பார்க்கச் செய்து அவர்தம் ஊக் கத்தைக் குறைத்தல், உரையாளர்க்கு ஏற்புடைத் தன்று. குறித்த காலத்தில் அவையைச் சார்ந்து, இனிய வார்த்தை களால் கேட்போரை விளித்துச் சொற்பொழிவைத் தொடங்கல் வேண்டும். நீண்டதோர் அவை யடக்கம் வேண்டுவ தின்று. அருவருக்கத் தக்கனவும் வேண்டாதனவு மான உவமைகள் பல கற்பித்துத் தமது அவை யடக்கத் தைப் பெருக்குதல் முறை யறியாதார் செயலாகும். அவை யடக்கத்திற்காக ஒருவர், அரை மணி நேரம் பேசுவராயின் அவரை அறிவுடை உலகம் அருவருக்கும் என்பது திண் ணம். உரையாளர், தமது அடக்கத்தை அவையின்கண் உள்ளார்க்கு அறிமுகப்படுத்த விரும்புவரேல், அதனைத் தமது அடக்கமான பேச்சின் மூலமாய் உணர்த்தல் சாலச்

சிறந்ததாகும். அவை யடக்கத்திற்காகத் தம் மருங் காலத்தைப் போக்குவாரின் சொற்பொழிவில், அவர்தம் அடக்கத்தை நாம் காண்டலரிது. அவர் அவையை அடக்குவார் போலும்.

இரண்டாவதாக, பேசுபவர் அங்கச் சேட்டை முதலியவற்றை அறவே ஒழித்தல் வேண்டும். அவை, கேட்போர் நகுதற்குக் காரணமாகும். ஆகையால், அவைகளை முற்றிலும் நீக்கி அமைதியாகப் பேசுதல் வேண்டும் அங்கச் சேட்டையை ஒழித்தல் வேண்டுமென்றதால் உரையாளர், ஒரு பாவையைப் போல் நின்று பேசுதல் வேண்டுமென்பது கருத்தன்று. அவர், தமது கூற்றுக்குப் பொருத்த முற அவயவங்களை இயக்குதல் நேர்மைத் தாகும். அங்ஙனம் செய்தல். உரைக்கப்படும் பொருளை நன்கு விளக்கிக் காட்டுதற்குப் பெரிதும் துணை புரியும்.

சொற்பொழிவாளர், தமது பார்வையை அவையிலுள்ளார் அனைவர் மீதும் செலுத்துதல் வேண்டும். சிலர் ஆரம்ப முதல் இறுதி வரை ஒரு பக்கத்திலுள்ளாரையே பார்த்து உரை யாடுவர். அதனால், பலர்க்குச் சொற்பொழிவில் உற்சாகம் பிறவாது. பேசுபவர் கேட்போர் அனைவரையும் பார்த்துப் பேசினாலன்றித் தாம் கூறுமவற்றை யாவரும் ஊக்கத்துடன் கேட்கின்றார் என்பது எங்ஙனம் அறிதல் கூடும்? கேட்போர் மன நிலையை அவர்தம் முகக் குறிப்பால் உரையாளர், உணராத போது அவர், சொற்பொழிவால் அடையும் பயனை அடையா தொழிவர்.

சொற்பொழிவு நிகழுங் காலை யாதேனுமொரு இடையூறு நேருமாயின், அதன் நிமித்தம் கட்டுரையாளர், தமது சொற்பொழிவை நிறுத்திவிடுதல் கூடாது. தம்மால் கூடிய வரை சொற்பொழிவை ஆற்றுதற்கு முயல்வதே மாண்புடையதாகும்.

**கட்டுரை யாற்றிக் கண்ணீர் வடித்த பெரியார்**

ஒரு மா பெருங் கூட்டத்திற் கிடையே சிறந்த தொரு சொற்பொழி வாற்றிக் கொண்டிருந்த ஒரு மேனுட்டுப் பேரறிஞர்க்குத் தந்தி யொன்று வந்ததாகவும், அவர் அத் தந்தியை வாங்கி அதன் உட் பொருளை அறிந்துகொள்ளு தற்குச் சிறிதேனும் விழையாதவராய், அதனை உடனே தமது சட்டைப் பையில் இட்டுக்கொண்டு சொற்பொழிவை ஒரு மணி நேரம் மிக்க அழகுடன் நடத்தி முடித்த பின்னர்த் தாமொரு தனியிடம் சென்று, கண்ணீர் வடித்துக் கலங்கிய தாகவும், அத்தந்தி அவருடைய அருமந்த மகனது மரணச் செய்தியை அறிவித்ததாகவும், ஒரு மேனுட்டுப் பத்திரிகை அறிவிப்பது, நாமெல்லோரும் வியத்தற் குரிய தொன்றும். அவ்வறிஞரின் மனத் திட்பத்தை நாம் என்னென்று எடுத்துக் கூறுவது! கடமையை யாற்றுதலில் அவர் மனம் எத்துணை அழுந்தி யிருத்தல் வேண்டும்!

உரையாளர், தம்மால் இயன்ற அளவு, தமது சொற் பொழிவைத் தடை யின்றி முடிப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டு மென்பதை மறத்தலாகாது.

ஒரு பொருளைப் பற்றிப் பேசும் போது சொல்லாளி, அதன் சம்பந்தமாய் மற்ருென்றினைப் பற்றி விரித்துக் கூறுதல் ஏற்புடைய தன்று. எடுத்துக் கொண்ட பொருளை நன்கு விளக்குவான் வேண்டி, அரிய மேற்கோள்களையும் பொருத்தமான செய்திகளையும் எடுத்துக் கூறலாம். ஆனல், அவைகளைப் பற்றி நீண்ட நேரம் பேசுதல், சொற்பொழி விற்கென எடுத்துக் கொண்ட பொருளுக்குப் பெருந் தீங்கினைப் புரிவதே யல்லாமல், கேட்போர் செவிகளை வெதும்பச் செய்தலுமாகும்.

**மற்ருென்று விரித்தல்**

குறித்த நேரத்திற்குள் கட்டுரையாளர், தமது சொற் பொழிவை முடிவுறச் செய்தல் வேண்டும். தமக்குக் கொடுக்கப்பட்ட கால வரை யறையை அவர், ஒரு நாளும் மீறுதல் கூடாது. அவர், கால வரை யறையைக் கடப்ப

ராயின், கேட்போர் மனம் சொற்பொழிவில் செல்லாது.

**காலத்தைக் கடந்து கட்டுரை யாடல்**

ஆகவே, சொற்பொழிவு பயனற்று வீணுய்க் கழியும் என்பது ஒருதலை. கால வரை யறையைக் கடந்து உரை யாடுபவர், தாமெடுத்துக் கொண்ட பொருளைக், குறித்த கால அளவில் முடிக்குமாற்றல் அற்ற வர் என்பதைத் தாமே பறை யறைந்து சாற்றுபவராவர்.

சொற்பொழிவாளர், அவை கலையும் வரை அவைத் தலைவரின் ஆணைக்கு உட்பட்டவர் என்பதை மறக்க லாகாது.

**கட்டுரையாளரும் அவைத் தலைவரும்**

அவைத் தலைவர், கட்டுரை யின் குற்ற நற்றங்களை அவையோர்க்கு எடுத்துக் காட்டும் கடப்பாடுடையர். அவர், தமது முடிவுரையில் உரையாளரின் ஒவ்வாக் கருத் துக்களை மறுத்துக் கூறுவரேல், அதற்கு உரையாளர், பிணங்கி அவர் கூற்றை ஆங்குக் கண்டித்துக் கூறல் ஒழுங் கீனமாகும்.

உரையாளர், சொல்வன்மையால் எத்துணைச் சிறந்தவ ரேனும், தாம் அவையின்கண் அநுசரிக்க வேண்டிய முறை களையும் கடமைகளையும் கைப்பற்ருரெனின், தமது வாக்கு வன்மையால் பெறுதற் குரிய பயனை இழப்பவரே யாவர்.

THE MADURA TAMIL SANGAM

## கவியும் கற்பனையும்

இவ்வுலகில், மனிதன் விரும்புவது இன்பமேயாகும். வாழ்க்கையில் ஒரு சிறிதும் இன்பமில்லையாயின், அவன், உலகிடை வாழ விரும்பான்; தற்கொலை புரியவும் முயலுவன்.

மனிதன் இன்பத்தைப் பெற வேண்டி இவ்வுலகில் படும் பாடு இத்துணை யென்று இயம்புதற் கியலாது. பகலெல்லாந் தேய்ந் தொழிந்த யாக்கையின் சக்தியை உயிர்ப்பிக்கும் துயிலையும், அவன் பன்னாட்கள் இழந் தேனும் பல்வகைத் துறையில் உழைத்தல் இக்காலத்தில் கண்கூடு.

பொருளை யீட்டுதலே வாழ்க்கையில் பெறுதற் கரிய தோர் இன்பமென் றெண்ணி வர்த்தகத் துறையில் உழைப் பார் ஒருசிலர். உலகம் தம்மை மதித்தலே சிறந்ததோ ரின்ப மென்றுன்னிப் பல விதப் பட்டங்களைப் பெறுவான் விழைந்து, அரசியல் முதலிய துறைகளில் வருந்தி யுழல்வார் மற்றொரு சாரார். இங்ஙனம், மெய் வருத்தம் பாராமலும், கண் துஞ்சாமலும், கருமமே கண்ணாக உழைக்கும் இவர் பெறும் இன்பம்தான் யாதோ வெனின், அஃதொரு போலி யின்பமே யாகும். இப் போலி இன்பத்திற் குழைக்கும் இவர் நிலையிருந்தவா றென்னே!

மனிதன் பெறுதற் குரிய உண்மை இன்பத்தைக் கவி யும், காவியமும் வழங்குவதைக் கைவிடுத்து, * ஞமலி பசையற்ற எலும்பைக் கொளவுதலைப் போன்று, உண்மை யில் இன்பமே எட்டுணையும் வாய்ந்திடாத துறைகளைப் பற்றி யுழன்றிடும் இக்காலத்தவர் நிலை வித்தகர் மிகவும் வருந்தற் குரிய தாகும்.

---

* நாய்

ஞமலி நிலை யெய்தப் பெற்ற மக்களுக்குக் கவியும் காவியமும் இன்பத்தைப் பயப்பன வாகா. இவர் நிலை யறிந்தே போலும், சமீப காலத்திருந்த வீ. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், தாமெழுதிய 'மதிவாணன்' என்னும் புதுவது புனைந்த செந்தமிழ்க் கதையின் உரிமை யுரையில்,

"தேனினு மினிய செய்யுள் யாத்திடினும்
செந்தமி ழுரைவகுத் திடினு
மேனெனக் கேளாதிருக் குமிந்நாள்—"

என்று இக்காலத்திற்குப் பெரிதும் இரங்கா நின்றனர்.

குதிரைப் பந்தயத்திலும் படக் காட்சியிலும் ஏனைய போலி யின்பத் துறைகளிலும் மனத்தைச் செலுத்துவோர், கவிகளின் இன்பத்தை எங்ஙனம் பெறுதல் கூடும். இயற்கை யின்பத்தை எளிதின் ஈய வல்ல கவிகளைக் கற்க அவர்க்குப் பொழுதுதான் ஏது? வயிற்றை வளர்த்தற் குரிய பல் வகைப்பட்ட தொழில் முறைகளில் காலை முதல் மாலை வரை யுழைத்துப் பின்னர் பயனற்ற காரியங்களிலும், வீண் பேச்சிலும், அப்பேச்சால் விளைந்திடும் வெறும் சண்டை யிலும் தலைப்படுவோர், கவிகளின் உண்மை இன்பத்தை எங்ஙனம் உணர்தல் கூடும்?

உண்மையான இன்பத்தைப் பெற விரும்புவோர்க்கு இவ்வுலகில் கவிகளே கதியாகும். அறிவினுக்குச் சிறந்த தோர் உணவினை யூட்டி உள்ளத்தைப் பண்புறச் செய்து, பண்புற்ற அதனைப் பரவசப்படுத்துவன கவியும், அவை கொண்ட கற்பனையுமே யாம். மனிதன் வாழ்க்கையில் முன்னேற்ற மடைய, இவை பெரிதும் துணை புரிவன வாகும். இவற்றின் துணையினைப் பெறுதார் முன்னேற்றம் முன் னேற்றம் என்று முழங்குவ தெல்லாம் வீணே. இதன் உண்மையை நன்கு உணர்வதன் முன்னர்க் கவிகளின் திறத் தினைச் சிறிது ஆய்வாம்.

பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பு, மக்கள், நாகரிக மற்று வாழ்ந்த நாளில், அவர்கள், பொருள் நிரம்பா அரை குறை வார்த்தைகளால் தம் கருத்துக் களை அறிவித்து வந்தனர். அறிவு, வளர வளர, அவர்கள் நாகரிக வுணர்சி பெற்றுத் திருந்திய சொற்களால் தம் கருத்துக்களைத் தெரிவிக்க லாயினர். அங்ஙனம், அவர்கள் திருத்த முறப் பேசிய காலத்து, அவர்தம் பேச்சு, எழுத்து வடிவம் பெற்று, உரை நடை யாயிற்று. மனித அறிவின் வளர்ச்சி உன்னத நிலையை உற்ற போது செய்யுள் என்பது தோன்றலாயிற்று. ஆகையால், உலகில் செய்யுள் தோன்றிய காலத்தை ஆராய்ச்சியாளர் ஒருவகையாக நிலை நாட்டுதல் கூடும். ஆனால், உரை நடை தோன்றிய காலத்தை நிறுவல் அரிதாகும்.

செய்யுளும் உரை நடையும்

சிறந்த முறையில் திருத்த முறச் சொற்களை அமைக்கும் அமைப்பை, உரை நடை யென்ப. மிகச் சிறந்த சொற்களை மிகச் சிறந்த முறையில் இசை இன்பம் பொருந்து மாறு அமைக்கும் அமைப்பைச் செய்யுள் என்ப.

செய்யுள், எதுகை மோனை முதலிய அமைப்பால், கற்போர், அதன் கருத்து, பொருள், அழகு முதலியவற்றை எளிதில் தம் மனத்தில் பதிவு செய்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படுவ தாகும். இக் காரணம் கொண்டே, ஆதியில் அறிஞர், மக்களின் வாழ்க்கைக்குப் பெரிதும் துணை புரியும் அருங் கருத்துக்களைச் செய்யுளில் அமைக்கத் தலைப்பட்டனர்.

செய்யுளின்கண் அமைந்துள்ள ஒவ்வொரு சொல்லும் செவ்விதின் மீட்டிய யாழைப் போன்று இன்ப வொலியைத் தோற்றுவிக்கும் பண்பிற்றாகும். இப்பண்பினை நாம் உரை நடையில் காண்டல் அரிது. படிப்போரைப் பரவசப் படுத்திப் புதியதோர் உலகிடை உய்த்தலே செய்யுளின் ஆற்றலாகும். இவ்வாற்றலை உரை நடை பெறுவ தின்று. செய்யுளின் இலக்கணம் செவ்விதின் பெற்ற தொன்று

இதனைச் சிறிதேனும் பெறுதாயின், செய்யுள் என்னும் பெயரினைப் பெறுதற் குரிய தாகாது. அஃது உரை நடையினும் மிகத் தாழ்ந்த தென்றே கருதப்படும்.

செய்யுட்களை, அகம், புறம் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கவிஞன் தன் உள்ளத் துதிக்கும் உணர்ச்சி, நெகிழ்ச்சி முதலியவற்றையும், அவைகளால் தோன்றும் அருங் கருத்துக்களையும் சித்திரித்துக் காண்பிக்க வல்லதே அகச் செய்யுளாகும். இதற்கு உதாரணம், கோவை, அந்தாதி, மாலை, கலம்பகம் முதலிய பிரபந்தங்களும், அவை போன்றன பிறவுமாம். இவை, கவிஞன் தன் உள்ளத் துதிக்கும் பல் வகைப்பட்ட இயற்கைப் பண்புகளைச் செவ்விதின் விளக்கி இன்பம் பயப்பன வாகும்.

அகச்செய்யுளும் புறச்செய்யுளும்

கவிஞன், தானறிந்த பிறர் செயல்களையும், ஒழுக்கங்களையும், கற்போர் இனிதின் உணர்ந்து இன்புறும் வகையில், அமைக்கும் பாக்களே புறச் செய்யு ளெனப்படும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, இராமாயணம், பாரதம் முதலிய காவியங்களும் அவை போன்றன பிறவும் புறச் செய்யுளுக்கு உதாரணமாகும். இந்நூற்கள், பிறர் தம் இயல்பினையே பெரிதும் உணர்த்துவன வாகையால், இவற்றுள் கவிஞன்தன் உள்ளத்தை அறிதல் மிகவும் அருமையாகும்.

இவ்விரு திறப்பட்ட கவிஞரின் இயல்பினைச் சிறிது இயம்புவாம்.

ஓவியம் வல்லா னொருவன் *நீவியக் கிழியில் வண்ணங்கள் பல கொண்டு பற்பல உருவங்களைத் தீட்டுவதே போல், கவிஞனும் தன் அருங் கருத்துக்களைச் சிறந்த சொற்களின் துணை கொண்டு நூலின்கண் அலங்கரிப்பவ னுவான். இத்

உண்மைக் கவித்துவம்

* நீவியம் - இம்மொழி, முதலிற் கொய்சகத்திற்குப் பெயராகி, பின் மாதர் அரையிற் சுற்றும் ஆடையெனப் பொருள் பட்டு,

தொழில் வன்மை கொண்ட கவிஞன், தானெடுத்துக் கொண்ட பொருளைப் பிறர் எவரும் உணர்த்தாத வகையில் புதிதாக வுணர்த்தும் பெற்றியனாவான். இதனால் அவன் யாவரும் அறியாத தொன்றினைத் தானறிந்து உணர்த்துதல் வேண்டும் என்பது கருத்தன்று ; தான் கண்டுணர்ந்த உண்மைகளைக் கற்போர்க்குப் புதுமை தோன்ற உணர்த்தல் வேண்டு மென்பதே கருத்தாகும்.

பிற கவிஞர் கருதிய தொன்றினை அவர் கருதிய வண்ணமே கூறுவோர், உண்மைக் கவிஞராகார். பெரும்பான்மையாகக் கவிஞர், பிறர் கருதியவற்றையே தம் நூலுள் பெய்பவ ராவர். பிறர் கூறிய தொன்றைக் கவிஞர், தம் நூலின்கண் வேறு வகையில் தமதுள்ளம் கருதியாங்கு உணர்த்துவரேல், உண்மைக் கவித்துவம் வாய்ந்தவராக மதிக்கப்படுவர். இதன் உண்மையை, இரு பெருங் கவிஞரின் செய்யுட்களைக் கொண்டு நிறுவுவாம்.

திருத்தக்கதேவரும் கம்பரும்

மலை மீது பெய்த மழையின் வீழ்ச்சியாம் ஒரு காட்சியைத் தெரிவிக்க வந்த திப்பியக் கவியாகிய திருத்தக்கதேவர்,

“ தேனி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனி ரைத்து விசும்புற வெள்ளிவெண்
கோனி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே ”

என்று மிக்கதோர் அழகு பெற அறிவித்தனர். வரைத் தலையில் வெள்ளியாற் செய்த வெண்மையான கோல்களை ஆகாயத்தே பொருந்து மாறு நிரைத்தாற் போன்று, மழை, தாரைகளைச் சொரிந்த தென்பது இச் செய்யுளின் கருத்தாகும். இது, கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரின்

---

பின் பொதுப்படச் சீலையைக் குறிப்ப தாயிற்று. இங்குச் சித்திர மெழுதும் சீலையை (Canvas) உணர்த்தும்.

உள்ளத்து வேறோர் உருவத் தோடுதித்து வெளிப் போந் தது, நாம் இங்குக் கண்டு இன்புறற் பாலதாம்.

திருத்தக்கதேவரின் கருத்தையே தம் கவிக்கு ஆதார மாகக் கொண்ட கம்பர், அக் கருத்தினைத் தம துள்ளங் கருதிய வண்ணம் வழங்கக் கருதி,

> "புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
> வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
> உள்ளி யுள்ளவெல் லாமுவந் தீயுமவ்
> வள்ளி யோரின் வழங்கின மேகமே"

என்று புத்தம் புதிய தொரு முறையில் அமைத்துப் போந் தார். இவ்விரு கவிஞரின் கருத்துக்கள், ஒரே செய்தியைக் குறிப்பனவாயினும், அவை, கருதப்பட்ட வகையில் வேறு படுதலே, இவர் தம் கவிகள், இனிது புலப்படுத்துவன வாகும்.

திருத்தக்கதேவர், தாரைகளை வெள்ளிக் கோல்களுக்கு உவமை செய்து, அத்தாரைகளின் வீழ்ச்சி, வரைத் தலையில் வெள்ளி வெண் கோல்களை நிரைத்தது போன்று விளங்கிய தென்றனர். அவர், கட் புலப்பட்ட காட்சியை உவமை முகத்தால் அழகு படச் சித்திரித்துக் காண்பித்தார். இஃதே அவர் செய் தொழிலாகும். அவர் கருத்திற்குப் பேரெழில் செய்ய விரும்பிக் கம்பர், அதனை வேறு வகையில் சிறந்த தொரு உண்மையோடு தோற்றுவிக்கின்றனர். கவிச் சக்கரவர்த்தி, இமய மால்வரையைப் பொன்னெனல் கருதி வானவர், வெள்ளிக் கம்பிகளை வீழ்த்திய தொத்தது மழை யின் வீழ்ச்சி என்றனர். பொன் மலைக்கு வெள்ளிக் கம்பிகள், பொருத்தமுடையன வென்பதும், வானவர், பொன்னுலகத்தோ ராகையால், இமய மால்வரையைத் தமக் குரிமை படுத்த விழைந்து, வெள்ளிக் கம்பிகளை வீழ்த் தினர் என்பதுமான உள்ளுறை நயங்கள், கம்பர் கவிக்குப் பேரெழில் செய்வன வாகும். இந்நயங்கள் திருத்தக்க தேவரின் கருத்தைச் செப்பனிடுதலாம். இத்துடன் அமையாமல் கம்பர், ஓர் அரிய உண்மையை அக்கருத்தோடு

பொருத்திக் கூறுகின்றார். கைம்மாறு கருதாது வழங்கும் வள்ளல்கள் தம்மிடத்துள்ள பொருள்கள் யாவற்றையும் நீனைந்து வழங்குவர் என்பதை மிக்க அழகு தோன்றக் கூறி, நம்மை இன்புறச் செய்வது போற்றற் குரியதாகும். இஃதே முன்னேன் கூறிய தொரு கருத்தினைப் பின்னேன், தன துள்ளம் கருதிய வண்ணம் வழங்கும் வகையாகும். இதனையே அறிஞர், உண்மைக் கவித்துவம் என்பர். இவ் வியல்பினைக் கம்பரின் மற்று மொரு கவி, தெற்றென விளக்குகின்றது. அதனைத் திருத்தக்கதேவரின் பிறிதொரு கவியோடு ஒப்புமை செய்து, வேற்றுமை காண்பாம்.

உழவர்கள் வயலில் களை கட்டுதலைத் தெரிவிக்கும் திருத்தக்கதேவர்,

"கண்ணெனக் குவளையும் கட்ட லோம்பினர்
வண்ணவாண் முகமென மரையி னுள்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்
தண்வய லுழவர்தம் தன்மை யின்னதே"

என்றனர்.

களை கட்டும் உழவர், வயலில் குவளை மலர்களைக் காதல் மகளிர் கண்களென மருண்டு, அவைகளைக் களையாமலும், தாமரைப் பூக்களை, அக்காதல் மகளிர் முகமென மயங்கி அவற்றின் அருகில் செல்லாதவராயும், பண்ணை எழுத்தின் வடிவு தோன்றப் பாடினர் என்பதே இக் கவியில் அமைந்த கருத்தாகும். இக் கருத்தினை முற்றிலு மேற்றுக் கொண்ட கம்பர்,

"பண்கள்வாய் மிழற்று மின்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங்
களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகலா துலாவி நிற்பர்
பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்".

என்று திருத்தக்கதேவரின் கவிக்குக் கருத்தால் ஒப்புமை தோன்றச் செய்து, அக்கருத்தினைத் தாம் உணர்த்தும் வகையால், வேற்றுமை விளங்க வழங்கினர். மள்ளர்கள் வயலில் தம் காதல் மகளிர்தம் கண்கள் முதலியனவற்றையே கண்டன ரல்லாமல் பிறிதொன்றினைக் காண வில்லையென்று, கம்பர், நிறைந்த காதலுடையார் செயலை நமக்கு நினைவுறுத்துகின்றனர். இத்தன்மையை நாம் திருத்தக்கதேவரின் கவியுள் காண்டல் அரிதாகும். இத்துடன் அமையாது கம்பர், 'பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்' எனும் அரியதோர் உண்மையை அறிவிக்கின்றனர். சிறியோர், பெண்களின் நேய வலையுட் பட்டு அதினின்றும் நீங்கும் ஆற்றல் அற்றவராகி அதன்கண்ணே ஆழ்ந்து கிடப்பர் என்பதைக் கவி குறிக்கின்றார். 'சிறியோர் பெற்றால்' எனும் சொற்றொடரில் உள்ள 'சிறியோர்' என்னும் சொல், பெரியோர், அம்மயக்க வலையுட் படுவரேல் தப்பிச் செல்லும் இயல்பினராவர் என்று பொருள் கோடற்குப் பெரிதும் துணை செய்கின்றது. இத்தகைய நயம் பட உரைத்தலே கம்பரின் கவித்துவமாகும்; இஃதே முன்னோன் கூறிய தொன்றினைப் பின்னோன் புதியதொரு வகையில் வழங்குவதாகும்.

உண்மைக் கவித்துவம் வாய்க்கப் பெறாதார் கவிகளை நாம் ஆராய்வோமாயின் அங்குப் பிறர் கருத்துக்களும், கற்பனைகளும், சிறிதேனும் மாற்றமின்றி அமைந்துள்ளமை அறியப்படும். அவர் கவியுள் புதிதாக ஒன்றினையுங் காண்டலரிது.

**அரிச்சந்திர புராணமும் நைடதமும்**

அரிச்சந்திர புராணத்தில், ஆசிரியரின் உண்மைக் கவித்துவம் வாய்க்கப் பெறாத தன்மையை யுணர்த்தும் இடங்கள் பல. ஓசை யின்பம் நன்கு பொருந்தப் பெற்ற மயான காண்டம் ஒன்றே, அப்புராணத்திற்குச் சிறப்பினைத் தருவதாகும். இம்மயான காண்டத்தின் கவிகளும்

சந்த வோசையின் துணையாலும், சோக பாகத்தின் அமைதியாலும் கற்போர் உள்ளத்தைக் கவர்கின்றனவே யொழிய வேறல்ல. இப்புராணத்தோடு சேர்த்து எண்ணக்கூடியது அதிவீரராம பாண்டியன் எழுதிய நைடதமேயாகும். அதன்கண்ணும் ஆசிரியர்க்குச் சொந்தமான கருத்துக்களையோ, கற்பனைகளையோ நாம் காண்டலரிது. இந் நூலின் தொடக்கத்தில் உள்ள சில கவிகள், பிறர் கருத்துக்களைப் பெரிதும் தழுவிப் படிப்போர்க்கு இன்பம் பயப்பனவாகும். இத்தகைய கவிகள் ஆசிரியர்க்கு ஒருநாளும் உண்மைக் கவித்துவத்தை யெய்துவிக்கா தென்பது ஒருதலை.

கவி இலக்கணம்

செய்யுள் இயற்றும் ஒருவரை உண்மைக் கவித்துவம் வாய்ந்தவரா, அல்லரா என்பதை நாம் அறிய வேண்டின், அவர்தம் செய்யுள் நடையினைச் செவ்வியின் ஆராய்தல் வேண்டும். இஃதே செய்யுளின் பெருமை சிறுமைகளை அறிதற் குரிய முதற் சோதனையாகும். ஒரு செய்யுள் எதுகை, மோனை முதலிய அமைப்பால் ஓசை யின்பத்தைப் பெரிதும் பெருக்குவதாயினும், மயங்குதற் குரிய சொற்களைக் கொண்ட தாயின், அது, சிறந்ததாகக் கருதப்பட மாட்டாது. மயங்குதற் கேது வாகாச் சொற்களையும், பொருளுக்குப் பொருத்தமான நடையினையுங் கொண்டு விளங்கும் செய்யுளே, அறிஞரால் சிறந்ததாகப் போற்றப்படும். இத்தகைய செய்யுட்களை இயற்றிய கவிகளே, உண்மைக் கவிஞராவர்.

பொருளுக்குப் பொருத்தமான சொற்களை வழங்குதலே, கவிஞன் அநுசரிக்க வேண்டிய விதிகளுள் தலைசிறந்ததாகும். ஒவ்வொரு காலத்திலும் தோன்றுகின்ற பல கவிஞருள் ஒரு சிலரே பொருளுக்குத் தகுந்த சொற்களை வழங்கும் பெற்றியராவர், ஏனையோர் பொருளுக்குச் சிறிதும் ஏலாச் சொற்களைப் பெரிதும் வழங்கிச் செய்யுள் நடையினைச் சிதைத்திடுவர். இவர், கவி யிலக்கணத்தை நன்குணர்ந்தவ ராகார்.

'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பது போலக் கவியிற் சிறந்தவர் கம்பர் என்று கூறினும் இழுக்காகாது. கவி யிலக்கணத்தை மிக்க அழகு பட அறிவித்தவரும் அவரே. அப்பெரியார் கூறிய கவி யிலக்கணத்திற்குச் சிறந்த தோர் இலக்கியம், அவரியற்றிய அருங்கவிகளே யாகும். இவ் வுண்மை, கம்பராமாயணத்தைப் பயிலும் அறிஞர்க்கு இனிது புலனாகும்.

கம்பர், கவி யிலக்கணத்தைத் தமது இராமாயணத்துள் பல விடங்களில் நன்கு புலப்படுத்தி யுள்ளார்.

அயோத்தி மாநாகரின் அகழியை வருணிக்கும் கம்பர், புன்கவியின் இயல்பினை அவ்வகழியின் தன்மையோடு பொருத்தி,

'' அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
யலைகடல் சூழ்ந்தன வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும்
படிவருங் காப்பின தாகி
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங்
கராத்தது நவிலலுற் றதுநாம் ''

என்று மிக்க அழகு தோன்ற அறிவித்தனர்.

அகழியின் நீர், தெளிவின்றிக் கலங்கி யிருத்தற்குப் புன் கவி உவமானமாகக் கொடுக்கப் பட்டுள்ளமை, பெரிதும் பொருத்தமுடைய தாகும். அகழியின் தெளி வின்மையால் அதனுட் பொருள், தெற்றெனக் கட்புலப் படாதது போல் தெளிவினைப் பெறாத கவியும் கற்போர்க்குத் தன் கருத்தினை எளிதில் பயத்தலரிது.

அகழியின் வருணனை வாயிலாகப் புன் கவி யிலக்கணம் பகர்ந்த கம்பர், அயோத்தியின் சிறப்பினைக் கூறு முகத் தான், சிறந்த கவிஞரின் இலக்கணம் இயம்பச் சமைந்து,

" செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளில்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூல்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா னுதரிக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் *கருத்தி
புரிகின்ற தயோத்திமா நகரம் "

என்று கூறினர். மிக்கதோர் இன்பம் பயக்கும் பொருள் களால் சிறக்கப் பெற்றுச் சிறந்தனவும் இனியனவுமான சொற்களைக் கொண்டு இயங்குதலே உண்மைக் கவியின் இயல்பாகும் என்பதைக் கவிச் சக்கரவர்த்தி ஈண்டுக் கழறுகின்றனர்.

சிறந்த கவிக்கு இன்றியமையாதன, செவ்விய மதுரஞ் சேர்ந்த நற் பொருளும், சீரிய, கூரிய, தீஞ் சொல்லுமே யாகலான், கவிஞர், இவ்விரண்டையும் பெறுதற்கு முயல் வதைத் தங் கடனாக் கொள்ளுதல் வேண்டும்.

மேற்குறித்த இரு கவிகளால் கம்பர், கவி யிலக்கணத் தைப் பொதுப்படக் கூறினர். அவ்விலக்கணத்தைச் சிறப் பாகவும் தனித்துங் கூறக் கருதிய அப்பெருந்தகையார், கவியின் இலக்கணங்கள் யாவற்றையும் ஒருசேரத் திரட் டிச் சூர்ப்பநகைப் படலத்தின் தோற்றுவாயில்,

" புவியினுக் கணியா †யான்ற பொருடந்து புலத்திற் றாகி
யவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார் "

என்று வழங்கியமை, நாம் கண்டு இன்புறற் பாலதாம்.

கோதாவரி யென்னும் நதிக்கும் சிறந்த கவிக்கும் சிலே டைப் பொருள் பொருந்த அமைந்துள்ள இக்கவி, நமது ஆராய்ச்சிக் குரியதாகும்.

---

* அருத்தி - ஆசை    † ஆன்ற - அகன்ற

பூமிக்கு அலங்காரமாய், மிக்க பொருள்களைக் கொடுத்து, அருகே விளை நிலங்களை யுடையதாகி, அவிந்த பாவங்களை யுடைய நீர்த் துறைகளைக் கொண்டு, ஐவகை நிலத்தின் வழி சேர்ந்து, கண்ணொளி யூடு செல்லுமாறு தெளிவினைப் பெற்றுக் குளிர்ந்த குணத்துடன் ஒழுக்கமும் வாய்ந்து, நிறைந்த அறிவினைப் பெற்ற ஆன்றோர் கவி யெனக் கிடந்த கோதாவரியினை இராம இலக்குமணர் கண்டனர் என்பதே, மேற் குறித்த கவியின் கருத்தாகும்.

இனி, இச் செய்யுள் ஆன்றோர் கவியைக் குறிக்குங்கால், புவியினுக் கணியாய் - பூமியிலுள்ள மக்களுக்கு அலங்காரமாகி, ஆன்ற பொருள் தந்து - அறம், பொருள், இன்பம், வீடெனும் விழுமிய பொருளைப் பயந்து, புலத்திற்ருகி - ஆக்கியோன் அறிவின் அளவினதாகி, அவியகத் துறைகள் தாங்கி - தேவருணவினை யொத்த அகப்பொருள் துறைகளைக் கொண்டு, ஐந்திணை நெறியளாவி - ஐவகை நிலத்தின் நெறியைத் தழுவி, சவி யுறத் தெளிந்து - ஒளி பெறத் தெளிந்து, தண்ணென்று - தண்ணளி பூண்டு, ஒழுக்கமும் தழுவி - சிறந்த நடையினையுங் கொண்டு, விளங்கும் சான்றோர் கவி எனப் பொருள் கொள்ளப்படும்.

புவியினுக் கணியாய் என்ற சொற்ருெடரில் உள்ள 'புவி,' ஆகுபெயராய், மக்களை யுணர்த்திற்று. ஆகவே, கவி, பயில்வோர்க்குப் பேரழகினைப் பயப்பதாய் அமைதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. 'அணி' யென்ற துணையான், ஐவகை யிலக்கணத்துள் ஒன்ருகிய அணியிலக் கணத்தையும், நூற்கியைந்த சொல் வனப்பையும் அடக்கிக் கொள்க. 'பொருள்' என்றது, அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு பொருளையும் குறியா நின்றது, "அறம் பொருள் இன்பம் வீடெனும் நான்கும்—திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" என்ப வாகலான். சான்றோர் வருந்திக் கற்றுங் கேட்டும்

பெற்ற பல அரிய பொருள்களும், தாம் கற்பித்த சீரிய கற்பனைகளும் அவர்தம் கவியின்கண் அடங்கி அவருடைய பெரும் புலமையைக் குறிக்கு மென்பார், புலத்திற்ருகி யென்ருர். இதனுல், கவியைக் கொண்டே அதனை ஆக்கியோன் அறிவின் ஆற்றலை அளத்தல் கூடுமென்பது பெறப்பட்டது. கவி, அகப்பொருள் துறைகளைத் தழுவி, இன்பம் பயக்கும் இயல்பிற் றென்பதை அறிவிப்பார், 'அவியகத் துறைகள் தாங்கி' யென்ருர். அகப் பொருட்டுறைகள் இன்பப் பண்பின வாகலான், அவைகளுக்குத் தேவருணவாகிய அவிப்பாகத்தை உவமை கூறிஞர். ஐவகைத் திணைகளையும், திணை மயக்கங்களையும் விரவி நடத்தல், கவியின் பண்பென்பார், 'ஐந்திணை நெறிய ளாவி' என்ருர். 'சவியுறத் தெளிந்து' என்றது, ஆழ்ந்த உள்ளுறை பொருள்களைத் தெற்றெனப் புலப்படுத்தும் தன்மையினைக் குறிப்பதாகும். இஃதன்றிக் கற்போர் தம் மடமை நீங்கி, அறிவாம் பேரொளியைப் பெறுதற்குக் கவியே காரணமாகும் எனினும் அமையும்.

'தெளிந்து' என்ற சொல் லாற்றலால்,

"குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றென்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்று பயனின்மை
என்றிவை யீரைங் குற்றம் நூற்கே"

என்ற பத்துக் குற்றங்களினின்றும் நீங்கிய தன்மையைக் கொள்க. என்னை? கவி, இக்குற்றங்களினின்றும் நீங்குமாயின், தெளிவினைப் பெற்றுச் சிறந்திடும் என்பது ஒரு தலையாம்.

இனி, இரட்டுற மொழிதலென்னும்உத்தியால் 'ஐந்திணை' என்பதை ஆரும் வேற்றுமைத் தொகையெனக் கொண்டு, ஐந்தினது இணையாகிய பத்தெனப் பொருள் செய்து,

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே"

என்ற பத்துவித அழகுகளையுங் கவி தழுவிடல் வேண்டு மென்றுங் கூறுவர். இப்பத் தழகினையும் கவி, பொருந்தப். பெறுமாயின், தெளிவினைப் பெற்று விளங்கு மென்பதில் ஐயுற வின்று.

'தண்ணென்று' என்பதற்கு, இருள்தரு மா ஞாலத்து மக்கள், நெறி யறியா துழன்று, பின்னர், எரிவாய் நரகிற் கிரையாகா வண்ணம் நன்னெறி செலுத்தி அவரை வீடு புகுத்தும் தண்ணளி பூண்டென்றும், 'ஒழுக்கமும் தழுவி' என்பதற்கு, நால்வகை வருணத்தாரும் தத்தம் வருணத்தில் பிறழாது நிலை பெறப் பாதுகாத்தலாகிய அறநிலையைத் தழுவி யென்றுங் கூறுவர். 'தண்ணென் றொழுக்கமுந் தழுவி' என்பதற்குப் பயில்வோரை இன்புறுத்தும் சிறந்த தொரு நடையினைக் கொண்டு என்று பொருள் கூறுவதே. மிக்க பொருத்த முடையதாகும், என்னை ? கவிக்குப் பேரெழில் செய்வது நடையே யாகலின்.

கம்பர், கவி யிலக்கணத்தை இங்ஙனம், பல் வகையாக ஒரு கவியுள் பகர்ந்து நம்மைப் பரவசப்படுத்தினர். அவர் கூறிய இலக்கணத்திற்குச் சிறந்த தோர் இலக்கியம், அவ ரியற்றிய இராமாயணமே யாகும். அறிஞர், அதனைச் சுவைத்து இன்புறுவாராக.

இதுவரை, கவி யிலக்கணத்தைப் பற்றி இயம்பினேம். இனி, கவியின்கண் அமைந்துள்ள ஓசையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

ஓசை இன்பம் செவ்விதின் வாய்ந்த கவிகளே சிறந்தன வென்பார், ஒரு சாரார். அவர் கவித்துவத்தை இசைக் கலை

யென்றுணர்வார் போலும். கவியின்கண் ஓசை யின்பத்தை யே பெரிதும் நாடுபவர் கவியால் விளை யும் சிறந்த பயனைப் பெறுபவ ராகார். கவியின் சிறப்பை, ஓசை இன்பத்தால் அளப்பவர், கவியின் தலையாய பண்பினை உணராதவராவர் என்று கூறல் அமையும்.

**ஓசையும் பொருளும்**

கவியில் செவிக்கினிய ஓசை, கவிஞனது மன வெழுச்சி யால் தடுத்தற் கரிதாய்த் தானாகவே அமைவ தொன்றும். அவ் வினிய ஓசை செயற்கை யன்று. அஃது ஒன்றினைப் பார்த்துச் செயப்பட்ட தன்று. பிறிதொன்றினைப் பார்த்துச் செயப் படுவ தெல்லாம் போலியே யாகும். போலி ஓசை, கவிக் குரிய தன்றென்பதை நாம் உணர்தல் வேண்டும்.

கவியில் ஓசை யமைதி முதன்மை யாகவும், பொருள மைதி இரண்டாவதாகவும் பொருந்து மாயின், கவி, எழிலி னைப் பெறுவதின்று. கவிஞன், பொருளமைதியை முதன்மை யாகவும், ஓசை யமைப்பை இரண்டாவதாகவும், கொள்வனு யின், அவனது கவி, பேரழகினைப் பெற்றுப் பொலிவ தாகும்.

சங்க காலத்தில் சிறந்த கவிஞரால் பாடப்பட்ட பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்னும் தொகை நூற்களுள் பொருளமைதி முதன்மை பெற்று விளங்குவதை நாம் நன்கு காணலாம். இப் பொரு ளமைதி யாலன்றோ அவை, அறிஞரால் பெரிதும் போற்றப் பட்டு வருகின்றன. சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத் தெழுந்த ஒரு சிலரின் கவிகளே இவ்விதியினைச் செவ்வி தின் பெற்றன வாகக் காணப்படுகின்றன. ஏனையோரின் கவி களில் ஓசை யமைதி முதன்மை யாகவும், பொருளமைதி இரண்டாவ தாகவும் பொருந்தக் காணலாம். பொருளமை தியால் முதன்மை பெற்றுச் சிறப்புறுத கவி, ஓசை யமைதி யால் எத்துணைச் சிறந்த தாயினும் அஃதோர் உயி ரற்ற ஓவியம் போன்ற தாம். ஆகவே, கவிஞன், பொருளமைதி யைத் தன் கவியுள் முதன்மை பெறச் செய்வதில் முந்துதல் வேண்டும்.

கவியின்கண் பொருளமைதியைச் சிறக்கச் செய்வது அணி யிலக்கண மாகும். இவ்விலக்கணம் கவிக்குத் துணை புரியும் திறத்தினைச் சிறிது இயம்புவாம்.

அணியின் ஆற்றல்

இவ்வுலகில் பல் வகைப்பட்ட பொருள்கள், கவிஞனுக் கெனவே இறைவனால் படைக்கப்பட் டுள்ளன போலும். இவ்வுலகு, கவிஞனுக்கு ஒரு மா பெரும் நூல் நிலைய மாகும். அவன், இவ்வரிய நூல் நிலையத்துட் சென்று தனக்கு வேண்டுவனவற்றைத் தானே தெரிந் தோதும் தன்மைய னுவான்.

கடலும், மலையும், காடும், பொழிலும், வனமும், யாறும், மனிதன் மனத்தைக் கவரும் வனப்பினைப் பெற்று வயங்குவன வாகும். அவை யாவும் தம்மகத்தே கொண் டுள்ள தெய்விக வுண்மை அறிஞர்க்கே புலனுவ தொன் ரும். காதல் வெள்ளம் கதித் தெழும் காதலற்குத் தன் காதலியை, உலகிலுள்ள அழகிய பொருள்கள் ஒவ்வொன் றும் நினைப் பூட்டுவது போலவும், பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்திடும் ஞானிக்கு, இயற்கைப் பொருள்கள், இறைவனை நினைவுறுத்துவன போலவும், புலத் துறை முற் றிய நலத்தகு கவிஞர்க்கு, இயற்கை, தன்னகத்தே மறைத் துள்ள தெய்விக வுண்மையை அறி வுறுத்துவ தாகும்.

கவிஞன், இயற்கைப் பொருளின் துணை கொண்டே தனக்கு வேண்டுவனவற்றைச் சாதித்துக்கொள்வான். அவன் இவ்வுலகின்கண் அமைந்துள்ள இயற்கைப்பொருள் களைக் கொண்டு சிறந்த வுண்மைகளை உணர்த்துபவ னுவான். இவ்வியற்கைப் பொருள்களே கவிஞனுடைய கற்பனு சக்தியை வளர்ப்பதற்குப் பெரிதும் துணை புரிவன வாகும். இவ்வியற்கைப் பொருள்கள் இல்லையேல் கவிஞனுக்குக் கற்பனு சக்தியும் இல்லையாகும். இயற்கை யழகில் திளைத்திடாத கவிஞனே யுலகில் இல்லை யென்று இயம்பலாம். இயற்கையில் தோய்ந்து, இயற்கையோடு

பழகி, அதன் எழிலினை யுணர்ந்து, இன்புறும் கவிஞன், உலகமும் இன்புற வேண்டி, தானுணர்ந்த உண்மைகளைக் கவியின் வாயிலாக வள்ளியோ னென வழங்குவன். அங்ஙனம், வழங்கும் கவிஞனுக்கு அணி யிலக்கணம் பெரிதும் துணை புரிவதாகும்.

உலகில் ஒவ்வொரு மொழியிலும், நூலியற்றும் கவிஞர், பல் வகைத்தாய அணிகளை ஆங்காங்கு அமைத்துத் தமது நூலினை அழகுறச் செய்வர். அங்ஙனமே, தமிழ் மொழியிலும், கவிஞரனைவரும், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயக்கும் பல் வகைப்பட்ட அணிகளைப் பொருத்தி தம் நூற்களை அழகு செய்துள்ளனர். கவியின் பொருளை எளிதில் புலப்படுத்துவது அணியே யாகும். கவிக்குப் பேரழகினைக் கொடுப்பதும் அஃதே யாம். அணியினைத் துறந்த கவி, அழகினைப் பெறுவதின்று. இதனாலன்றோ, 'அணி யிலாக் கவிதை பணி யிலா வனிதை' யென்றனர்.

அணிகள் பல வுளவேனும், அவை தம்முள், முதன்மை பெற்று விளங்குவது, உவம அணியே யாகும். ஏனைய அணிகள், இதன் வழி தோன்றியனவே யாம். அவற்றின் இயல்பினை நாம் செவ்விதின் ஆராயின், அவை யாவும் உவமத்தில் அடங்கி நிற்கும். வட நூலைத் தழுவி யெழுந்த தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய அணி யிலக்கண நூற்களுள் கூறப்பட்ட பல் வகைத்தாய அணிகளைத் தொல்காப்பியனார் கூறினாரில்லை; உவமம் ஒன்றே கூறிப் போந்தார், அவர் வகுத்த வுவம வியலில் அவ்வடநூல் அணிகள் யாவும் அடங்கும் காரணம் பற்றியே போலும். வட நூலாசிரியர் கூறிய பிறவணிகள், இவ்வுவமத்தின் விரிவே யன்றி வேறன்று. ஆகவே, அணிகள் பலவற்றிற்கும் அடிப்படையா யுள்ளது உவம அணியே என்பது பெறப்பட்டது. இனி, இவ்வுவமத்தின் இயல்பினைச் சிறிது ஆராய்வாம்.

உவம அணியும் அதன் திறமும்

உவமம் என்பது, ஒரு பொருளோடு மற்றொரு பொருளினை ஒப்புமை கூறுதலாம். கவிஞன், தானெடுத்துக் கொண்ட பொருளினைச் செவ்விதின் விளக்கிச் சிறப்பிக்கும் பொருட்டு உவமத்தின் உதவியைப் பெரிதும் நாடி நிற்பன்.

இவ்வுவம அணியை ஆளும் தன்மையில் சங்க மருவிய கவிஞர்க்கும் பிற்காலத்துக் கவிஞர்க்கும் பெரிதும் வேற்றுமை காணப்படும். சங்க நூற்களில் அமைந்துள்ள உவமைகள், பெரும்பாலும் மிகை படாமல் பொருளினை இனிதின் விளக்கும் இயல்பின வாகும். பிற்காலத்தார் கவிகள் சிலவற்றுள் ஆளப்பட்ட வுவமைகள், வரம்பிகந்து வனப் பின்றி அமைந்துள்ளன.

சிறந்த கவிஞன் தன்னைச் சுற்றிலும் உள்ள மிக்க சாதாரணமான பொருள்களையே உவமைக்காக எடுத்துக் கொள்வன்; அச்சாதாரணமான பொருள்களைக் கொண்டே அரிய வுண்மைகளை மக்களுக்கு அறி வுறுத்துவன்.

உலகத்திலுள்ள பொருள்களைப் புலமை மிக்க ஒரு கவிஞன் காண்பதற்கும் மற்றையோர் காண்பதற்கும் பெரிதும் வேற்றுமை யுண்டு. இறைவன் படைப்பில் அமைந்த பொருள்கள், கவிஞர் மனத்தில் விழுமிய கருத்துக்களையும் எண்ணங்களையும் விளைவிப்பனவாகும்.

கோங்கு, வேங்கை, சண்பக மாதிய வான்றோய் மரங்கள் தத்தம் மலர்களுதிர்த்து நறுமணம் பரப்ப, மா, பலா, வாழை முதலிய பயனுடை மரங்கள், வள்ளியோரின் வழங்கி நிற்ப, மயில்கள் ஆடக், குயில்கள் பாடச், சுரும்பர்த் தொகுதி சுருதி கூட்டப், பேரெழில் விரிக்கு மொரு சோலையுள் கவிஞனொருவன் புகுவனேல், இறைவன்தன் பெருங் கருணைத் திறத்தையும், பேராற்றலையும் ஆங்குள்ள ஒவ்வொரு பொருளிலுங் கண்டு பேருவகைப் பூத்து நிற்பன். இவ்வியற்கைப் பொருள்கள், அக்கவிஞனுடைய கற்பனை சக்தியை வளர்த்து, அவன் கடவுளின் கருணையை நினைந்து,

நினைந்து, வியந்திடச் செய்யும். அங்ஙனம் வியந்து நிற்கும் கவிஞன் உள்ளத்தே அரிய வுண்மைகள் பல உதிக்கும். அவ்வாறு உதிக்கும் உண்மைகளை அக்கவிஞன், அழகுறச் செய்து விளக்குதற்குத் தான் கண்டு இன்புற்ற இயற்கைப் பொருள்களையே உவமானமாகத் தேர்வன்.

மலையில் தோன்றிய வெள்ளம், பெருக்கெடுத்துப் பல ஆறுகளாகப் பிரிந்து, ஏரி, குளம், கிணறு முதலியவற்றை நிறைத்துப் பின்னர், கடலில் சங்கமாதலை உலகில் அறியாதார் ஒருவரு மிலர். இது யாவருங் காணும் மிக்க சாதாரணமான தொரு நிகழ்ச்சி யாகும். இதனைக் கண்ட கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பருள்ளத்து அரிய தோர் உண்மை பிறந்திட, அதனை அவர், உலகிற்கு வழங்க விரும்பி,

"* கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே"

என்று கூறினர்.

மலையில் தோன்றிய நீரொன்றே, பல துறை தொறும் பரந்த தன்மையால், ஏரி நீரென்றும், குளத்து நீரென்றும், கிணற்று நீரென்றும், வேறு பட வழங்குவதே போல், உலகில் உள்ள பல் வகைப்பட்ட சமயங்களும், கொள்கைகளால் வேறுபடினும், முடிவாக ஒரு பரம் பொருளையே உணர்த்தாநின்றன என்பதையும், நீர் வகை யாவும் கடலில் வந்து கலப்பதே போல், எல்லாச் சமயங்களும், கடல் போல் பரந்து பட்ட குண நலம் வாய்ந்த அப் பரம் பொருளையே தமக்குப் புகலிட மாகக் கொள்ளா நின்றன வென்பதையும், கவி கற்பிக்கின்றார். இஃதே கவி கற்பனை யாகும்.

மிக்க சாதாரணமான பொருளையே கவிஞன் உவமானப் பொருளாகத் தேர்வன். அங்ஙனம் தேர்தலுக்குத்

* கல் - மலை

திருவள்ளுவர் சிறந்த தோர் எடுத்துக் காட்டாதலை, அவர் தம் குறட்பா வொன்றால் விளக்கிக் காட்டுவாம்.

தலையினின்றும் மயிரானது மயிர்வினைஞனால் கழிக்கப்பட்டுக் கீழ் வீழ்வது, நாம் ஒவ்வொரு நாளும் காணும் காட்சி யாகும். ஆனால், அக்காட்சி, நமது உள்ளத்தில் யாதொரு எண்ணத்தையும் உதிக்கச் செய்வ தின்று. இது திருவள்ளுவரின் இதயத்தில் அரியதோர் உண்மையைத் தோற்றுவிக்க, அவர்,

" தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை''

என்றனர்.

மாந்தர், தமக்குரிய நிலையினின்றும் தவறி, இழிந்த வற்றைப் புரிவராயின், அவர், தலையினின்றும் இழிந்த மயிரினை ஒத்திடுவர் என்பது இக்குறட்பாவின் கருத் தாகும். மக்கள், தமது உயர் குடிப் பிறப்பிற்கு உரிய ஒழுக்க நிலையினின்றும் தவறாதவராய் வாழ்வராயின், யாவராலும் போற்றிப் புகழப்படுவர். ஆனால், அவர், தம் நிலையினின்றும் வழுவுவ ராயின், எல்லாராலும் இகழப் பட்டுத் தூற்றப்படுவர். தலை மயிர், தனக்குரிய உயர்ந்த இடமாகிய தலையில் இருக்குமளவும், பூவும் புகையும் மேவி, பொலிவினைப் பெற்று விளங்கும். அம்மயிர், கீழே விழு மாயின், வளமும் வனப்பு மிழந்து, யாவராலும் அருவருக்கப்பட்டு, விலக்கப்படுதற் குறிய தாகும். இவ் வுவமத்தின் திறம், கவிஞரின் கற்பனா சக்தியைச் செவ் விதின் விளக்கிக் காட்டுவதாகும்.

சிறுத்த இடையை யுடைய ஒரு பெண்ணைச் சிற்றிடை யாள் என்று கூறுவதைக் காட்டிலும், துடி யிடையாள் என்று ஓர் வுவமம் தோன்றக் கூறுவது, மிக்க அழகுடையதாய்ப் பொருளைச் செவ்விதின் ஆடி போல் விளக்கிக் காட்டுவ தாகும். 'துடி யிடை' என்பதற்கு " அல்குலும்

**உவமத்தின் ஆற்றல்**

ஆகமும் அகன்று காட்ட அஃகித் தோன்றும் மருங்குல்" என்று உரை கண்டார் பேராசிரியர். இவ்விலக்கணம் வாய்ந்த மருங்குலைச் சிற்றிடை என்பது எங்ஙனம் விளக்குதல் கூடும்? துடி யிடை என்பதே அவ்வாசிரியர் கூறிய இலக்கணத்தை நன்கு புலப்படுத்துவ தாகும். ஆகவே, பொருள் புலப்பாட்டிற்கு உவமம் பெருந் துணை செய்வதாகும். இங்ஙனம் உவமம் கவிகளில் அமைந்து நின்று பொருள் விளக்கத்திற்குப் பெருந் துணை செய்வதைச் சிறிது ஆய்வாம்.

ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பா மாலையின்கண்,

"மண்டு மெரியுண் மரந்தடிந் திட்டற்றாக்
கொண்ட கொடுஞ்சிலையன் கோறெரியக்—கண்டே
அடையார் முனையலற வையிலைவேற் காளை
விடையாயங் கொள்கென்றான் வேந்து"

என வரும் வெண்பாவின்கண் பொருந்திய உவமம் பொருளைச் செவ்விதின் விளக்கிக் காட்டுதலை உணர்க.

போருக்குச் சித்தமாய் நிற்கும் வீரன், தனது கையின் கண்ணுள்ள அம்பினை ஆராய்தல் கண்டும், அரசன், பகைப் புலத்துள்ள, ஏற்றையுடைய நிரையைக் கொள்ளுமாறு, அவ் வீரனைப் பணித்தனன் என்பது இக்கவியால் போந்த பொருளாகும்.

அரசன், அம்பினை அராயும் வீரனை விளித்து, ஆ நிரையைக் கொள்ளுமாறு கூறினனென்னும் பொருள், இயற்கையாகவே மிக்க தொரு கொழுந்தினை விட்டெரியா நின்ற நெருப்பினுள்ளே மரத்தை வெட்டிப் பெய்த தன்மையாம் என்பது, உவமானத்தால், நனி விளங்கி நிற்கின்றது.

வீரன், போரெனப் பொருது, வீரக் கனல் மூண்டு அம்பின் செவ்வியை ஆராய்கின்றான். இது வீரனது இயற்கைப் பண்பு. ஆ நிரையைக் கொள்ளுமாறு அரசன் பணித்

தது, இப் பண்பினை மிக்குற வளர்த்த தாகும். வீரன் தன் இயற்கைப் பண்பிற்குக் கொழுந்துவிட் டெரியும் நெருப் பும், அவ்வியற்கைப் பண்பு மிக்கு வளர்தற்கு ஏதுவாய் அரசன் பணிக்கு, மரந்தடிந் திடலும் உவமானங்க ளாயின.

இவ்வெண்பாவின்கண் அமைந்த உவமம், பொரு ளினை இனிதின் விளக்கிக் கற்போரை இன்புறுத்தும் ஆற்றல் வாய்ந்த தாகும்.

கவியின் கண்ணமைந்துள்ள பொருளைச் செவ்விதின் புலப்படுத்துவதே யன்றி, அப் பொருளினைக் கற்போர் என் றும் மறவா திருக்கச் செய்தலே, உவமத்தின் ஆற்றலாகும்.

சுக்கிரீவனும் விபீடணனும் ஒருவரை யொருவர் தழு விக் கலந்த பான்மையைக் கம்பர்,

"தொல்லருங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற இருவரும் ஒருநா ளுற்ற
* எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்"

என்று மிக்க அழகுபட அறிவித்தனர்.

வெண் ணிறம் வாய்ந்த அரிக் குலத் தரசனும், கரு நிறம் படைத்த அரக்கர் குலத் தண்ணலும், ஒருவரோ டொருவர் கலந்த தன்மையை அலங்கரித்துக் காட்டுதற்கு, 'எல்லியும் பகலும் போலத் தழுவினர்' என்ற, உவமையை, வேற்றுப் பொருள் வைப்பணி கொண்டு விளக்குந் திறன், நம் மனத்தை விட்டு என்றும் நீங்குவ தன்று.

கவியின் பொருளைக் கற்போர் என்றும் மறவாது மனத்தில் பதிவு செய்துகொள்வதற்கு உவமம், மிக்க பயனு டைய தாகும் என்பதை அறிந்தோம். இனி அவ்வுவமமே கவிஞன்தன் கற்பனைக்குக் காரணமாதலைக் கம்பருடைய மற்றொரு கவியால் காண்பாம்.

---

* இரவும்

அயோத்திமா நகரின் மகளிர் தம் முக அழகிற்குத் தாமரையின் செவ்வியும் ஈடாகா தென்பதைக் கம்பர்,

" அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்தநீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்ம்பெலாம்
வந்துபோர் மலைக்கமா மதில்வளைத்தல் மானுமே "

என்று மிக்க வனப்புறும் வகையில் விளக்கிக் காட்டுகின்றனர்.

அயோத்தியின் மதிலைச் சுற்றிலும் உள்ள அகழியின்கண் பூத்திராநின்ற தாமரை மலர்களின் காட்சியைக் கம்பர், அந்நகர மகளிரின் முகங்களுடன் முன்னமே பொருது, தோல்வி யுற்று, வலி யிழந்த தாமரைகள், இழந்த வன்மையைப் பெற்றனவாய், மீண்டு மொரு முறை அமராற்றிடக் கருதி, அம்மதிலினை வளைந்து முற்றுகை யிட்டிருந்த தென்கின்றார். முற்றுகை யிடும் செய்கை, தாமரை மலர்களுக்கு இல்லை. ஆனால், அச்செய்கையைக் கவி, அம்மலர்களுக்கு ஏற்றிக் கூறுகின்றார். இஃதே கவி கற்பனையாகும். இக்கவியினைச் சிறப்பிப்பது, இதன்கண் பொருந்திய கற்பனையே யாகும். இத்தகைய கவிகளை அறிஞர், ஒரு முறை பயிலும் பான்மையால், அவர் உவமப் பொருளினை என்றும் மறக்க இயலாப் பெற்றியைப் பெறுபவ ராவர்.

கவி, எத்துணை அழகு வாய்ந்த தாயினும், கற்பனை என்பதைத் தழுவாது நிற்குமாயின், உயிரற்ற ஓவியம் போல்வதாகும்; கவியுள் கற்பனையைப் பொருத்துதல் ஓவியத்திற்கு உயிரினை ஊட்டுத லாகும். இத்தகைய ஓவியச் சிறப்பு வாய்ந்த கீழ் வரும் மற்றொரு கவி, கற்பனையின் ஆற்றலை நனி விளக்கிக் காட்டுகின்றது.

" பம்பி மேகம் பரந்தது *பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்

* சூரியனால்

அம்பி ஞட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுந்தது போன்றதே''

எனும் இக்கவி, உயிரினைப் பெற்றதோர் ஓவியப் பட மாகும்.

நதிகள் மலையில் தோன்றிக் கடலைச் சேர்ந்து நிற்ப தால், கடல் மலைக்கு மருகனுயினன். அம்மலை மேல் பெய்த மழையினை ஆசிரியர், கதிரோனுல் மாமன் வெம்மையை எய்தினுன் எனப் பரிந்து, மருமகப்பிள்ளை, ஆவியாக மேலே கிளம்பிக் குளிர்ந்த நீரால் அவனடைந்த வெப்பத்தை மாற்றினுன் என்கின்ருர். இஃதன்றே கவி கற்பனையாகும். இத்தகைய கவிகளைக் கற்போர், தம்மைத் தாமே மறந்து இன்பக் கடலுள் ஆழ்ந்து நிற்பவராவர். இஃதே கற்பனை யின் ஆற்றலாகும். இக்கவி, ஓவியக் கலை பயின்ருர்க்குப் பேரெழில் பயப்பதாகும்; ஆனுல், இக் கவியின் கற்பனையை ஓவியத்தில் கை போய ஒருவன், தூரியத்தின் துணைகொண்டு ஒரு நீவியக் கிழியின்கண் தீட்டிக் காட்டுதல் அரிதாகும்.

இயற்கைப் பொருள்களின் வனப்பினை உள்ளவாறு சித்திரித்துக் காட்டுதலே ஓவியத்தின் செய் தொழிலாகும்.

**ஓவியமும் காவியமும்**

ஏட்டில் தீட்டிய இயற்கைப் பொருள் களுக்கு உயிரினை ஊட்டுதலே ஓவியக் கலையின் உட்கிடை. சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரையை, வண்டுகள் தேனுடைய தென்று கருதி மொய்க்குமாயின், அஃதொரு சிறந்த ஓவியம் எனப் படும்; இத்தன்மையைக் கம்பர் விளக்க வேண்டி,

'' தாவில்பொற் றலத்தினற் றவத்திஞேர்க டங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப் * பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவியொத்த வன்புசேவல் கூவவந் தணைந்திடா
ஓவியப் புருவின்மா டிருக்கவூடு பேடையே''

என்று கூறிய கவி, யீண்டு நாம் ஆராய்தற் குரியதாம்.

* சோலை

மாடத்தின்கண் தீட்டிய ஓவியப் புறவின் அருகு வீற்றிருந்த ஓர் ஆண் புறவைக் கண்ட அதன் பேடை, 'நம் காதலன், வேறொருத்தியை விழைந்தனன்' என்று கொண்டு அதனுடன் ஊடி, மேல் நோக்கிப் பறந்து சென்று, வானுற வோங்கி வளர்ந்த ஒரு மரத்தின் மிசை யமர்ந்த தென்பது, ஆசிரியர் கருத்தாகும். இக்கருத்தினைக் கொண்ட மேற் குறித்த கவி, ஓவியச் சிறப்பினைச் செவ்விதின் விளக்கிக் காட்டுவ தாகும். இதன் உண்மையை நாம் உணர்வதன் முன்னர், இக்கவியின்கண் அமைந்துள்ள நயத்தினைச் சிறிது ஆய்வாம்.

இக்கவிக்கு, பேடை - பெண் புறவு, ஆவி யொத்த - உயிரினை ஒத்த, அன்பு சேவல் - அன்பு வாய்ந்த ஆண் புறவை, கூவ - விளிக்க, வந்தணைந்திடா - வந்து சேராமல், ஓவியப் புறுவின் மாடு - சித்திரப் புறுவின் அருகு, இருக்க - அவ்வாண் புறு இருக்கக் கண்டு, ஊடு - ஊடிய அப்பெண் புறவு, கற்பகப் பொதும்பர் புக்கொதுங்கும் என்று பொருள் கொள்ளுதல் ஒன்று. இஃதன்றி ஆவி யொத்த அன்பு சேவல், ஓவியப் புறுவின் மாடிருக்க, அதன் நிமித்தம் ஊடி நின்ற பேடை, சேவல் விளிக்க வாராமல், கற்பகப் பொதும்பர் புக்கொதுங்கும் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

ஊடிய பெண் புறவு, ஆடவரை, நிலையிலாப் பதடிகள் என்று தெளிந்து, தவத் திறம் பூண்டொழுக விழைந்து, பொன்னுலகில் தவசிகள் தங்குதற் குரிய கற்பகச் சோலையுட் புக்கது என்னும் கருத்துத் தோன்ற, ஆசிரியர் மிக்க நயம் பட இக்கவியின் முதலிரண்டடிகளை அமைத்துள்ளார். இனி, இக்கவியின்கண் பொருந்தியுள்ள சித்திரச் சிறப்பினைச் சிறிது ஆய்வாம்.

புறவுக் காதலன்தன் கதை, துன்புறு நாடகமாய் முடிந்ததற்கு அடிப்படையான காரணம், சித்திரச் சிறப்பே யன்றி வேறன்று. ஆவி யொத்த அன்பு சேவல், ஓவியத்தை

உண்மைப் புறவென மருண்டு காதலிக்க, உத்தம மங்கை யரின் தன்மை வாய்ந்த பேடையும், அவ்வோவியப் புறவினை உயிருடையதென் றெண்ணிப் பொருமை மீக்கொண்டு தன் காதலனுடன் ஊடிய தென்ருல், அவ்வோவியத்தின் உயர் வினை என்னென்று பகர்வது. காதற் புறவுகள் இரண்டும் மயங்குவதற்கு, அவ்வோவியம் உயிர் பெற்ற தன்மையோடு விளங்கியதே யாகும். இஃதே ஓவியத்தின் உயர் குணப் பண்பு. இத்தகைய ஓவியங்கள், காண்போர் கண்களைக் கவர்ந்து அவர்தம் உள்ளத்தை இயக்கும் பெற்றியன வாம்.

சிறந்த கவிஞனை, ஓர் உயர்ந்த ஓவியன் என்னலாம். அவன், உலகின்கண் உள்ள பொருள்களைச் செவ்விதின் கூர்ந்து நோக்கி, அப்பொருள்களின் பொற்பினைப் பாட் டோவிய மாக வழங்கும் பான்மையன்.

ஓவியச் சிறப்பு வாய்ந்ததே காவியமாகும். காவி யத்தின் படலங்கள் தோறும் ஓவியப் படங்களே காணப் படும். இதன் உண்மையைச் சிறிது காண்பாம்.

சிலப்பதிகார மென்னும் நூலின்கண் அமைந்துள்ள அந்திமாலைச் சிறப்புச் செய்காதை, ஓவியப் பண்பினைச் செவ்விதின் விளக்குவ தன்றே? அது இயற்கையின் எழிலைச் சித்திரித்துப் பயில்வோர்க்கு இன்பத்தைப் பயக்கும் இயல்பினதன்றே? இளங்கோவடிகள், இத்தகைய சித்திரப் படங்களைத் தமது காவியத்துள் ஆங்காங்குச் சிறக்க வைத் துள்ளது, அக்காவியத்திற்குத் தனிப் பெருஞ் சிறப்பினைத் தருவதாம் என்பதை எவரே மறுக்க வல்லார்?

மணிமேகலை யென்னும் மாண்புடை நூலில் வரும் மலர் வன வருணனை, பயில்வோர் மனத்திற்கு மகிழ்ச்சியை விளைப்பதாகும். பரிதியஞ் செல்வன் தன் பன்னிறக் கதிர்த் திரள் நுழைதற் கரிய குயில் நுழை பொதும்பரின் வனப் பினைச் சாத்தனர், ஓவியத் துறையில் கை போய ஒருவன் செயல் போல வகுத்துக் காட்டுதல், நாம் கண்டு இன்புறற் பாலதாம். இத்தகைய ஓவியங்களைச் சாத்தனர், தமது மனச்

சீரையில் அமைத்து இன்புற்று, அவற்றை நாமும் கண்டு இன்புற வேண்டி மணிமேகலையில் பல விடந்தோறும் தீட்டிச் செல்வதன்றோ, அக்காவியித்தை மாண்புறச் செய்கின்றது. சாத்தனார், சித்திரச் சிறப்பினை நன்குணர்ந்து இன்புற்றவராகையால், நம்மையும் அவர் வழி ஊக்குகின்றனர். அவர் ஓவியத்தைப் போற்றிய பான்மை யென்னே! அப்பெரியார் ஓவியத்தின் உயர்வினைச் செவ்விதின் ஆய்ந்தறிந்து, அதில் தோய்ந்து, இன்புற்ற தன்மை பெரிதும் போற்றற் குரியதாகும்.

கடவுள் இயற்கையின் வடிவாய் இலங்குகின்றனர். இயற்கை என்பது ஒரு சிறந்த ஓவியமே யன்றி வேறன்று. இவ்வோவியமே, இறைவன்தன் உண்மையை யுணர்த்துவதாகும். இதனையே இறைவன், தனது திரு மேனியாகக் கொண்டுள்ளான். இறைவன் தன் திரு மேனியாம் ஓவியத்தின் அழகே நாம் கண்டு இன்புறும் இயற்கை அழகாகும்.

நம் பண்டைத் தமிழ்க் கவிகள், ஓவியத்தில் திளைத்த வாழ்க்கையராய், அவ்வோவியத்தைப் பெரிதும் பாராட்டி, அதனைத் தமது காவியத்துள் புகுத்தலாயினர். அவர், ஓவியத்திற்கு முதன்மை யளித்தவ ராகையால், தாமியற்றிய காவியப் பனுவல்களில் ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் எனத் தொடங்கி, அப்படலங்கள் தோறும் ஓவியப் படங்களையே தீட்டிச் சென்றனர்.

ஓவியச் சிறப்பு வாய்ந்ததே உலகமெனப்படும். கண்ணுடையோர் உலகெங்கும் ஓவியங்களையே காண்பர். அவர்க்கு இவ்வுலகம் ஓவிய மயம்.

சித்திரத் தொழில் வல்லோன் *சீரையில் தீட்டுவானமைந்த ஓவியம், தூரியம் தொடத் தொடத் துலங்குதல் போன்று, பரிதியம் செல்வன் தன் பன்னிறக் கதிர்கள் படப்பட உருவு தெரியாது இருண்டு மயங்கிய காட்சி கழிந்து,

* சீலை (canvas)

பொருள்களின் உறுப்புக்கள் மெல்ல மெல்ல விளங்கத் தோன்றும் வைகறைத் தோற்றம், இயற்கை ஓவியமே யன்றிப் பிறி தென்னை ? கானத்தே மலர்ந்த முல்லைப் பூக்கள், வானத்தே யெழுந்த தென வயங்கும் விண் மீன் கூட்டத்தின் நாப்பண், வெள்ளி வெண் கும்ப மொத்து விளங்கும் பால் நிலாக் காட்சி, ஓவியச் சிறப்பினை யுணர்த் துவதன்றோ ? அளக்கலாகா அளவும் பொருளுங் கொண்டு நில மகளுக்குச் சிறந்த தொரு முடியே போன்று விளங்கும் மலையின் காட்சியும், இன்னுயிரேனும் கொள்வது தீது. கொடுப்பது நன்றெனக் கொள்ளும் வள்ளியோரைப் போல் திரைக் கரங்களால் நித்திலங்களை வாரி யெறிந்திடும் நீலக் கடலின் தோற்றமும், இயற்கை அன்னை, நாம் இன் புற வேண்டி இழைத்திட்ட இணையிலா ஓவியப் படங்களே யாகும்.

இயற்கைச் சித்திரங்களைக் காணும் ஓவியன், அவற்றைப் படத்தில் தீட்டிக் காண்போர் கண்களுக்குச் சிறந்த விருந்தினை யாற்றுவன். கவிஞனோ, அவ்வியற்கை ஓவியங்களைத் தனது காவியத்துள் அழகுற அமைத்துப் படிப்போர் மனத்தைப் பண்புறச் செய்து இன்பம் விளைப்பன்.

ஓவியம் வல்லான் செய் தொழிலினும் காவியம் வல்லான் செய் தொழிலே மாண்புடையதாக மதிக்கப்படும். ஓவியன், தான் கண்ட காட்சியைக் கண்ட வாறே சித்திரித்துக் காட்டுபவனுவான். இயற்கைக் காட்சிக்கும், அவ்வோவியன் கை புனைந் தியற்றும் செயற்கைக் காட்சிக்கும், வேற்றுமை தோன்று திழைத்தலே அவன் செய் தொழிலாகும்.

கவிஞனோ, தான் கண்ட காட்சியைப் பாட்டோவியப் படுத்தி, அவ்வோவியத்துள் அரிய வுண்மைகளை அமைக்கும் பெற்றியனுவான்.

நெற் பயிர் விளைந்து நின்ற காட்சியைத் திப்பியப் புலமை வாய்ந்த திருத்தக்கதேவர்,

" சொல்லருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காயத்தவே "

என்றனர், இப்பாட் டோவியத்துள் தேவர், இழி குணம் வாய்ந்த செல்வந்தரின் செயலையும், கல்வியால் உயர் குணம் படைத்த உத்தமரின் இயல்பையும் ஒரு சேரப் பொருத்திக் கூறுகின்றனர். இங்ஙனம் அரிய வுண்மைகளைப் பாட்டோ வியத்துள் அமைத்துக் கற்போர் மனத்தை விழுப்ப முறச் செய்தலே, கவிஞனை ஓவியனின்றும் பிரித்து உயர்த்துவ தாகும்.

அறிவாற் சிறந்த மனிதனுக்கு இவ்வுலகில், அரிய வுண்மைகளை வாய்ந்த கவிகளே கதியாகும். மனிதன் மனத்தைப் பண்படுத்தி, அவனுக்கு உலக இயல்பை ஆடி போல் விளக்கி, அறிவுறுத்துவன கவிகளே யாம்.

மனிதன், தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்கள் துன்பம் தந்திடும் பெற்றிய வாயின். அவைகளால் பெரிதும் இன்ன லுற்று இரங்குவன். அவனது நெஞ்சம், சாந்தியைப் பெறாது அல்லலுற்றுப் பல் வகையில் அலைந்து திரிந்திடும். அது சாந்தியைப் பெறும் வரை அமை வுறுதலில்லை. வாழ்க் கையாம் மா பெருங் கடலுள் மனிதனுடைய நெஞ்சமாகிய மரக்கலன், ஆசையாம் திசை தொறும் அலைந்து மதனெனும் வன் பாறையால் எற்றுண்டு கெடா வணம் சாந்தியாம் சுகத் துறை சேர்தற்குக் கவிகளே சிறந்த தொரு சுக்கானாய் நின்று துணை புரிவன வாம்.

கவிகளின் துணை கொடு சாந்தியாம் சுகத் துறை சேர்ந்த வித்தகரே, இவ்வுலகில் முன்னேற்ற மடைந்தார் யாவரினும் முற்பட்டவராவர்.

# கல்விப் பெருக்கம்

அளவுக்கு மிஞ்சினுல் அமுதும் நஞ்சாம்' எனும் ஒரு தமிழ்ப் பழமொழி நமது வாழ்க்கையின் நிகழ்ச்சிகளில் பெருவழக்காய் வழங்கி வருகின்றது. இம் முதுமொழியின் கருத்து, எக்காரியத்திலும் அளவு கடந்து தலைப்படல் ஆகா தென்பதாம். இது, பொதுப்பட நோக்குழிச் சிறந்த தோர் உண்மையைக் கொண்டதே யாகும். ஆனுல், இதனை எதற்கும் பொருத்திக் கூறல் ஏற்புடைத்தாகாது. கல்வியில் தலைப்படும் மக்களுக்கு இம்மூதுரை பொருந்துவ தெங்ஙனம்? கல்வி கற்பதற்கு அளவுதான் யாது? அவ்வளவினை மீறினுல் கற்போர் எய்தும் நஞ்சனைய தீமைதான் யாதோ? அறிந்திலம்.

கல்வி, எல்லை யற்றுக் கலை மகளும், 'கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது உலகளவென்று', ஓதும் தொழிலை மேற்கொள்ளு மாறு, பரந்து பட்டுள்ளதாகையால், அதனை ஒருவர், அதிகமாகக் கற்பதால் அவர்தம் உடல் நலம் கெடுவதோடு மன நிலையும் திரியும் என்பார் ஒரு சாரார். கல்வியால் அறிவு வளர, வளர, துயரமும் தொடர்ந்தே வளரும் என்பார் மற்ருெரு சாரார். கல்விப் பெருக்கம், கடவுள் நம்பிக்கையை வேரறக் களைந்து நாத்திகம் புகுத் திடும் என்பார் பிறிதொரு சாரார். கல்வியைப் பற்றி இங்ஙனமெல்லாம் கூறுவோர்க்கு யாம் கூறுவதும் ஒன் றுண்டு.

கல்விப் பெருக்கத்தால் ஒருவர்தம் உடல் நலம் சிறிது குன்றுமே யொழிய கெடுவதின்று; உடல் நலம் குன்றினும், அறிவின் விளக்கத்தால், மனம், அவ்வுடலின் தளர்ச்சியை உணர்வதின்று; மனம் உடலின் தளர்ச்சியை உணராத போது, உடல் நலங் கெடுவதின்று.

உண்மையாகிய கல்விப் பெருக்கம் மக்களின் மனத் திரிவுக்குக் காரண மாகாது. இயற்கைக்கு மாறுன போலிக் கல்வியே மக்களின் மனத்தைத் திரித்து, அவர்களைப் பெருந் துன்பத்திற் கிரை யாக்கிவிடும்.

கட் புலனும், செவிப் புலனும், ஒன்றைக் காண்பதைக் கொண்டும், கேட்பதைக் கொண்டும், அமைவன வல்ல. அறிவுப் புலனும் அத்தன்மைத்தே யாம்.

இறைவன், யாவற்றையும் உலகில் மிக்க அழகுடன் அமைத்துள்ளனன். அவன், தான் படைத்த உலகை மனிதனுடைய மனத்தேயும் பொருந்த வைத்துள்ளான். மனிதனுடைய மனம் உலகைப் பிரதிபலிக்கும் சிறந்த வோர் ஆடியாகும். கண்கள், ஒளியினைப் பெற விழைதல் போன்று, மனமும் பொருள்களை அறிய அவாவுகின்றது. அது, பல் வகைப்பட்ட பொருள்களையும் அப்பொருள் களின் மாறுபாட்டையும் அறிய விழைதலே யன்றி, அம் மாற்றத்திற் குரிய விதி முறைகளையும் அறிதற்கு முயலும். மனத்தின் பான்மை இஃதாயின், அதனைக் கல்வியால் எத் துணை நிறைப்பினும் தீங்கொன்று மில்லை.

**கல்லாத பேர்களே நல்லவர்கள்**

அறிவுடை மகன், அரை குறைக் கல்வியை அடை தற்குப் பெரிதும் அஞ்சுதல் வேண்டும். அஃதவனுக்கு நஞ்சனைய தொரு தீமையைப் பயப்பதே யாகும். அதனைப் பெற்றேன் அகந்தை யென்னும் பேய் வயப் பட்டு அலைந்து திரிந்திடுவன்; தனக் கொருவர் இணை யில்லை யென் றிருமாந்து எவரையும் இகழ்ந்துரை யாடுவன்.

நிறைந்த கல்வியாளர், அடங்குதலே தமக்கு அறிவா மென் றெண்ணி, அடக்கத்தைத் தமக்கு அணியாக் கொள் வர்; அவ்வடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு உயிரென வோம்புவர்.

தானெனும் தடித்த வோர் எண்ணமும், தன் பெருமை யைத் தானே பறை யறைந்திடும் கயமையும், அரை குறைக் கல்வியின் விளை வாகும். கல்வியில் சிறிதளவு தலைப்பட்டு, இத்தகைய குற்றங்களுக்கு இலக்காகி நிற்போரைக் காட்டி லும், கல்லாத பேர்களே நல்லவர்க ளாவர்.

அரை குறைக் கல்வியாளர், தம் கல்வித் திறத்தை வெளிப்படுத்த வேண்டுமெனத் தமக்குள் எழும் இச்சையை அடக்கிடும் ஆற்ற லற்றவ ராவர். அன்னார், தமது கல்வியை உண்மையாக அறிந்து, அதன் அளவினை மதிப்பிடவும் வல்லாரல்லர். இக்குறையால், அவர், தம்மினும் உயர்ந்த பெரியாரைத் தமக்குச் சமான மென்பர். இதனால், அவர், கல்வியால் சிறந்த பெரியோர்க்குப் பணியாது நிற்றலோடு, கல்லாதவரை மிகத் தாழ்வாகக் கருதி,அவரை அவமதிப்பவ ராவர். இத்தகைய ஒழுக்கங்களைக் கொண்டவர் மக்களால் பெரிதும் வெறுககப்படுவது ஒருதலை யாகும்.

இத்தகைய அரை குறைக் கல்வி, பெண்களுக்கு அமையு மாயின், பெருந் தீங்கினைப் பயக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. பெண்கள், கல்வியில் தலைப்பட்டுத் தற்காலத் தீய புனைந்துரைகளையும், சிறந்த பயனை ஒரு சிறிதும் பய வாப் பத்திரிகைகளையும் பயிலும் பான்மையால், சாதாரண மக்களைக் காட்டிலும் தாம் மிக உயர்ந்தவராகக் கருதி, அவர்களை இகழ்ந்து நிற்பர். இத்தகைய பெண்டிர், மன் றேறியும் ஆடவரோடு வாதாடிச் சுதந்தரம் வேண்டு மென்பர்; உலகில் ஆடவரைப் போன்று வாழ்தற் கில்லையே என்று பெரு முழக்கஞ் செய்வர். இத்தகைய பெண்பாலர், இல்லறமாம் நல்லறத்தை இனிது நடாத்த ஆடவர்க்கு வாழ்க்கையில் பெருந் துணையாதல் வேண்டுமெனும் நல் லெண்ணம் அற்றவராய், தமது இல்லத்திற்குரிய கடமை களையும் இகழ்ந்து நிற்பர்; நாடோறும் அடுப்பூதி அட்டில் தொழில் புரிதல், கல்வி யறிவற்ற காரிகையார் செயலென

மதிப்பர். இஃதே அரை குறைக் கல்வியால் அவரடையும் பயனாகும்.

நிறைந்த கல்வி யறிவு வாய்ந்த மகளிர், அடக்கமே அணியாய்ப் பூண்டு, தம தில்லத்தில் அமைதியும் அழகும் பொருந்திடத் தம்மரும் பணி புரிவர் ; வருந்தி வந்தவரோடு நயம் படப் பேசி நல் விருந்தாற்றுவர்; தங் கையாற் சமைத்த உணவினைத் தங் கணவர் இனிதென உண்ணப் பெரு மகிழ் வெய்துவர்.

*“ முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
†கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் ‡குய்ப்புகை கமழத்
தானுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே ”

எனக் குறுந்தொகையில் வருமோர் அகவற்பா, மனைவியின் கடமையை விளக்குதல், ஈண்டு நாம் கண்டு இன்புறற் பாலதாம்.

கல்விப் பெருக்கம், பெண்களை இத்தகைய சிறந்த மனைவிமார்களாகப் பொலிந்திடச் செய்யும் என்பதை எவரே மறுக்க வல்லார்?

மக்கள், கல்வியை அறவே நீங்கப் பெற்றிருப்பதைக் காட்டிலும், சிறிதளவு கல்வியறிவு வாய்ந்திருத்தல் ஒரு வகையில் நலமே யாம். சிறிதளவு கல்வியைப் பெற்றவர், தமது குறையை உணர்ந்திடல் வேண்டும். அங்ஙனம் உணர்வ ராயின், அவர், மேன் மேலுங் கற்றிடல் வேண்டு மென் றவாவித் தமது கல்வியைப் பெருக்க முனைவர். இத் தகைய மக்களுக்குச் சொற்ப கல்வியும் சிறந்த தொரு பயனை நல்குவ தறிக.

---

* கட்டித் தயிர் † கழுவுறு கலிங்கம்—தோய்த்த ஆடை
‡ தாளிப்புப் புகை

கல்விப் பெருக்கம், ஈகை ஆதிய அறவொழுக்கங்களைப் பொருந்தா விடத்துத் தீங்கினைப் பயப்பதாகும். அறவொழுக்கங்கள், கல்விப் பெருக்கத்தைப் அழகுறச் செய்யும். நிறைந்த கல்வியாளர், சிறப் புற்று விளங்குதற்கு அரிய வொழுக்கங்கள் பல, கருவியா யிருக்க, ஈகை ஒன்றினையே முதன்மைப் படுத்திக் கூறல் என்னையோ வெனின், ஈகையன்றிப் பிற, மனிதனை உயர்த்தா வாகலான். இதனு லன்றோ,

கல்வியும் ஈகையும்

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு"

என்றார் திருவள்ளுவரும். இக்குறட்பாவிற்கு உரை கண்ட பரிமேலழகியார், "இசை பட வாழ்தற்குக் கல்வி, ஆண்மை, முதலிய பிற காரணங்களும் உளவேனும், 'உண்வின் பிண்டம் உண்டி முதற்றே' ஆகலின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக ஈதல் என்றார்" என்று கூறி யிருத்தலும் ஈண்டு நாம் உடன் நோக்கற் குரியது.

கல்விப் பெருக்கம் வாய்ந்தவர், அறவொழுக்கத்தில் நிற்பராயின், அவர் தம் கல்வி, சிறப்பினை எய்தி, அறிஞரால் போற்றிப் புகழப்படும். அறவொழுக்கம் சிறிதேனும் தழுவப் பெறுதார் கல்வி, பயனற்றதென்றே கருதப்படும்.

கல்விப் பெருக்கத்தை விழைபவர், போலித் தத்துவங்களால் மதி மயங்கலாகாது. உலகின்கண்ணுள்ள பொருள்களின் உண்மைத் தத்துவங்களை அன்னார் உணர்ந்திடுதற்குக் கல்வியின் எல்லைகளைச் செவ்விதின் அறிந்திடல் வேண்டும்.

கல்வியின் எல்லைகள்

கல்வியின் எல்லைகள் மூன்றென்ப. முதலாவது, மனிதன், மரணம் உண்டென்பதை வாழ்க்கையில் மறந்து இன்பத்துள் ஆழ்ந்துவிடாமை. இரண்டாவது, துன்பத்திற்

காற்றுது வாடி வருந்துருமல், கல்வியால் வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள்ளல். அளக்கலாகா அறிவினைக் கொண்ட இறைவன்தன் இரகசியங்களை அளந்திடற் கெண்ணுமை, மூன்ருவதாகும்.

கல்வியாளர், " கூற்றம் நமது பின்றையே நின்றது " என்பதைச் செவ்விதின் உணர்வராயின், அவர், பொருளின் பங்களில் ஆழ்ந்து விடாது, உலகில் வாழ்வாங்கு வாழும் வகை யறிவர். அறியவே, கல்வியால் அடையக் கிடக்கும் சிறந்த பயனை எய்துவர் என்பது திண்ணம்.

மரணத்தை மறந்தவராய், பொருளின்பங்களில் தோய் பவர், தாம் கற்ற கல்வியால் எள்ளளவேனும் பயனுருமல், தமது வாழ் நாளை வீழ் நாளாக்குவர்.

இரண்டாவதாகக் கல்வியாளர் போது மென்னும் மனத்தைப் பெறுதற்குப் பெரிதும் முயலுதல் வேண்டும். அம்மனம் படைத்தோர்க்கு வேண்டாமை யென்னும் விழுச் செல்வம் எளிதில் கை வல்லியமாகும். இச்செல்வ மொன்றே, கல்வியாளரை வாழ்க்கையில் உயர்த்துவ தாகும்.

மூன்ருவதாகக் குறித்த கல்வியின் எல்லை, நாம் நன்கு சிந்தித்தற் குரியதாம். இயற்கையைச் செவ்விதின் சிந்தித் துணர்ந்து, இறைவன்தன் இரகசியங்களை அறிந்திடத் தலைப்படுபவர், போலித் தத்துவத்தால் தம்மைத் தாமே பாழ் படுத்திக் கொள்வர். இவர்தம் அறிவினை நிறைந்த அறி வென லாகாது. என்னை ? இயற்கையைக் கண்டு வியந்து, வியந்து, அதனையே சிந்திப்பதால் உறும் பயன், அறிவின் ஆக்கமே யாயினும், அவ்வறிவினை, நிறைந்த அறி வென்று கொள்ளுதற்கில்லை. ஒருவன் ஒன்றினைக் கண்டு வியக்கின்ருன் எனின், அவன்தன் அறிவு குறைவுற்றதே யொழிய நிறைவுற்றதன்று.

மனிதனுடைய அறிவுப் புலன் செங்கதிரோன் தன் மையை ஒத்துள்ளது. செங்கதிரோன் எங்ஙனம் இம் மண்

ஞுலகை விளக்கி, விண்ஞுலகை மறைக்கின்றனவே.

கடவுளைக் காண்டல்

அஃதே போல் மனிதன் அறிவும், இயற்கைப் பொருள்களை விளக்கித் தெய்விகத் தம்மையை மறைப்பதாகும். அறிஞர் சிலர், நாத்திகராதற்குக் காரணம் இஃதேயாம். அன்னர், தமது அறிவின் துணை கொடு, இறைவன் இயல்பினைப் பல் வகையாலும் அறிந்திட முயன்றும் பயனைப் பெருமையால் நாத்திகத்திற் புகுவர். இந்நாத்திகர் அனைவரும் நிறைந்த கல்வியாளர் என்று நாம் கருதுதற் கில்லை. இவர்கள் தத்துவ சாத்திரங்களை ஒருவகையாகப் பயின்ற பான்மை யாலும், தமதறிவின் ஆற்றலாலும், இறைவனுடைய இரகசியங்களை அறிந்திட முயலுவர். இவர்க்குத் தெய்வி கத் தன்மை புலனுவதின்று. அது, தத்துவ சாத்திரங்களில் மிக ஆழ்ந்த பயிற்சி யுள்ள அறவொழுக்காளிகளுக்கே புலப்படுவதாகும். ஒருவர், கல்விக் கடலை நிலைகண்டுணர்ந் தவரே யாயினும், தாமெனும் நினைப்பும், தமதெனும் இச்சையும், அவரை விட்டகலாதவரை அவர்க்குத் தெய்வத் திரு வொளி தோன்றுவ தின்று. மனத்துக்கண் மாசற்ற மாண்புடையோரே, அநுமான அளவையால் இறை வன்தன் இயல்பினை உணர்தற் குரியவர். தாமெனும் தடித்த தொரு நினைப்பும், தமதெனும் கயமையும், ஒழிந்த ஒள்ளிய உள்ளத்தோர்க்கே, கல்விப் பெருக்கம், கடவுளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுவ தாகும்.

கல்வியும் வீரமும்

அரசியற் றுறையாளர் சிலர், அதிகமான கல்வி, அறி வின் வண்மையை அழித்துவிடும் என்றும், உள்ளத்தின் ஊக்கத்தைச் சிதைத்து அரசியல் தொழில்களைச் செவ்விதின் புரியாத வாறு சோம்பேறிக ளாக்கிவிடும் என் றும், இன்ன பல கூறு நிற்பர். இவர்தம் பேச்சு, மிக்கதோர் ஆரவாரத்தைக் கொண்டதே யொழிய சற்றேனும் சார முடைய தன்று. நமது நாட்டில் கல்வியும் வீரமும் ஒருங்கே

கைகோத் துலாவிய காலம் இருந்த துண்டென்பதை, அன்னூர் அறிந்திலர் போலும். நம் நாட்டரசர்கள், கல்விக் கடலை நிலை கண்டுணர்ந்த பெரியோர்கள் என்பதற்கு நம் பண்டைப் பனுவல்கள் சான்று பகர்வன வாம்.

காசி காண்டம், நைடதம் முதலிய இனிய நூற்களை நமக்கு இயற்றித் தந்த அதிவீரராமபாண்டியன், அரசியல் துறை வகித்தவனல்லனோ? அவனுடைய பெயரே அவனைச் சிறந்ததொரு வீரனெனக் குறிக்கவில்லையா? எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியெனும் அரும் பொருள் ஐந்தையும், தொகை, வகை, விரியில் தருகெனக் கேட்ட அருங்கலை விநோதனாகிய சீயகங்கன், அமராபரணன் அல்லனோ? பரிபாடலின் பதினைந்தாம் பாடலைப் பாடிய கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி யிடத்து அரசியலும் புலமையும் நட்பு பூண்டிருக்க வில்லையோ? புறநானூற்றில் பாடிய கோப்பெருஞ் சோழன் அரசனல்லனோ? கற்றறிந்தாரேத்துங் கலித் தொகையுள் முதலாவதாகிய பாலைக் கலியைப் பாடிய சேரமான் பெருங்கோன் என்பவனும், நான்காவதாகிய முல்லைக் கலியைப் பாடிய சோழனல்லுருத்திரன் என்பவனும், அரசியல் உணர்ச்சி அற்றவரோ? அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலிய அரிய நூற்களில் அருங்கவி இயற்றிய, பாலைக் கலியைப் பாடிய பெருங்கோவின் அரசியல் முறை, கல்விப் பெருக்கத்தால் குறைவடைந்ததோ? புறநானூற்றில் பாடிய பாண்டியன் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன், கல்வித் துறையிலும் அரசியல் முறையிலும் சிறந்து விளங்கிய செய்தி, எவரால் மறுத்தற் கியலும்? இங்ஙனம், அரசரும் புலவருமாக விளங்கினோர், நந்த மிழகத்தில் எண்ணிலர். இவ்வுதாரணங்களால் கல்விப் பெருக்கம், மனிதனுடைய அறிவு,குணம் முதலியவற்றைச் சிதைக்குமென்பார் கூற்று, ஆதாரமற்றதென்பது சொல்லாதே பெறப்படும்.

கல்விப் பெருக்கம் ஒருவர்க்கு வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் இணையற்ற சிறப்பினைப் பயக்கும் என்பதில் எட்டுணையும் ஐயப்பாடில்லை. கல்விப் பெருக்கத்திற்கு அதிகமான ஓய்வு வேண்டப்படுவதால், மனிதன், மடியின் வயப்படல் இயற்கை யென்பார் ஒரு சாரார். உண்மையில் நோக்குழி, கல்வியாளரைப் போன்று ஊக்கமும் உழைப்புமுடையார் உலகில் அரிதினு மரிது. உதாரணமாகக் கல்வியாளரைப் போன்று வாணிபத் துறையில் பேருழைப்பும் பெரு முயற்சியும் செலுத்துவோர், கல்லாதவருள் வெகு சிலரே யாவர். நிறைந்த கல்வி யறிவு வாய்க்காதவர், வாணிபத்தைச் சிறப்பாக ஊதியத்தை முன்னிட்டு விரும்புபவரா வர்; சிறந்த கல்வியாளரோ, அங்ஙன மின்றி உழைத்தலை முன்னிட்டுப் பெரிதும் விழைபவ ராவர். இவர்களே, தமது அறிவினை வாணிபத் துறையில் பயன்படச் செய்வர். கல்விப் பெருக்கம் வாய்ந்த ஒரு சிலர், வாணிபத்தில் தளர்வுற்ற ஊக்கமுடையவ ராதலும் உண்டு. அவருடைய தளர்ந்த ஊக்கத்திற்குக் காரணம், அவர்தம் உரங் குன்றிய உடல் நிலை யாகலாம். அஃதன்றெனின் அன்னாரின் இளகிய மனப் பான்மை, காரணமாதலுங் கூடும். இக் காரணங்களை விடுத்துக் கல்வியின் தலையில் குறையினைச் சுமத்துதல் அடாத தொன்றும். உண்மையில் மனத்தைச் சோம்பலின் வயப்படாமல் காப்பது கல்வியே யாகும் என்பதை நாம் மறக்க லாகாது.

**கல்வியும் உழைப்பும்**

கல்வியின் விழுமிய பயனை உணர்பவர், உலகில் வெகு சிலரே யாவர். புதுமையை அறிய வெழும் இயற்கை அவாவினால் கல்வியைக் காமுறுவார் ஒரு சாரார். விநோதத்திலும் மகிழ்ச்சியிலும் மனத்தைச் செலுத்த வேண்டிக் கல்வியை விரும்புவார் சிலர். புகழினைத் தேடுவான் கல்வியை நாடி நிற்பார் மற்றுஞ் சிலர். செல்வத்தை ஈட்டுதலையே அடிப்

**கற்பவர் நோக்கம்**

படையான நோக்கமாகக் கொள்வார் பலர். வயிற்றுப் பிழைப்பிற் கெனக் கல்வியில் தலைப்படுவார் அநேகர்.

புதுமையை அறிய விரும்பிக் கல்வியில் தலைப்படுவோர், அலைந்து திரிந்திடும் உள்ளத்திற்கு அக்கல்வியால் தமக்கொரு அமளியை அமைப்பவ ராவர். விநோதத்தையும் மகிழ்ச்சியையும் விரும்புவோர், தண்டலைப் பொழிலைக் காண்பவ ராவர். புகழினை விரும்புவோர், தமக்கோர் உயரிய இடத்தைச் சமைப்பவராவார். ஊதியத்தை உன்னுவோர் பண்டம் பகர்ந்திடும் ஓர் அரிய இடத்தைக் தமக்கென அமைப்பவராவர். கல்வியில் தலைப்படும் இவ்வகுப்பாளர் அனைவரும், கல்விப் பயனைக் கண்டவ ராகார். தெய்விகக் கொடையாகிய விவேகத்தை, அறத்தில் திரியா வகை செலுத்துதற்குக் கல்வி, சிறந்த துணை யாம் என்பதை அவர் உணர்வதில்லை. மக்கள், செம்மை நெறி பற்றிச் செயற்கரிய செய்தற்குக் கல்வி, சிறந்த துணைக் கருவியாய் நின்று பேருதவி பயப்பதாகும் என்பதை அவர் ஓர்ந்திடார். மாந்தர், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, பின்னர்த் தெய்வ நிலை அடைதற்கு வழி காட்டியாய் அமைவது, கல்விப் பெருக்கமே யாகும் என்பதை நாம் மறக்கலாகாது.

விலங்கிற்கும் மக்களுக்கும் எத்துணை வேற்றுமையோ அத்துணை யாகும், கற்றவர்க்கும் மற்றவர்க்கும் உளதாய வேற்றுமை. கல்விப் பெருக்கத்தால் மனிதன் தனது விலங்குத் தன்மையை அறவே விலக்கிடல் கூடும். நிறைந்த கல்வி, மனிதனுடைய நொய்மைத் தன்மை, இறுமாப்பு, மூர்க்கம் முதலிய கயமைகளை வேருடன் களைந் தெறியும்.

**கல்வியின் ஆற்றல்**

கல்விப் பெருக்கத்தால் மனிதன், மரண பயத்தையுங் கடக்க வல்லன்; வாழ்க்கையில் நேரும் வெந் துயரைச் சகித்திடற்குப் பேராற்றலைப் படைப்பன்; சாதலும் பிறத்தலும் தத்தம் வினைப் பயத்தா லாவ தென்பதையும், பொருள்கள், ஆதலும், அழிதலும், இவ்வுலகிடை இயல்

பென்பதையும், அறிபவ ருவான். இத்தகைய சீரிய கொள்கைகளின் உணர்ச்சி பெற்றவரே, கல்விப் பெருக்கத் தால் விழுப்ப மெய்தியவ ராவர். இவரே, மக்களை உண்மை நெறி புகுத்த வல்லார். இவருடைய ஆட்சிக் குட்பட்டவர் வாழ்க்கை, இன்பந் ததும்பி இலங்குவன வாகும்.

ஆள்பவரின் பெருமை, ஆளப்படும் பொருளின் பொறுப் பினை அநுசரித் துள்ளது. ஆள்பவரின் சிறப் பெல்லாம் ஆளப்படும் பொருளின் சிறப்பே யாகும். ஆடு மாடுகளை அடக்கி யாளும் ஓர் இடையன்தன் ஆளுகை, சிறந்ததொன் ருகக் கருதப்பட மாட்டாது. பிள்ளைகளை அடக்கி யாண் டிடும் ஓர் ஆசிரியரின் புகழும் பெரிய தொன் றன்று. அடிமைகளைத் தன தெண்ணம் போல் அடக்கி யாண்டிடும், கொடுங் கோல் மன்னவன் ஆட்சியை மதிப்பார் இலர். இத்தகைய ஆட்சிகள் பலவற்றுள்ளும் கல்வியின் ஆட்சியே சிறப்புடைய தாகும். மக்களின் உள்ளத்தில் அரி யணை யமைத்து அரசியல் நடாத்தும் கல்வியின் ஆட்சிக்கு நிகராய தொன்றினை நாம் இவ் வுலகின் கண் காண்டல் அரிதினும் அரிதாம். இஃதே உண்மையில் பயனுடை அரசிய லாகும்.

செல்வமும், கல்வியைப் போன்று ஒருவரை உலகில் உயர்த்துவ துண்டு. செல்வந்தரை, மக்கள் போற்றிப் புகழ்தல் கண்கூடு. ஆனல், செல்வத்தால் எய்தும் புகழ், பரந்து பட்ட தன்மைய தன்றி, ஒரெல்லைக்கு உட்பட்ட தாகும். அஃது என்றும் நிலைத் திருப்ப தன்று. செல்வம் அகன்ற காலை, அப்புகழும் அழிதலுறும்.

கல்விப் பெருக்கத்தால் எய்தும் புகழோ, அங்ஙன மன்று. அது, வரம்பிகந்த தொன்ரும்; ஒரு காலத்தே தோன்றி மற்றொருகாலத்தில் மறைந்திடும் பண்பின தன்று. நிறைந்த கல்வி நலம் பூத்த பெரியாரை, வானமும் வைய மும் வந்து தாள் வணங்கும் என்பது இழுக்காகாது. இத் தகைய விழுமிய ஆற்றல் சால் கல்விக்கு இவ்வுலகில் எதனை நாம் இணையாகக் கூறுவது?

இத்தகைய ஆற்றலால் இணையற்ற கல்விப் பெருக்கத்தின் இன்பத்தைப் பற்றிச் சிறிது இயம்புவது, நமது கடமை யாகும்.

**கல்வி இன்பம்**

இவ்வுலகில், இன்பங்கள் பலவற் றுள்ளும் கல்வி யின்பமே உண்மையில் தனிப் பெருமை வாய்ந்து தலை சிறந்து விளங்குவ தாகும்.

நுகருந்தொறும் பெரும் போகத்தை வழங்க வல்லது கல்வியே யாகும். கல்வியால் விளையும் இன்பம், மாந்த மாந்தத் தெவிட்டிடாத் தேறலாகும். ஏனைய இன்பங்கள், நுகர்ந்த பின்னர் கைக்கும் இயல்பின வாம். அவை, தமது போலித் தன்மையை, நுகர்வோர்க்கு இறுதியில் இனிதின் விளக்கிக் காட்டும் இயல்பின. மக்கள் வீணிலே மயங்குவ தெல்லாம் அவ்வின்பங்களின் பண்பினைக் கண்டன்று; அவ்வின்பங்களின் புதுமையைக் கண்டே யாகும். காமாதி இன்பங்களின் உண்மைப் பண்பு, கைக்கும் இயல்புடைய தாகும். இதனாலன்றோ இன்பத்தை யிடை யீடின்றி நுகர்ந்த காமுகர் சிலர், தாம் நுகர்ந்த இன்பத்தின் இயல்பினை இறுதியில் செவ்விதின் ஓர்ந்து, தெவிட்டிடாப் பேரின்பத்தை யெய்திட, வேட்கை மீக்கொண்டு, துறவு பூண் டொழுகலாயினர். கல்வி யின்பத்தை ஒரு வகையாகப் பேரின்ப மென்னலாம். கல்வியாளர்க்கு அது, நுகருந் தொறும் தெவிட்டாததாய்ப் புதுச் சுவை தோற்றுவிக்கும் பெற்றித்தாகும். இவ்வின்பத்தில் ஆழ்பவர்க்கு வேட்கையும் தணிவும் மாறி மாறித் தோன்றுவதாம். ஆகவே, இதில் தோய்பவர், இடை யீடின்றி யின்பத்தில் திளைத்து, இன்ப மயமாய் நிற்பர் என்பது ஒருதலை.

ஒரு மரக்கலன், காற்றால் எற்றுண்டு நிலை தடுமாறிக் கடலுள் ஆழ்ந்திடுங் காட்சி, கடற் கரையி லுள்ள ஒருவர்க்குப் பெரிய தோர் இன்பம் பயப்பதாகும். வேழ நெடும் படைக ளிரண்டு கை கலந்து கடும் போர் புரியுங் காட்சியும், மலையின் யுச்சியி லிருந்து காணும் ஒருவர்க்குப்

பெரியதோர் இன்பத்தைப் பயப்பதேயாம். இவ்வின்பங்கள் யாவும், உண்மையென்னும் கோட்டையின்கண், கல்வியாம் உயரிய இருக்கையில் இனி தமர்ந்து இவ்வுலகிடை உழன்று வருந்தும் மாந்தரின் குற்றங்களைக் காணும் இன்பத்திற்கு ஒரு சிறிதும் இணை யாகா. இத்தகைய கல்வி யின்பத்தை ஒரு முறை நுகர்ந்தவர், அதனைக் கை விடு மாறு பிறர், தம்மைச் சிறையகப் படுத்திச் சித்திர வதை செய்யினும் அவ்வின்பத்தை யிழந்திட, ஒரு நாளும் இசையா ரெனின், அவ்வின்பத்தின் பெருமையை என்னென் றியம்புவது!

கல்வியின் மாண்பு

மனித இயல்பு, என்றும் அழியாது நிலைத்திடும் புகழையே அவாவி நிற்கும். புகழின் காரணமாய் ஆக்கப்பட்ட சிறந்த கட்டடங்களைக் கால நதி, விழுங்கிச் செல்வது கண்கூடு. கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், திருத்தக்கதேவர் முதலியோரின் விழுமிய நூற்களைக் கால நதி, கரந்து செல்லுதற் குரியதோ ராற்றலை இன்றும் பெற்றிலது. அஃதென்றும் பெறுவ தன்று.

உருவச் சிலைகளும் ஓவியப் படங்களும் சில்லாண்டு கழிந்ததும் உருவு தெரியாமல் அழிதலுறும். காவியங்களில் அமைந்த ஓவியங்களோ என்றும் அழியாமல் நிலைப்பனவாகும். உருவச் சிலைகள், காண்பவர் தமக்கு உண்மைகளை யுணர்த்தும் பெற்றியன வல்ல; காவியங்களில் அமைக்கப்பட்ட ஓவியங்களோ, அரிய வுண்மைகளை அறையும் இயல்பின. அவை, மக்களின் உள்ளத்தில் அங்குரித்து, ஒன்று, பல் கோடியாகப் பெருகிடும் நெல் விதை போன்று, நாளுக்கு நாள், பெருகிக் கொண்டே செல்லுந் திறத்தன.

பல்லாயிரக் காதங்களுக்கு அப்பாலுள்ள அயல் நாடுகளுக்குப் பண்டங்களைக் கொண்டேகும் மரக்கலங்கள், மிக்க பயனுடையதென மதிக்கப்படுமாயின், மிகப் பரந்திராநின்ற காலமாகிய கடல் மூலமாய் அறிவுப் பண்டங்களை உலக முழுவதும் கொண்டேகும் கல்வியின் மாண்

பினை என்னென்று வழுத்துவது. அதன் பெருமை, ஞாலத்தினும் மாணப் பெரிதாகும்.

கல்வியை வள்ளுவர் போற்றிய பான்மை

முடிவாகக் கல்விக் கடலை நிலை கண்டுணர்ந்த பொதுமறை ஆசிரியர், திருவள்ளுவர், கல்வியைப் பற்றி எங்நோக் குடையார் என்பதை, ஈண்டு நாம் ஆராய்தல், ஏற்புடைத்தாகும்.

திருவள்ளுவர், கல்வியினிடத்துப் பெருகிய தோர் ஆர்வமுடையார் என்பதும், கல்வியாள ரிடத்து அளவு கடந்த அன்புடையார் என்பதும், திருக் குறளிலுள்ள பல பாக்களால் தெற்றெனப் புலப்படுவன வாம்; கல்வியைப் பற்றித் தனிப்படப் பேசவந்த அப்பெரியார், தம்மாலுரைக்கப்படும் செய்திகள், பத்துக் குறட் பாக்களால் அடங்காமை நோக்கிக் கல்வி, கல்லாமை, கேள்வி யென்னும் மூன்று அதிகாரங்களால் அச்செய்திகளை யுணர்த்தச் சமைந்தனர். அம்மூன்று அதிகாரங்களால் உணர்த்தியும், கல்வியைப் பற்றிய செய்திகள் முடிந்த பாடில்லை யென்றறிந்த அப்பெருந்தகையார், அறிவுடைமை, சொல்வன்மை, அவையஞ்சாமை எனும் மற்றுமொரு மூன்று அதிகாரங்களையும் வரித்துக்கொண்டனர். கல்லாமை முதலிய ஐந்து அதிகாரங்களும் கல்வியோடு மிக்க தொடர் புடையன வென்பது யாவரும் ஒப்ப முடிந்த உண்மை. எத்துணைப் பெரிய தொரு செய்தியையும் மிக்க நுட்பமாய் ஈரடியால் அளந்து கூற வல்ல திருவள்ளுவரே, ஆறு அதிகாரங்களால், கல்வியைப் பற்றிப் பேசினு ரென்றால், அதன் பெருமையை நாம் என்னென்று பகர்வது! அவர், கல்வியின்பால் செலுத்திய ஆர்வத்தை என்னென் றியம்புவது!

திருவள்ளுவர், தமது நூலின்கண் கல்வியைப் போன்று வேறு எதனையும் அத்துணை அதிகமாக வற்புறுத்திப் பேசவில்லை என்று கூறுதல் மிகை யாகாது.

கல்லாதவரைக் குருடரென்றும், விலங்குகள் என்றும் சாற்றும் ஆசிரியர், கல்வியால் மதி நுட்பம் படைத்த புலவர்களை மிகப் பாராட்டிப் பேசுகின்றனர். நிரம்பிய கல்வி வேண்டுமென்பார்,

> " அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
> நூலின்றிக் கோட்டி கொளல் "

என்றார்.

கற்குந் தோறும் இன்பங் கண்டவ ராதலால், அதனுண்மையை, அவர், 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என்னும் உவமை முகத்தால் விளக்குகின்றார். அங்ஙனம் மேன்மேலும் படிக்கப் படிக்கத் தோன்றும் நயங்களில் உள்ளம் உருகி, இதுகாறும் நாம் இவற்றை அறிந்திலமே என்று இரங்குபவராய், அவர்,

> " அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
> செறிதோறுஞ் சேயிழை மாட்டு "

என்று காமத்துப் பாலில் கூறிய குறட்பா, கல்வி யிடத்து அவர்க் குளதாய பேரார்வத்தை நமது அகக் கண்ணுக்கு இனிது புலப்பட விளக்குவ தாகும்.

பற்றற்று மெய்ப்பொருள் காண்டற்குக் கல்வியே, பெருந் துணையாம் என்பதை,

> " கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி "

என்றார்.

கல்வியாளர்க்கு யாதும் ஊரே, யாவரும் கேளிரே ஆதலால், கல்வியின் துணையை மக்கள் கைவிடுத லாகா தென்பார்,

> " யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு "

என்றார்.

கல்வி கற்பித்தவரைக் கண்ணைக் கொடுத்தவ ரென்று புகழ்தல், நமது நாட்டில் பெரு வழக்கா யிராநின்றது. அவ் வழக்கினை யொட்டி ஆசிரியர்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்றனர்.

'கண்ணுடையர்' என்பதற்குப் பரிமேலழகியார், "தேயமிடை யிட்டவற்றையுங் கால மிடை யிட்டவற்றை யுங் காணும் ஞானக் கண்ணுடைமையிற் கற்றாரைக் கண்ணுடைய ரென்றும்"—என்று உரை கண்டனர். இவ்வுரை யீண்டு நாம் பெரிதும் பாராட்டற் குரியதாகும்.

ஊனக் கண்களை யிழந்த ஒருவன், இம்மைப் பயன் ஒன்றினையே இழந்தவனுவன். மக்களுக்கு ஞானக் கண்ணுக விளங்கும் கல்வியை யிழந்தவன், இம்மைப் பயனை யிழப் பதே யன்றி, மறுமைப் பயனையும் இழப்பவ னுவான் என் பது, வெள்ளிடை மலையென விளக்கமுறும்.

எத்துறையிலும் அரை குறைக் கல்வியாளரை எவரும் விரும்பார். நிறைந்த கல்வியால் பரந்த அறிவு வாய்ந் தவரையே உலகம் பெரிதும் மதித்துப் போற்றிடும்.

கல்லூரி மாணவர்

கல்லூரியில் முடிவான பட்டங்களைச் சிலர் பெற்ற வுடனே, கல்வியைக் கற்று முடித்துவிட்டதாக எண்ணிக் கல்விப் பயிற்சியை அறவே கைவிடுகின்றனர். உண்மையில் கல்விப் பயிற்சி, கல்லூரியை விட்டகன்ற பின்னரே, தொடங்கப் படுவதாம் என்பதை, அவர் ஒரு சிறிதும் ஓர்ந் திலர் போலும். அவர், அங்குப் பெறும் பட்டங்கள் யாவும், கல்விப் பயிற்சியில் தலைப்படலுக் குரியவரென்று அவரைக் காட்டிடும் சின்னங்களே யன்றி வேறன்று. இச்சின்னங் களைத் தாங்கியவர், வாழ்க்கையில் ஊக்கமும், உறுதியுங் கொண்டு, கல்விப் பெருக்க மெய்திடக் காமுறுதல்

வேண்டும்; கல்வி, கரையில வாகையால், அவர், தமது வாழ் நாள் முழுதும் அதில் தலைப்படல் மாண்புடைய தாகும்; சாந்துணையும் கற்பதே கடனென்று உறுதி பூண் டொழுகல் வேண்டும்.

மனிதன், நடித்தற் குரிய நாடக மேடை மறுமை யாகையால், அவன், தனது வாழ்க்கையை அறவே கல்விப் பயிற்சிக் கென விடுத்திடல் விழுமிய தென்பர், ராபர்ட் ப்ரௌனிங் (Robert Browning) என்னு மோர் ஆங்கிலக் கவிஞரும். ஆகையால், கல்வியில் தலைப்படுவோர், நீரொழிய பாலுண் குருகு போல், பொருள் நூல், கருவி நூல் முதலியவற்றைத் தெள்ளிதின் ஆராய்ந்து, தமது வாழ் நாள் முழுதும் ஐயந் திரிபற ஓதி, அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டின் நெறி யறிந்து, அதனை எய்திட முயல்வர்.

# கல்வியும் ஒழுக்கமும்

செல்வங்கள் பலவற்றுள்ளும் மக்களுக்கு உற்றதுணையாய் உறுதி பயப்பது, கல்விச் செல்வம் ஒன்றேயாகும். இஃது ஏனைய செல்வங்களைப் போன்றல்லாமல் என்றும் அழியாச் சிறப்பினை வாய்ந்து விளங்குவதாகும்.

ஒருவர்க்கு, இம்மையில் பெற்ற கல்விச் செல்வம், வினைகள் போல் உயிரின்கட் கிடந்து, அது புக்குழி புகுமாறு, எழுமையும் உதவுதலை யுடையது. இக்காரணத்தால் இது பொருட் செல்வத்தினின்றும் பிரித்துச் சிறப்பிக்கப் படுகின்றது.

இத்தகைய விழுமிய செல்வத்தை அரிதின் வாய்க்கப் பெற்ற வித்தகர்க்குப் பேரெழில் செய்யும் சீரிய அணிகலனாக விளங்குவது, ஒழுக்கமே யாகும். கல்வி, பெரிதும் நிரம்பப் பெற்றும், ஒழுக்கம் ஒரு சிறிதும் வாய்க்கப் பெறாதவர், மதிப்பிடற் கரிய மணியினைத் தன்னிடங் கொண்டு, நஞ்சினைக் காலும் கட்செவி யெனவே கருதப்படுவர்.

விழுப்பம் தரவல்ல, உயிரினும் சிறந்த ஒழுக்கத்தை நாம், கற்றவர் யாவர் மாட்டும் காண்டல் அரிதா யுள்ளது. கல்வியாளர் ஒரு சிலரிடத்தே மட்டும் இஃது ஒளி விட்டு மிளிருகின்றது. கற்ற ஏனையோர் இதனைப் பெறுமைக்குக் காரணம் யாதென்பதை ஈண்டு ஆராய்தலே நமது கடமையாகும்.

ஒழுக்கத்திற்கு அடிப்படையான காரணம் கல்விமே யாகும் என்பார் ஒருசாரார். மக்கள் ஒழுக்கத்தைப் பெற்று மாண்புறுதற்குக் கல்வி காரணம் ஆகாதென்று வாதிப்பார் பிறிதொரு சாரார். ஒழுக்கத்திற்குக் கல்வி காரணமாகா தென்பார் கூற்று செவ்விதின் ஆய்தற் குரியதே யாகும்.

கல்வியே ஒழுக்கத்திற்குக் காரணமாயின், உலகில் கற்றவர் அனைவரும் ஒழுக்க முடையவர்களாய்த் திகழ்தல் வேண்டும். ஆனால், நாம் உலகில் கற்றவர் அனைவரையும் ஒழுக்க முடையவராய்க் காண்ப தில்லை. கல்வியாளருட் பலர், ஒழுக்கத்தில் ஒல்கியவராகவே காணப்படுகின்றனர். இஃது உலகில் கண்கூடு. இதனால், கல்வி, ஒழுக்கத்திற்குக் காரண மாகா தென்பது போதரும்.

ஒழுக்கம் கல்வியின் பயன் அன்றென்பதை நாம் மேலே *காண்டலளவையான் நிறுவினோம். இனி அதன் உண்மையை, † மறையளவையின் துணை கொண்டு முடிவு காண்டல் நமது கடமையாகும்.

ஒழுக்கத்திற்குக் காரணம், கல்வியே யாமாயின்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபி
> னிற்க வதற்குத் தக"

என வருங் குறளில், ஆசிரியர், திருவள்ளுவர், 'அதற்குத்தக நிற்க' என்று பணிக்க வேண்டியதில்லை, என்னை? கல்வியின் விளைவு ஒழுக்கமாயின், அது, கற்றவர்க்கு அவர்தம் முயற்சி யின்றியே தானய் அமைதல் வேண்டு மாகலின். அதனல் ஆசிரியர்க்கு அது கருத்தன்மை யுணர்க.

ஒழுக்கத்தை ஒருவர் பெறுதற்கும், மற்றொருவர் பெறாமைக்கும் அவரவர் மனப் பான்மையே காரண மாவதன்றிக் கல்வியே அடிப்படை என்று கூறுதல், அமைவுடையதன்று. கல்வி, மக்களை ஒழுக்க நெறியில் நிற்கக் கற்பிக்கும். நிற்குந் தொழிலுக் குரிய பண்பு, மக்களின் உள்ளத்தின் பள்ளத்தாக்கில் பதிந்து கிடக்கின்றது. அவ் வியற்கைப் பண்பே, மக்களின் ஒழுக்கத்திற்கு அடிப்படையான காரண

---

* பிரத்தியக்ஷப் பிரமாணம்

† சுருதிப் பிரமாணம்

மாகும். ஆகையால், கல்வி ஒருவரை ஒழுக்க நெறியில் திருந் திடத் துணை புரியுமே யொழியத் திருத்திடாது. திருந்தும் தன்மை கல்வியாளர்தம் உள்ளத்தை ஒட்டி யுள்ள தென்ப தையும், அவர் திருந்த உதவும் தன்மை, கல்வியின்பா லுள்ள தென்பதையும், நாம் தெள்ளிதின் உணர்தல் வேண்டும்.

கற்றவர்க்கே பேரெழில் பயப்பனவாய பணிவுடைமை, அடக்கமுடைமை, அழுக்காறுமை முதலிய பண்புகள், பிற விக் குணங்களாய் மக்களிடத்துப் பொருந்துவன வாகும். இவற்றை இயற்கைப் பண்புகள் என்னலாம். இப்பண்பு களை மக்கள் பல்காலும் பழகி எய்துதல் மிக அரிதே யாகும். இச்சீரிய பண்புகள் வளர்தற்குக் கல்வி பெருந் துணை புரியவல்லது என்பதில் எட்டுணையும் ஐய மின்று. அங்ஙனம் துணை புரியும் தன்மையால் கல்வி ஒழுக்கத்திற்குக் கார்ணமாகும் எனின், அது ஒரு வகையில் ஏற்புடைத் தாகும்.

ஒருவர், பன்மொழிப் புலவராய், கருவி நூல், பொருள் நூற்களின் எல்லையுட்பட்ட எண்ணிறந்த நூற்கள் யாவற் றையும் ஐயந் திரிபற ஓதி, அவற்றின் பொருள்கள் அனைத் தையும் ஒருசேரத் தம்மகத்துட் கொண்டவரேனும், ஒழுக் கத்தை ஒரு சிறிதும் வாய்க்கப் பெறுதவராயின், அவர் இவ்வுலகில் ஒரு சிறந்த நடை நூல் நிலையமாகவே கருதப் படுவர். அவர் அரிதின் பெற்ற கல்வி, முருக்கின் மண மிலா மலரென மதிக்கப்படும். அவர் சிறந்த வகையில் கற்றும், உண்மை அறிவு வாய்க்கப்பெறுதவராகையால், அறிஞரால் கற்றவரென்று கருதப்படமாட்டார், என்னை ? கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமு மாகலின், அவ்வொழுக்கம் வாய்க்கப் பெறுதவர், பல கற்றும் அறி விலாதவராகலின். ஆகவே, கல்வி நிரம்பிய வித்தகர் அனைவரும், ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பிடல் வேண்டு மென்பது வெள்ளிடை மலை யென விளக்கமுறும்.

ஒழுக்கத்திற்குரிய குணங்கள் பல. அவற்றுள் கற்றவர்க்கே பெரிதும் சிறப்புரிமை யுடைய குணங்களுள் பணிவுடைமையே முதன்மை பெற்றதாகக் கருதப்படும். ஒருவருடைய பெருமையைப் புலப்படுத்துவது, அவர்தம் பணிவுடைமையே யாம். அங்ஙனமே ஒருவருடைய சிறுமையைத் தூற்றுவதும் அவர்தம் பணிவின்மையே யாகும். உண்மையில், உயர்ந்தோர் எனப்படுபவர் என்றும் பணிந்தே நிற்பர். அவர் தாமறியாத தொன்றில்லை என்று இருமாந்திடார்; தாமே அறிவில் மிக வுயர்ந்தவர் என்று எவரையும் இகழ்ந் துரையாடார். அவர், அறிவுநூற் பொருள்களை அறிந்திடுந் தோறும், தமது அறியாமையைக் காண்பவராகையால், என்றும் பணிந்து நிற்கும் பெற்றியைப் பெறுபவராவர். அற்பரோ, அங்ஙனமின்றித் தம்முடைய கல்விப் பெருக்கத்தைத் தாமே வியந்திடுவர்; தமக்கு இணை ஒருவர் உளரோ வென்று வாய் கூசாது பேசுவர்; உலகத்தை உய்விக்கும் உத்தமப் பெரியார் தாமே யென்று மனப்பால் குடித்து மகிழ்வர். இவர், எவர்க்கும் பணிந்திடாத் தன்மையைப் பெற்றவராவார். இவ்விரு திறப்பட்டவர் இயல்பினை,

**பணிவுடைமை**

" பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து "

என்று வள்ளுவனார் அழகு தோன்ற அறிவிப்பது, ஈண்டு நாம் நோக்கற் பாலதாகும். ஆகவே, கற்றவர் தமது கல்விப் பெருக்கத்தைத் தாமே பறை யறைந்து சாற்றுதல் புன்மையென் றுணர்ந்து, பணிவுடைமையை மேற்கொள்ளுதல் மாண்புடைய தாகும்.

கல்வியாளர், தாம் கற்றனவற்றை வாய்ப்பின்றி யாண்டும் கூறுதல், விரும்பத் தகுந்த தன்று. இக்குற்றத்திற்குக் கல்வியாளர் பெரும்பான்மை யோர், இலக்காவதை நாம் காணலாம். இடனறிந்து கல்வியாளர், தமது உரையை மாற்றிக்

**அடக்கமுடைமை**

கொள்ளுதலே நேர்மைத் தாகும். கற்றவர், எக்கூட்டத்தில் இருக்கின்றனரோ, அக்கூட்டத்திற்குரிய பேச்சையே பேசுதல், பொருத்த முடையதாகும். பொதுமக்களிடையே அவரிருக்க நேருமாயின் எளிய நடையில் அனைவரும் விரும்பும்படித் தம்மருங் கருத்துக்களை வழங்கி, அவர்களை இன்புறுத்தல் வேண்டும். சிறந்த கல்வியாளர் நிறைந்த அவையின்கண் தாம் புக நேருமாயின், அவ்வறிஞர் அனைவரும் உவக்கும்படி சொல்லாடல் சிறப்புடையதாகும். எக்கூட்டத்திலிருப்பினும், தமது உரையால் அக்கூட்டத்திலுள்ளார் அனைவரும் சிறந்த பயனைப் பெறுமாறு செய்தலே, கல்வியாளர், தமது கடமை என்பதை மறத்த லாகாது.

கற்றவர், தமது கல்வித் திறத்தைச் சட்டைப் பையில் வைத்திடும் * நாழிகை வட்டிலைப் போலப் பிறர் காணாதவாறு மறைத்திடல் வேண்டும். நாழிகை என்ன வென்று பிறர் கேளாத போதெல்லாம் தம்மிடத்தும் ஒன்றுள்ள தென்று அதனை எடுத்து நீட்டுதல் ஏற்புடைத் தன்று. அஃது அறிஞரால் பெரிதும் வெறுக்கப்படுவ தாகும்.

**உலக நடை**

நூற் கல்வியோடு ஒருவர்க்கு உலகக் கல்வியும் இன்றி யமையாத தாகும். கல்விப் பெருக்கம் மிக் கெய்தி, உலக அநுபவம் ஒரு சிறிதும் வாய்க்கப் பெருதாரும் உளர். அவர்தம் கல்வி எனைத் துணையதேனும், மக்களால் மதித்திடற் குரிய தன்று. நூற் கல்வியோடு, உலகம் போகின்ற போக்கையும் நன்கறிந்து அதனுடன் தமது வாழ்க்கையை இணைத்துச் செல்பவரே உண்மையில் கற்றவர் என்று போற்றப்படுவர்.

தற்கால மனிதன் என்று யாவராலும் பாராட்டப் படுபவன், † பச்சோந்தியின் பண்பினைப் பெற்று விளங்கிடல் வேண்டும். பச்சோந்தி எங்ஙனம் தனக்காதாரமாகிய இடத்தின் நிறத்தைத் தனது நிறமாகக் கொண்டு,

---

* Pocket watch    † Cameleon

காட்சி வழங்குகின்றதோ, அங்ஙனமே உலக அநுபவம் வாய்ந்த தற்கால மனிதனும், தான் இயங்கும் இடத்திற்குப் பொருந்தத் தன்னை இணக்கிக் கொள்வன். இத் தன்மை வாய்க்கப் பெறுதார், உண்மையில் கற்றவ ரென்று கருதப்படமாட்டார். இதனாலன்றோ,

> " உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றுங்
> கல்லா ரறிவிலா தார் "

என்றார் திருவள்ளுவரும். பல நூற் புலமையைப் படைத்திருந்தும், உலகத்தோ டொட்ட ஒழுகலைக் கல்லாதவரைக் குறளாசிரியர், அறிவிலாதார் என்று அறைகின்றனர். இதனால் உலக நடை, புலவர்க்கு எத்துணை இன்றி யமையாத தென்பதும், திருவள்ளுவர், உலக நடையை எத்துணை உயர்வாகக் கருதினார் என்பதும், நன்கு விளக்க முறுகின்றது.

நூற் கல்வி, ஒருவர்க்குச் செவ்விதின் நிறையு மாயின், அவர் எதனையும் காரண காரியங்களோடு முறைப்படக் கூட்டி முடிவு காணும் வல்லமையை எளிதின் பெறுதல் கூடும். இவ்வல்லமையை வழங்கும் வகை யறியாது, பாழ் படுத்துவர், பலர்.

நா வடக்கம்

கற்றவர். எதனையும் அமைதியுடன் ஆராயாமல் தமது முடிவான தீர்ப்பினைக் கொடுத்தல் ஆகாது. ஒருவர் தம் கல்விப் பெருக்கம், நேர்மையான ஆராய்ச்சியால் முடிந்த தீர்ப்பினைக் கொள்ளா தொழியு மேல், பெருந் தீங்கினை விளைவிப்பதாகும். அது, கல்வியாளரைப் பல் வகைப்பட்ட குற்றங்களின் கொள் கல மாக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. ஆகவே, கல்வியாளர் தம்முடைய தீர்மானங்களைக் கொடுக்கின்ற காலங்களில், அமைவுடன் ஆய்ந்தல்லால் கூறத் துணிதல் கூடாது. இந்நிலையில் அவர்க்கு இன்றி யமையாததாய்ப் பொருந்துவது நா வடக்கமே யாகும். அவர், தம்மால் காக்கப்படுவனவாகிய யாவற்றையுங் காவாதொழிவ ராயினும் நாவொன்றினையே

நனி காக்கக் கடவராவர், என்னை ? காவாக்கால் விளையும் தீங்கு பெரிதாகலான். இதன் உண்மையை,

*" ஆக்கப் படுக்கு மருந்தளைவாய் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன விந்திரிய மைந்தினும்
நாக்கல்ல தில்லை நனிபேணு மாறே"

எனவரும் செய்யுள் செவ்விதின் விளக்குவதாகும். இக் கவி, நாவடக்க மின்மையால் விளைந்திடும் தீமைகளை முறைப்படுத்தி நன்கு விளக்கிக் காட்டுகின்றது. ஆகையால், கல்வியாளர், எச்செய்தியையும் அமைவுடன் ஆராய்ந்து, தமது முடிவான கருத்தினை வெளிப்படுத்துதலைத் தங் கடனாகக் கொள்ளுதல் வேண்டும்.

மக்கள் தம் அறிவு இருவகைப்படும்; ஒன்று நல் லறிவு; மற்றொன்று புல்லறிவாகும். நல்லறி வென்பதே உண்மை அறிவெனப்படும். புல்லறி வென்பது, அறிவு முதிராத் தன்மை என்ப. அறிவு முதிராத் தன்மை அறி வுடைமை யாகாது. அறிவின்மையின் இலக்கணம் கண்ட ஒருவர்க்கு அறிவுடைமையின் இலக்கணம் செவ்விதின் விளக்கமுறும் ஆகையால், அறிவின்மையை நாம் ஆய்தலே நமது கடமை யாகும்.

புல்லறி வாண்மை

உண்மையில் அறிவின்மை யெனப்படுவது ஒருவர் தம்மை அறிவுடையர் என்றெண்ணிச் செருக்கித் திரியும் மனப் பான்மையே யாகும். இஃதே புல்லறிவாண்மை யெனப்படும். 'யாம், இலக்கணம் கண்டேம்; இலக்கியம் தேர்ந்தேம்; பன்மொழிப் புலவரும் ஆயினேம்; புலவர் கூடாத்துள் யாமே நடு நாயகம் என்று தருக்கிக் கூறுதல், புல்லறிவாண்மையின் வல்லமையாகும். உலகில் இப்புல் லறிவாண்மை, இன்னும் பலப்பல வகையில் காட்சி வழங்கு கின்றது.

* வளையாபதி

இக்காலத்தில் கல்விப் பெருக்கத்தின் வல்லமையால், உண்மை பெரிதும் மயங்கிடுமாறும், மக்களுக்குப் புதுமை தோன்று மாறும் தமது கொள்கையை நிலை நாட்ட விரும்பு வார் பலர். உலகில் பெரும் புகழ் பெறுவான் வேண்டி, அறிஞர் யாவரும் ஒப்ப முடிந்த தோர் உண்மையைத் தமது கல்வித் திறத்தால் முற்றிலும் கண்டித்து முரண் கொண்ட தம் கொள்கையை நிறுவ முயலுவார் சிலர்; நச்சி னார்க்கினியர், பரிமேலழகியார் முதலிய பேராசிரியப் பெருந் தகையாளர்தம் உரையைத் திருத்தியும் மாற்றியும் அமைக்கத் துணிவார் மற்றுஞ் சிலர். இவர்கள் அனைவரும் நஞ்சினுங் கொடிய புல்லறிவாண்மையை மேற்கொண்டொ ழுகும் போலிப் புலவரென்றே அறிஞரால் கருதப்படுவர். இவர்தம் கயமையை உன்னியே போலும் தெய்வப் புலவர்,

"உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்"

என்று இழித்துக் கூற லாயினர்.

இத்தகைய போலிப் புலவர், சமயக் கொள்கைகளிலும் தலைப்பட்டு நம்முடைய சமயங்களுக்கும் உறுகணை விளைப்பர். நமது நாட்டின்கண் உள்ள பல்வேறு சமயங்கள் ஒரு சிறிதும் நன்மையை நல்குவன அல்ல வென்றும், ஒன்றி னொடொன் றெவ்வா இச்சமயங்கள், மக்களிடையே பூசலைப் பெருக்கிப் பேதமைக்குப் பெரிதும் வித்திடுமென் றும், கண் மூடிப்பழக்கங்களைப் பெரிதும் கற்பிப்பன வென்றும், அநாகரிகத்திற்கு அடி கோலி, அடிமைக் குழியில் ஆழ்த்திடு மென்றும், இன்ன பல கூறி அவற்றை இகழ்ந் துரையாடுவர். இவர்கள் அனைவரும் பல் வேறு திறப்பட்ட சமயங்களின் அடிப்படையான கொள்கையை அறியாதவ ராவர்; அச்சமயங்களின் முடிவான நோக்கத் தையும் உணர்ந்திட முயலாதவரு மாவர்.

உலகம் என்பது, பல் வகைப் பட்ட மக்கள் தொகுப்புக் களைக் கொண்டது. ஒரு தொகுதியி லுள்ளார் மனப்

பான்மை, பிறிதொரு குழுவிலுள்ளார் மனப் பான்மையோடு மாறு கொண்டதாகும். ஒரு கூட்டத்தாரின் கொள்கை, மற்றொரு கூட்டத்தாரால் வெறுக்கப்படுவதாயும் காணலாம். உலகில் இத்தகைய மனப் பான்மை என்றும், யாண்டும், காணப் படுவ தாகும். இஃதே உலகின் இயற்கை யாகும்.

**சமயக் கொள்கை**

உடன் பிறந்தார் நால்வரை யுடைய ஒரு சிறிய குடும்பத்தை நாம் ஆராய்வோ மாயின், ஒரே வயிற்றிற் பிறந்து, ஒரே குடும்பத்தில் வாழும் நால்வரும் நான்கு வகையான குணங்களைக் கொண்டவராய் விளங்குகின்றனர். இந் நால்வரும். நடை, உடை, உணவு, பாவனை முதலிய வற்ருல் ஒருவரோடொருவர் வேறுபட்டிருப்பது உலகில் கண்கூடாய் இராநின்றது. இங்ஙனம் ஒரு சிறிய குடும்பத்திலுள்ள நால்வரின் மன நிலைகள் நான்கு வகையின வாயின், இப்பேருலகின் பரப்பில் அமைந்து கிடக்கும் பல்வகைப்பட்ட மக்களின் மனப் பான்மை எத்துணை மாறுபடும் என்பது சொல்லாதே பெறப்படும்.

இங்ஙனம் உலகில் மாறு கொண்ட மக்களின் மன நிலைமையை ஒன்று படுத்த வேண்டி இறைவன், தன் இன்னருளால் அவரவர், தங்கள், தங்கள் மனப்பான்மைக்குப் பொருந்திய சமயங்களைப் பின்பற்றி உய்வராக வென்று பல்வேறு சமயங்களை இவ்வுலகின்கண் புகுத்தலாயினன் என்பதை, நாம் தெள்ளிதின் உணர்தல் வேண்டும். இவ்வரிய கருத்தினை,

> " இவரிவ ரிறையவ ரெனமன வுறுதியோ
> டவரவர் தொழவறு சமயமு மருளினை "

என்ற திப்பிய வாக்கு செவ்விதின் வலியுறுத்துவது காண்க.

மழை நீர் ஒன்றே, யாறு, குளம், கிணறு, ஏரி முதலிய பல்வகைப்பட்ட துறை தொறும் பரவி, யாற்று நீர், குளத்து நீர், கிணற்று நீர், ஏரி நீர் என உலகில் பல்வகைத்

தாய பெயரினைப் பெற்றுக் காட்சி வழங்குவதே போல், இறைவனும் பல் வேறுபட்ட சமயங்களில் வேற்றுமைக் காட்சியை வழங்குகின்றான். யாறு, குளம் முதலிய துறை தொறும் விளங்குவது மழை நீரொன்றே எனக் கருதப் படுவது போலப் பல்வகைச் சமயங்கள் தோறும் அப்பரம் பொருள் பரந்துளது என்பதை அறிதல் வேண்டும். மேற் குறித்த நீர் வகைகள் யாவும், முடிவில் கடலின்கண் கலந்து, அக்கடலினின்றும் வேறுபடாமல் ஒன்றாய்ப் பொருந்துதல் போலப் பல் பெருஞ் சமையங்கள் யாவும், கருணைக் கடலாம் அவ்விறைவனையே புகலிடமாகக் கொண்டுள்ளமை, சமய வாராய்ச்சியில் தலை சிறந்த பெரியோர்கள் அனைவரும் ஒரு சேரக் கண்ட உண்மை யாகும்.

இவ்வுண்மையை உணராமற் சிலர், "எமது சமயமே உயர்ந்தது; ஏனையோர் சமயங்கள் தாழ்ந்தன; அவை யனைத்தும் போலிச் சமயங்களின் வகையே யாகும்" என்று ஒருவரோடொருவர் பிணங்கிப் பெரும் பூசல் விளைத்துத் தமது வாழ் நாளை வறிதே போக்குவர். இத் தகைய சமய வாதிகள், பேதமையால் சமையங்களில் வேற்றுமை கண்டு, கடவுளின் ஒற்றுமைப்பாட்டாகிய உண்மைத் தத்துவத்தை உணரா தொழிகின்றனர்.

கம்பநாட் டாழ்வார், தமது இராமயணத்துள், இராம பிரானுடைய திருமேனியின் பொற்பினைக் கண்டு, அதில் ஈடுபட்ட பெண்களின் நிலையினை விளக்க வேண்டி,

"தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னார் உருவுகண் டாரை யொத்தார்"

என்று கூறிய கவியின்கண் அமைந்த உவமை ஈண்டு நாம் ஆய்தற் குரியதாகும். பெண்கள் ஒவ்வொருவரும், இராமனது திரு வுருவின் ஒவ்வோர் உறுப்பின் பொற்

பினையே முற்ற நுகர்தற் கியலாதவராய், அவ்வவ் வுறுப்பின் எழில் இன்பத்தில் ஈடுபட்டுத் தாழ்ந்தா ராகையால், அவன்றன் திரு வுருவத்தை முற்றுற அறியகில்லாதவரே யாயினர். இப் பொருளுக்குக் கம்பர் தேர்ந்த உவமையை, ஈண்டு நாம் நோக்குவாம். இராமனுடைய கவின் பெறு உறுப்பினைக் கண்ணுற்ற காரிகையார், பகைமை கொண்ட சமயவாதிகளை ஒத்து நின்றனர் என்பதே, கவியின் முதல் மூன்றடிகள், ஈற்றடியோடு இயைந்து பயக்கும் கருத்தாகும். பிணங்கிய சமய வாதிகள், இறைவனை ஓர் அளவாக அறிவதே போல், அப்பெண்ணணங்கனையார் அனைவரும், இராமனது திரு வுருவத்தை முற்றுறக் காணுதவராய், அவ் வுருவத்தின் ஒவ்வொரு பாகத்தினையே கண்டவ ராயினுர். இக்கவியால் கம்பர், சமயவாதிகளின் தன்மையை விளக்கிக் காட்டியது ஓர்க.

கல்விப் பெருக்கம் வாய்ந்தவர், பல சமயங்களையும் நன்னெறியிற் செவ்விதின் ஆராய்ந்து, அவற்றின் உண்மைப் பொருளினைக் காண முயலுதல் வேண்டும். அங்ஙனம் முயல்கின்ற அறிஞரே சமயங்களின் ஒற்றுமைப் பாட்டையும் இறைவன்தன் உண்மையினையும் ஒருங்கே தெற்றெனக் காண்டல் கூடும்.

சமயங்கள் யாவும், மக்கள் இவ்வுலகிடை உய்ய வேண்டி, அவரவர் மனப்பான்மைக்கும், நிலைமைக்கும் தக்கபடி, இறைவன்தன் இன்னருளே தமக்கு உருவெனக் கொண்டு தோன்றிய, அற நிலை வழுவாத ஆன்றோர்களால் அமைக்கப்பட்டன வாகும். இவை, இவ்வுலகமாம் பெருங் கடலில், மக்களுக்குச் சாந்தி, பொறை முதலிய சீரிய ஒழுக்கங்களைப் படிப்படிப் புகட்டி, அவர்தம் மனத்தைப் பக்குவப் படுத்திச் சுகத்துறை உய்த்திடும் சிறந்த மரக் கலங்கள் என்பது, நாம் மறக்கற் பாலதன்று.

சமயங்களை ஒட்டி நமது நாட்டில் பல நூற்கள் வெளிப் போந்தன. அவற்றுள் சில புராணம் எனும்

பெயரினைப் பெற்றன. அப்புராணங்கள் யாவும் சமயங்களுக்குப் பெரிதும் அரண் செய்வன வாயின.

புராணம் என்பதற்கு மிக்க பழமை என்பது பொருளாகும். அப்பெயர், ஆகுபெயரால் பின்னர் மிக்க பழமையான செய்திகளைக் கொண்ட நூலைக் குறிக்கலாயிற்று. ஆகவே, நமது நாட்டில் சமயங்களைத் தழுவித் தோன்றிய புராணங்கள் அனைத்தும் நம்முடைய பண்டைப் பெரியோர்களின் அறவொழுக்கங்களின் பண்பையும், இறை வழிபாட்டின் இயல்பையும், நமக்கு நன்கு அறிவுறுத்துவன வாகும்.

புராணம்

பெரியோர்களின் சரித்திரங்கள், மக்களுக்குச் சிறந்த பயனைப் பயப்பனவாகும். அப்பெரியோர்கள் தம் குடும்பத்துள் அறத்தினை வித்தி, அன்பு நீர் பாய்ச்சி, வளர்த்த பயிர், வெளி யுலகுக்கு அருட் போகமாய் அமையுந் தன்மையை அறியுந் தோறும் மக்களின் மனம், எத்தகைய வன்மையதேனும், மென்மை யுற்றுப் பக்குவப்படும் என்பதில் ஒரு சிறிதும் ஐயப்பாடின்று.

முடிவாகச் சமய வுணர்ச்சி பெற்ற மக்களைத் தூய்மை செய்து, அவர் தம் அன்பினைப் பெருக்கி, அருள் உலகினுள் உய்ப்பன, புராணங்களே யாகும். அன்பையும் அருளையும் பெற்றவர் இதயத்தில், இறைவன் தானே வந்து தங்குவன் என்பது மறை முடித் துணிபாகும். ஆகவே, இறைவனை எளிதின் எய்துதற்கு இன்றியமையாத சிறந்த ஏதுக்களாவன புராணங்களே யாகும் என்ப துணர்க.

இத்தகைய விழுமிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள புராணங்களைத் தற்கால ஆராய்ச்சியாளர், சிலர், எள்ளி,இழித்துரையாடல்,அறிஞர் யாவரும் இரங்குதற்குரிய தொன்றும். சமய ஆராய்ச்சி ஒரு சிறிதும் வாய்க்கப்பெறாத இவர், "புராணம் என்பது பொய்யும் வழுவும் புகுத்தப் பெற்றது; உயர்வு நவிற்சிக்கு உறையுளாயுள்ளது; பாழ்த்த பெரு மூட நம்பிக்கையில் மக்களை ஆழ்த்

திப் பாழாக்குவது என்று இன்ன பல கூறிப் புராணங்களைக் கண்டிக்கத் தலைப்படுகின்றனர். இவ்வாராய்ச்சியாளர் கூறுவனவற்றைக் கண்டித்து உண்மையை நிறுவுவாம்.

ஒன்றினை ஒருவர் கண்டிக்க எழுவராயின், அவர் தம் மால் கண்டிக்கப்படுவதை முதன்மையாக நன்கு ஆய்ந்தறிதல் வேண்டும். அங்ஙனம் ஆய்ந்தறியாமல் அத்தொழிலை மேற்கொள்ளுதல் அறிவின்பாற் படாததாகும்.

புராணங்களையும் சமயங்களையும் இழித்துரையாடுவோர் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதின்மர் புராணத்தையோ, சமயத்தையோ ஒரு சிறிதும் ஆய்ந்தவரல்லர்; அவற்றின் உண்மைத் தத்துவங்களைப் பெரியார் வாயிலாகக் கேட்டுத் தெரிந்தவருமல்லர்; அங்ஙனம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் விருப்பமாவது இவர் மாட்டு உளதோ வெனின், அது தானும் இல்லை. இத்தகைய போலி ஆராய்ச்சியாளர், ஆன்றவிந்த அறிஞரால் ஆக்கப்பட்ட தெய்விகம் வாய்ந்த புராணங்களைப் பற்றிப் பேசுதற்கு எங்ஙனம் உரிமை யுடையவராவர்? இப்போலிப் புலவர். "திருமால் பன்றியாய்ப் படி யெடுத்தான் என்று உமது புராணங்களில் பேசப் படுகின்ற அச்செய்தி எங்ஙனம் பொருந்தும்" என்பர். "அங்ஙனம் அக்கடவுள் இப்புடவியைத் தனது கோட்டால் இடந்து ஏந்தின போது, அவன் எதன் மீது நின்றனன்" என்று கேட்பர். இக் கடாவிற்கு நேரிய தொரு விடையினை உய்த்து, அவர் கேள்வியின் புன்மையை விளக்கிக் காட்டுதும்.

நாம் வதியும் இப் பூமண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் முதலியவை எவற்றின் மீது நிற்கின்றன? இவற்றைத் தாங்குவன எவை? இவ்வினாவினுள் அடங்கிக் கிடக்கின்றது அவர்க்கு யாமிறுக்கும் விடை; எங்ஙனமாலோ வெனின், மேற் குறித்த மண்டலங்கள் அனைத்தும் * இழுவலியால் ஆதாரமின்றி, அந்தரமாக நிற்கின்றன

* ஆகருஷ்ண சக்தி (Gravity)

வென்பது, விஞ்ஞானம் கண்ட உண்மை. அறிவில் பொருளாகிய இம்மண்டலங்களே ஆதாரம் ஒன்றில்லா மலே அந்தரத்தே நிற்க வல்லன வாமாயின், இம்மண்டலங் களையும் இவைபோன்ற பல் கோடி மண்டலங்களையும் படைத்து, அறிவு மயமாய் விளங்கும் அவ்விறைவன் நிற்பதற்கு ஓர் ஆதாரத்தை வேண்டுவனோ? அந்தரத்தே நிற்கும் வல்லமையை வாய்க்காமற் போவனோ? இதனால் மேற் குறித்த வினா, அறிவுடைமையைக் கொள்ளா தொழி கின்றமையின், இத்தகைய கேள்விகளை அறிவின் பாற்படா வென் றொதுக்குக. புராணங்களில் மக்களின் மனத்தைப் பண்புறுத்தும் நல்லியல்புகள் பல விருக்க, அவற்றை யெல்லாம் அறவே கைவிடுத்துப் பயனற்றனவற்றில் தலை யிடும் இவர்தம் தன்மை யிருந்த வாறென்னே! இது கலி காலக் கொடுமையே யன்றிப் பிறிதன்று.

இக்காலத்துக் கல்வியாளர் சிலர், புராணங்கள் இக் காலத்துக்கு வேண்டப் படுவன வல்ல வென்றும், அவற்றை யொழித்த இலக்கிய நூற்களே உண்மையில் அறிவினைக் கொண்டு விளங்குவன வென்றும் கருதுவர். புராணத்தை ஒழிக்க வேண்டுமாயின், காவியத்தையும் நாம் ஒழித்தே தீரல் வேண்டும். என்னை? காவியத்திலும் புராணக் கதைகள் பல பொருந்தி யுள்ளமையின். சங்க இலக்கியங் களோ வெனின், அவைகளும் அவ்வாறே விலக்கப்பட வேண்டுவன வாகும், என்னை? ஆண்டும் புராணக் கதைகள் பல புகுத்தப்பட் டுள்ளமையின். இதற்கு உதா ரணமாக, முல்லைப் பாட்டில், ஆசிரியர், நப்பூதனார்,

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி"

என்று தமது பாட்டின் தொடக்கத்திலேயே புராணக்

கதையாகிய வாமனுவதாரத்தைத் தாம் கொண்ட பொருளுக்கு உவமையாகப் புகுத்தியுள்ளமை காண்க. இப் பாட்டின்கண் புகுத்தப் பட்டுள்ள அப்புராணக் கதை படிப்போ ருள்ளத்தைப் பரவசப் படுத்தும் தன்மையதாய் விளங்கி, இப்பாட்டிற்கே பேரெழில் பயந்து நிற்பது, புலவர் பெருமக்கள் எவரும் மறுத்தற் கரியதோ ருண்மை யாகும்.

பத்துப் பாட்டாசிரியர்கள், உயர்வு நவிற்சி, இல் பொருள் உவமை முதலிய அணிகளை அறவே வெறுக்கும் இயல்பினர். உள்ளதை உள்ளவாறு உரைக்கும் பெற்றியர். அத்தகைய ஆசிரியர்களே புராணக் கதையைப் பொன்னே போல் போற்றி அதனை வேண்டுழி, வேண்டுழி தம்முடைய நூற்களில் தழுவினரென்ருல், அவர்கள் புராணத்திற்கு எத்துணை ஏற்றம் அளித்தவர் என்பது சொல்லாதே பெறப்படும். ஆகவே புராணத்தை விலக்க வேண்டு மென்பார் கூற்று, அறிவுடைமையை அறவே நீங்கிய தாகும்.

மக்களை அற வொழுக்கத்திற் செலுத்தி, அன்னுர் அன்பெனும் பாசத்தால் இறைவனைத் தமது இதயமாந் தறி யூடு இணைத்துப் பிணித்திடப் பெருந்துணை புரிய வல்லது, புராணமே யாகும்.

# இறை வழிபாடு

இவ்வுலகில் நாம் காணும் இயற்கைப் பொருள்கள் அனைத்தும் இறைவனைப் புலப்படுத்தும் இயல்பின வாகும். இறைவன் இயற்கை வடிவாய் இலங்குகின்றான். இயற்கை வணங்குதற்குரிய தொன்று. ஆகையால் இயற்கை வழிபாடு, இறை வழிபாடாம். இதனாலன்றோ நம் முன்னோர் இயற்கையை வழிபட்டனர். இக்கருத்துப் பற்றியே அவர் நிலத்தை, பூ தேவியென்றும், ஆதித்தனைச் சூரிய பகவன் என்றும், நெருப்பை அங்கிக் கடவுள் என்றும், காற்றை, வாயு பகவன் என்றும் வழங்கினமை காண்க.

இறத்தலும் பிறத்தலும் மக்களின் இயல்பெனக் காட்டும், மடிந்தெழும் அலைகளைக் கொண்ட நீலக் கடலின் தோற்றமும், இறுதியே வரினும் சிறிதளவும் கலங்கிடாப் பெரியார் நிலையைக் காட்டிடும் பிறங்கலின் காட்சியும், மக்களின் உள்ளத்து இறை யுணர்ச்சியை எழுப்புவன வாகும். இறை யுணர்ச்சி, யாண்டாண்டுப் பொலிவுற்றுக் காணப்படுகின்றதோ, ஆண்டாண்டு மனிதத் தன்மையின் மாட்சி புலப்படுவ தாகும் எனக் * கருதலளவையான் அறியப்படும். இவ்வுணர்ச்சி யின்மை, விலங்கினது தன்மையைக் காட்டுவதாகும். இறை உணர்ச்சியைப் பற்றி நாம் செவ்விதின் உணர்வதன் முன்னர், இறை யிலக்கணத்தை உணர்தல் நமது கடமை யாகும்.

இறை இலக்கணத்தை விளக்கிடல் எளியதொன்றன்று. இறையெனப்படுவது வாக்கு, மனம்,காயம் என்பனவற்றைக் கடந்த பொருளாகையால், எளிதின் விளக்கப்படும் தன்மைய தன்றாம்; அப்பொருள் வேதத்தின் முடிவும் விரிக்கொணாதது எனப்படுமாயின், நம் போலியர்க்கு

* அநுமானப் பிரமாணம் (Theory of Inference)

அதனை விளக்கிக் காட்டுதல் எளிய தொன்ருமோ? ஆயினும் இறை யுணர்ச்சிக்கும், அதன் வழி பாட்டிற்கும் துணையா மோர் அளவிலே அதன் இலக்கணத்தை நாம் அறிதல் நமது கடமை யாகும். ஆகையால், அவ்வளவின் அதன் இயல்பை விளக்கிக் காட்டுவாம்.

இறை யென்னும் சொல்லில், இறு - முதனிலை, ஐ - இறுதி நிலை, உகரங் கெட்டது சந்தி. இங்ஙனமாகிய இச் சொற்குத் தங்குதல், அல்லது இருத்தல் என்பது பொருள்; எங்கும் நிறைந்து தங்கும் பற்றற்ற பரம்பொருள் என்பது அதன் நுண் பொருளாகும். அதுதான், தனக் கொரு முதலற்றுத் தாளுய் விளங்கித் தனித் தலைமை நடாத்தும் ஒரு செம்பொருளாம்.

"சார்பிறைற் றேன்ருது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்"

என வருமிச் செய்யுளால் அப்பொருளின் உண்மையை உணர்க.

மேற்கூறிய இலக்கணங்கள், ஒருவகையான் அவ் விறையை நமக்குச் செவ்விதின் விளக்கிக் காட்டின. ஆயினும் இவற்ருன் நாம் அவ்விறையை இஃதென்று தெற்றென உணர்ந்தோம் என்று சொல்லுதற்கில்லை. உணர்ச்சிக்கு அப்பாற்பட்டு விளங்காநின்ற அப்பொருளை மக்கள் யாங்ஙனம் உணர்தல் கூடும்? கல்விப் பெருக்கத் தால் ஒருவர் எத்துணை நுணுகி, நுணுகி, ஆராயினும் அது புலப்படக் கூடிய தன்று. அத்தகைய ஆராய்ச்சியில் மக்கள் பன்னெடுங் காலமெல்லாம் தலைப்படினும் அவர்தம் உழைப்பு, பயனற்றுக் கழியு மென்பதில் எட்டுணையும் ஐயப்பா டின்று. இத்தகைய ஆராய்ச்சியாளர்க்கு அது முடிவில் பாழ்த்த பெருஞ் சூனியமாய்த் தன்னைக் காட்டா நிற்கும். இவ்வுண்மையைக் கம்பநாட்டாழ்வார்,

"பேரா யிரங்க ளுடையாய் பிறந்த
பொருடோறு நிற்றி பிரியாய்
தீராய் பிரிந்து திரிவாய் திறந்தோ
றவைதேறு மென்று தெளியாய்
கூரா ழியங்கை யுடையாய் திரண்டோ
ருருவாதி *கோட லுரிபோல்
ஆரா யினேது மிலையா தியாரிவ்
†வதிரேக மாயை யறிவார்"

எனப் பெரியதிருவடி வாயின் அமைத்து நமக்கு அறிவுச் சுடர் கொளுத்துகின்றார். இக்கவியின் ஈற்றடியே நாம் ஈண்டு ஆராய்தற் குரியதாகும். கோடல் கிழங்கினை நாம் உரித்து, உரித்துப் பார்க்கின்ற காலத்தில், அதனுள் ஒன்றுங் காணப்படாதது போல், தன்னை ஆராய்வார்க்கு அப் பரம்பொருள் ஒன்றும் இன்றாய் விளங்குவ தாகும். இஃதே அவ்விறையின் பெரு மாயை யாம்.

இவ்வியல்பினைக் கொண்ட அவ்விறையை, ஓரெல்லைக் குட்பட்ட அறிவுப் புலன்களை வாய்ந்த மக்கள், எங்ஙனம் உணர்ந்து வழிபடுதல் கூடும்? இவ்வுலகிடை அவருய்யு மாறு எப்படி? இத்தகைய வினாக்கள், அறிஞர் உள்ளத்தே உதிப்பது மிக்க இயற்கை யாகும். அங்ஙனமே கம்பநாட்டாழ்வாரின் இதயத்து, சில வினாக்கள் தோன்ற, அப்புலவர் பெருமானார் தமது இராமாயணத்தில் உயுத்த காண்டத்தின் கடவுள் வாழ்த்தில்,

"ஒன்றே யென்னி னொன்றேயாம்
பலவென் றுரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னி னன்றேயா
மாமே யென்னி னாமேயாம்

---

* வெண் காந்தட் கிழங்கு: இது வெண்காயம் போன்று உரிக்கத் தோலே வருவதாய் உள்ளீடு அற்றுக் காணப்படும். இக் கிழங்கு மருந்து வகையில் பெரிதும் பயன்படுவதாகும்.

† மிக்க மாயை

இன்றே யென்னி னின்றேயா
மிலதென் றுரைக்கி னிலதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா"

என்று ஏக்குற்றுக் கூறுகின்றார்; ஒன்றாய்ப் பலவாய் உளதாய், இலதாய் விளங்குமப் பரம்பொருளின் குடி வாழ்க்கை, 'நன்றே' யென்று வியக்கின்றார்; இத்தகைய பொருளினை மக்கள் எங்ஙனம் உணர்ந்து உய்வர் என்று பெரிதும் இரங்குகின்றனர்

இதுவரை நாம் இறை இலக்கணத்தை ஒரு வகையில் அறிந்தோம். இனி அவ்விறை வழிபாட்டைக் குறித்துச் சிறிது இயம்புவாம்.

நாகரிகம் சிறக்கப் பெற்ற இக்காலத்தவர், அரசியற் றுறையிலும், எந்திரத் தொழிலிலும், போர் முறைத் தேர்வி லும், வர்த்தக வழியிலும் பகல் இர வென்று பாராமல் உழைக்கும் உழைப்பிற்கு அளவே யில்லை. வாழ்க்கையில் அமைதி யென்பதைச் சிறிதேனும் அறியாதவாராய்ப் பல் வகைத் துறைகளைப் பற்றி யுழன்றிடும் இவர் நிலை யிருந்த வாறென்னே!

இங்ஙனம் இவர்கள் வருந்தி யுழைக்கும் உழைப்பிற்குக் காரணம் யாதென நாம் மெல்லத் துருவிப் பார்ப்பதன் முன்னர், அவர்களையே வினவுவோ மாயின், அவருள் உண்மை யுரைப்போர், "வாழ்க்கையில் துன்பங் கலவாத இன்பம் பெறுவதற்கேயாம்" எனக் கூறு தொழியார். ஆகவே, மக்களின் உழைப்பிற்கெல்லாம் அடிப்படையான காரணம் இன்பமே யாகும் என்பதில் அணுவளவும் ஐயமின்று.

இன்பம் என்ப தொன் றில்லையேல், மக்கள் இவ் உலகிடை வாழ்தற்கு ஒரு நாளும் ஒருப்படார். ஆகவே ஈண்டு மக்களை வாழ்விப்பது இன்பமே யன்றிப் பிறிதொன் றில்லை யென்ப துணர்க. இவ்வின்பத்தைக் காமுறும

இயற்கை, மக்களின் உள்ளத்தே மிக ஆழ்ந்து மன்னிக் கிடப்பதாகும். இஃதே அவரைக் கருமங்களில் ஊக்கி, இவ்வுலகில் பெறுதற்கரிய பதவிகளைப் பெற்றிடப் பெரி தும் தூண்டுகின்றது.

குணமென்னுங் குன்றேறி நிற்கும் பெரியோர்களுக்கும் இவ்வின்பத்தின் பாலுளதாய விருப்பமே, அவர்தம் அரும் பணிக்கு அடிப்படையான காரண மாகும். ஆகையால் இவ்வின்பம் ஒன்றே, இழிந்தோரையும், உயர்ந்தோரையும் ஒரு படித்தாய் ஊக்கி, இவ்வுலகில் அருந் தொழில் ஆற்று விக்கும் எனின், அவ்வின்பத்தின் வல்லமையை என்னென் றியம்புவது !

இழிந்தோரும் உயர்ந்தோரும் ஒரு படித்தாய்க் காமுறும் இவ்வின்பம், நிலைத்த தன்மையதோ வெனின், அதுதான் இல்லை. அவர் பெறும் இன்பம், துன்பம் பெரிதும் கலந்த தாய், நுகர்ந்த பின்னர்க் கைக்கும் இயல்பிற்றாய்க் கழியுந் தன்மையது. மக்கள், இவ்வியல்பு கொண்ட இன்பத்தைப் பெறுவான் வேண்டி உழைக்கும் உழைப்பு எத்துணைப் பெரியது! அவர்தம் உழைப்பின் பயன் எத்துணைச் சிறியது! உண்மையில் நோக்குழி, அவர் பெறும் இன்பம் போலி யின்பமே யொழிய வேறன்று. உண்மையில், இன்பத்தைச் சிறிதேனும் கொள்ளாத துறைகளைப் பற்றி யுழலு மிவர் நிலை, வருந்தற் குரியதே யாம்.

மக்கள் இறை வழிபாட்டால் எய்தும் இன்பமோ, அங்ஙனமின்றித் துன்பங் கலவாது என்றும் நிலைத்துள்ள தன்மைய தாகும். இவ்வின்பத்திற்கு உவமை வேறில்லை. இதனையே அறிஞர் மெய்யின்பம் என்ப, என்னை ? இஃது ஒரு காலத்தே தோன்றி மற்றொரு காலத்தே மறைதலின்றி எக்காலத்தும் உள்ளமையின். இம் மெய்யின்பத்திற்கு அடிப்படையாகிய இறை வழிபாட்டின் இயல்பினைச் சிறிது இயம்புவாம்

மக்கள், அறிவால் இன்பத்தையும், அறிவின்மையால் துன்பத்தையும், அடைவர். அவர்கள், நூற் கல்வியான் எய்திடும் இன்பம், இடை யிடையே துன்பங் கலந்த பெற்றி யதாம். இறை வழிபாட்டால் எய்திடும் இன்பமோ அத் தன்மைய தன்று. அது, துன்பம் சிறிதளவேனும் கலவாத தாய் என்றும் ஒரே படித்தாய் விளங்குவதாகும். இறை வழிபாட்டினை எய்தியவர், தூய்மையான மெய்யறிவு வாய்த்து, அதன் வழியாகத் துன்பங் கலவாத நிலைத்த இன்பத்தைப் பெறுபவராவர். இஃதே இன்பங்கள் யாவற் றினும் விழுமிய தாகும். இவ்வின்பத்தின் வாழ்க்கையே உண்மையில், வாழ்க்கை எனப்படும். ஏனைய இன்பங் களால் மக்கள் எய்திடும் வாழ்க்கை, போலியின் வகையே யன்றிப் பிறிதன்று.

இளமையில் பிணியற்று, ஒரு குடை நிழற் கீழ் இம் மண்ணுலகைப் புரந்திடுவார் வாழ்வோ வெனின், அதுவும் அழியும் மாலைத்தே. தானை சூழ, மண்ணுலகை யாண்டு அழிபவர் நிலையை,

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு—மேனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர் தாங்கொண்ட
மனையாளை மாற்றார் கொள"

என்று நாலடி நானூறு நன்கு விளக்குவது ஓர்க.

இறை வழிபாட்டால் மக்கள் எய்தப் பெறும் துன்பங் கலவாத வாழ்வே, என்றும் நிலைத்த தன்மையதாம். அவ் வாழ்வினைப் பெற்றக்கால், வானும், வையமும் வந்து தாள் வணங்கும். இம்மெய் வாழ்வினைக் கண்ட போது மக்கள், தாம் முன்னர்ப் பொய் வாழ்வில் வீணாய்க் கழித்த நாட்களை நினைந்து, நினைந்து, 'இன்னெடுங் காலம் இவ்வின்பத்தை விட்டு இருந்தோமே' என்று இரங்கா தொழியார். இவ் வுண்மையை,

" தானைசூழ மண்ணுலகை யாண்டழிபவர்
தங்கள்வாழ் வினிதென்றே
நீநினைத்தி யோநெஞ்சமே யெஞ்சுரு
நிமலஞா னமதுற்றால்
வானும்வையமும் வந்துதாள் வணங்குமெய்
வாழ்வுகாண் டலும்வீண்முற்
போனநாட் கிரங்கவும் வருமெனநலோர்
புகன்றதோர்ந் திலைகாணே

என்று சாந்தலிங்க சுவாமிகள் அருளிச் செய்த வைராக்கிய சதகம், பெரு முழக்கம் செய்கின்றது.

ஆகையால் மக்கள் மெய்யின்பத்தைப் பெற்று, அமைதி யுற்ற உண்மை வாழ்வினை வாழ விரும்புவரேல், இறை வழி பாட்டில் ஈடுபடல் வேண்டும். இறையை வணங்கும் முறையை விளக்குவதன் முன்னர், இறை வழிபாட்டின் நெறி, இவ்வுலகில் எவ்விதம் அமைந்துள்ள தென்பதைப் பற்றிச் சிறிது இயம்புவாம்.

இவ்வுலகில் கடவுட் கொள்கை, யாண்டும் பரந் துள்ளது. உயர்ந்த நாகரிகம் வாய்ந்த மக்களிடையும், அஃதில்லாதார் மாட்டும், இக்கொள்கை உள்ளூற வமைந் துள்ளது என்னலாம். ஆகவே இந்நில வுலகின் பரப்பில் யாண்டேனும் இறை யுணர்ச்சி யற்றமக்கட் டொகுதி யுண் டென்று காட்டுதல் அரிதே யாம். இவ்வுண்மை யொன்றே, 'கடவுள் என்ப தொன்றில்லை' என்று நாத்திகம் பேசுவார்க் குக் கடவுளின் இருப்பை மெய்ப்பிப்பதாகும், எங்ஙனமோ வெனின், கடவுள், இல்லாத பொருளாயின், இவ்வுலகி லுள்ள மக்கள் ஒரு சேர அவ்வுணர்ச்சி பெற்றவராய் இருத்தல், அரிது ஆகலான்.

யாண்டும் மக்களுள்ளத்து இறை யுணர்ச்சி எழுவதற் குக் காரணம் யாதோ வெனின், இவ்வுலகின் கண் அமைந் துள்ள இயற்கைப் பொருள்களே யாகும்.

எவனது ஆணையால் கட்டுண்டு, கடல் தனது எல்லை யாகிய கரையை மீருமல் நிற்கின்றது? அது மீறுமாயின், நமது கதி யாதாகும்? எவனது ஏவலுக் கடங்கி ஆதித்தன் கீழ்த்திசையில் நாடோறும் தோன்றி உலகை மகிழ்விக் கின்ருன்? அவன் ஒருநாள் விடுமுறை பெறுவனேல், நம் கதி யாதாம்? எவனது பணிக்கு உட்பட்டு வாயு பகவன் தனது தொழிலைக் குறைவற இயற்றுகின்ருன். இவன் சிறிது முனிவனேல், இவ்வுலகம் எப்பாடு படும்? எனும் வினுக்கள் நாம் நீள நினைந்திடற் குரியனவாம். இங்ஙனமே எல்லாப் பூதங்களும் ஓ வறத் தம் பணி யாற்றுவதைக் கொண்டு, இவ்வுலகம், ஒரு முதலை யுடைத்து என்பது அறியப்படுகின்ற தன்ருே? இவ்விதம் மக்கள் இயற்கைப் பொருள்களைச் சிறிது ஆய்கின்ற அளவிலே இறை யுணர்ச்சி அவர்தம் உள்ளத்து உதித்திடுவ தாகும்.

கடவுள் இல்லை யென்பாரைப் பற்றி நாம் அதிகமாகக கூற வேண்டுவ தில்லை. ஒரு சொல் பகர்ந்து முடிக்குதும். இல்லாத பொருளுக்கு உலகில், பெயர் இல்லாதிருக்க வேண்டும். கடவுள் என்ற பெயர் உண்மை யாலும், அப்பெயர் யாண்டும் பெரு வழக்காய் வழங்கப்படுவ தாலும், அவர்தம் கூற்று வெற்றுரை யென்று ஒதுக்குக.

இனி, மக்கள், ஏன் இறைவழி பாட்டை மேற்கொள்ளு கின்றனர் எனும் கேள்வி பிறக்கலாம். அது நேரிதே யாகும். பல் வகைப்பட்ட உலகங்களையும், பல் வேறு வகை யினவாம் உயிர்களையும் படைக்க வல்ல இறைவன் திறம் எத்தகையதாய் இருக்கும் எனும் வியப்பு, மக்களுள் ளத்தே இயற்கையாகத் தோன்றும். அவ்வியப்பே அவர்கள் அவ்விறைவனை வழிபடுதற்குக் காரணமாய் அமைகின்றது. இலக்கணமும் இலக்கியமும் நிலைகண் டுணர்ந்து, இறையஞர் அவதாரமே என்று கூறுதற் குரிய பேரறிவும் பேராற்றலும் வாய்ந்த, ஒரு பெரும் புலவர் நம்முடைய காலத்தில் இருப்பராயின், மக்கள் அவரைக்

கண்டு வணங்குதற்குப் பேராவலுடன் விரைந்து செல்வர். அங்ஙனம் அவர் செல்வது மிக்க இயற்கையே யாம்; ஆயின் எவராலும் அமைக்க முடியாத எண்ணிறந்த உயிர்களையும், உலகங்களையும் கருணையால் நமக்கு அமைத்துத் தந்த அவ்விறைவனை மக்கள் கண்டு வணங்கிட எத்துணை அவா வுடையராவர் என்பது சொல்லவும் வேண்டுமோ ?

இங்ஙனம், இறைவன்தன் பேராற்றலைக் கண்டு வியந்திடும் மக்கள், அவனை வழிபடும் நோக்கங்கள் பலப் பல வகையில் அமைந்துள்ளமை, நாம் ஈண்டு ஆய்தற் குரிய தாகும்.

இவ்வுலகிடை யாவரும் போற்றுமாறு பெருஞ் செல்வ மெய்தி வாழ்க்கையில் இன்பந் ததும்ப வாழ்ந்திட வேண்டும் என்னுங் கருத்துப் பற்றி, இறைவனை வழிபடு வார் சிலர். 'கடவுள், தனக்கொரு முதலற்றுப் பேரறிவும், பேராற்றலும் வாய்ந்தவர் ; அவரை வணங்கா தொழியின், அவர் நம்மை நரகிடை உய்த்து நலிவுறச் செய்வர்' என்று அஞ்சி, அவனை வழிபட்டு நிற்பர் மற்றுஞ் சிலர். இன்னுஞ் சிலர், "நீதி யாவையும் நினைந்திலேம்; அங்ஙனம் நினைப் பவர் தம்மொடும் கூடிலேம்; தீமையே நாடொறும் புரிந்து திரிதரும் எம்மையும் ஆண்டு கொண்ட அவனருள் இருந்தா வேறென்னே" என்று இறைவன் மீது அன்பு மீக் கூர்ந்து வணங்குவர் சிலர்.

யாம் வகுத்துக் கூறிய மூவருள், சுய நலங் கருதி இறைவனை வழிபடுவோரும், நரகத்தின் அச்சத்தை ஓர்ந்து வணங்குபவரும், தாழ்ந்தவரே யாவர். அவர், இறைவன் மாட்டு உண்மை அன்பில்லாதவ ரென்றே கருதப்படுவர். இவர் நிலை, உயர்ந்ததென்று கருதப்பட மாட்டாது. இறுதி யாகக் கூறப்பட்டவர், அன்பினால் இறைவனை வணங்கும் உயர்ந்த நிலையினராவர். இவர்களே இறைவன்தன் உண்மையைச் செவ்விதின் உணர்ந்தவ ரென்று எண்ணப் படுவர். ஆகையால், சுய நலத்தைக் கருதியோ, இறைவழி

பாட்டைச் செய்யா தொழியின் பெருந் தீங்கு நேருமென் றுன்னியோ, இறைவனை வணங்குபவர், இறை வழிப்பாட்டின் உண்மை நெறி யுணர்ந்தவ ராகார். இவர்கள் உண்மையில் இறைவனை வழிபடுபவரு மல்லர். குறிக் கோளின்றி, அன்பினைச் செலுத்தும் பெரியோர்களே, இறை வழிபாட்டினை, உண்மையில் உணர்ந்தவ ராவர். இம்மெய்யன்புடையார் தம் இறை வழிபாட்டின் திறத்தை மணிவாசகப் பெருந்தகையார், வியந்தவராய், தமது நெஞ்சினை இடித்துக் கூறும் வகையில்,

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே"

என்று செவ்விதின் விளக்கிக் காட்டுகின்றனர். இத்தகைய மெய்ப்பாடுகளை, நாம் ஒருவர் மாட்டுக் காண்போமாயின் அவர்களே, இறை வழிபாட்டின் இயல்பினை உணர்ந்த உத்தமப் பெரியோர்கள் என்று அறிதல் வேண்டும்.

ஒரு நாடு, வளமை பெற்றுச் செழித்தோங்கிடப் பல வகைக் காரணங்கள் உளவேனும், அக்காரணங்கள் யாவற்றிலும் தலை சிறந்தது, இறைவழி பாடாகும். இறை வழிபாடில்லாத நாடு, சீரும் சிறப்புங் குன்றித் தாழ்ந்திடும் என்பதில் சிறிதேனும் ஐயப்பாடில்லை. இவ்வுண்மையைக் கருதியே போலும்,

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா" வென்று உலகநீதியும் பணிக்கின்றது. கோயில்களை இடித் தொழித்த நாடுகளும், உலக இன்பத்துள் மூழ்கித் தெய்வத்தை

அறவே மறந்து வாழ்ந்த நகரங்களும் இன்று எப்பாடு படுகின்றன வென்பது நமக்குக் கண்கூடாய் இராநின்றது.

இங்ஙனம், மக்கள் கடவுட் கொள்கை யின்றி, இறை வழிபாட்டைக் கைவிடுதற்குக் காரணம், அவர்கள் மரணம் என்பதை அறவே மறந்து, இன்பத்துள் ஆழ்தலே யாகும். அன்னோர் மரணத்தை மறந்திடாப் பெற்றியைப் பெறுவ ராயின், இறை வழிபாட்டில் தலைப்பட முந்துவர் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. மக்கள், இறைவனை மறந்து வாழ்தலுக்குக் காரணம், அவர்கள், தமது மரணத்தை நினையாமையே யாகும் எனுங் கருத்தினை,

"இறந்தொழிந் ததுவெங் கூற்ற
மென்றுளத் துணர்ந்தார் போலு
மறந்தலை மணந்த செங்கோ
லவர்பா ரேழுங் காப்ப
நறுந்துழாய்க் கொண்ட றாது
நடந்ததாட் கமலப் போது
மறந்தனர் மாக்கள் வாளா
வறுபகல் கழிக்கின் றாரே"

எனவரும் பாகவத புராணச் செய்யுள், வலியுறுத்து கின்றது. ஆகையால் மக்கள், மரணத்தை நினைந்து, இறை யுணர்ச்சி பெற்றவராய், மெய்யன்பு பூண்டு, இறை வழிபாட்டில் தமது வாழக்கையை இணைத்து, அந்தமில் இன்பத்து அழிவில் பதத்தை எய்திட முந்துவராக.

PRINTED AT THE RADHA PRINTING AND PUBLISHING HOUSE, MADRAS.

MADURA TAMIL SANGAM